www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR
சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

நாணமின்றி நரி வேட்டை ஆடிடுமோ?
தாண்டிக் குளத்தருகே தடக்கி வீழுந்ததென்று
சீண்டாதே எங்கள் சிங்கத்தை – மாண்டாலும்
நரிவேட்டை ஆடிடுமோ நாணமின்றிச் சிங்கம்
புலிவேட்டை ஆடுதற்குப் போய்?
– ஈழமோகம்

இதழ் 124 ஜூன்.19- ஜூலை.02.1997 விலை 10.00

# அழிப்பு யுத்தமும், அழியும் தேசமும்!



# மட்டக்களப்பு : தீராத தொல்லை!

# 'PRRA';அம்பலத்தில் கொலைக்குழு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே"*

-பாரதி

**ஆசிரியர் குழு**

பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**
ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**
ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**
நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**
இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை யாவும்
MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

## திருத்தம்

சரிநிகர் இதழ் 122இல் பக்கம் 9இல் முறிந்த பனை நூலிலிருந்து எடுக்கப்பட்ட, "பழிவாங்கும் படை" என்ற தலைப்பில் வெளியான பகுதியில் "சண்டிலிப்பாய்-பண்டத்தரிப்பு வீதியில் வைத்து இந்திய அமைதிப்படை வீரர்கள் நால்வரை டிசம்பர் முதல் வாரத்தில் விடுதலைப் புலிகள் கொன்றனர். இராணுவ வீரர்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு விவசாயியை சுட்டுக் காயப்படுத்தினார்கள் என்று வர வேண்டியதில் மேலே அடிக்கோடிடப்பட்ட பகுதிகள் தவறுதலாக விடுபட்டுவிட்டன. வாசகர்கள் இவற்றையும் சேர்த்து வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

இது தவிர இந்நூலில் உள்ள Rape என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பாலியல் வன்முறை என்ற பதமே பாவிக்கப்பட்டிருந்தது. இதனை நாம் பாலியல் வல்லுறவு என மாற்றியுள்ளோம். Rapeக்கு அதிகளவு பொருத்தமான சொல் பாலியல் வல்லுறவு என்பதால் அதனையே நாம் பயன்படுத்தி வருகிறோம். பாலியல் வன்முறை என்பது Sexual Violenceஐக் குறிக்கவே பயன்படும் என்பது எமது அபிப்பிராயம்.

## திருத்தம்

இதழ் 123இல் நடுப்பக்கத்தில் வெளியான அட்டவணையில் "புளொட் இயக்கத்தைச் சேர்ந்த குயிலன்" என்றிருப்பது "புளொட் இயக்கத்திலிருந்து விலகிய மோகன் குறாப்பைச் சேர்ந்த, குயிலன்" என்று இருந்திருக்க வேண்டும். வாசகர்கள் அத்தவறினையும் திருத்திக்கொள்ளவும். இத்தவறுகளினால் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

-ஆ-ர்

# யாழ்: சாராயக் கடைகள்

பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள யாழ்ப்பாண மாநகர எல்லையினுள் நான்கு மதுபான விற்பனை நிலையங்கள் (Wine Stores) கடந்த சில தினங்களுக்குள் திறக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரத்தினுள் இன்னும் 12 மதுபான விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளதுடன், அவை இப்போது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் மதுவரித் திணைக்கள ஆணையாளர் பந்துல விஜேரத்ன தெரிவித்தார்.

''ரிவிரச'' இராணுவ நடவடிக்கையினால், யாழ்ப்பாணக் குடாநாடு ஸ்ரீலங்கா இராணுவத்தால் மீட்கப்பட முன்பு அங்கு நிலவிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க நிர்வாகத்தின் கீழ் மதுபான விற்பனை நிலையங்கள் முழுமையாகத் தடை செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். அதன்படி இப்போது யாழ்ப்பாண நகர எல்லையினுள் மதுபானசாலைகள் 17 வருடங்களுக்குப் பின்பே திறக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் பனங் கள்ளில் இருந்து தயாரிக்கப்படும் பனஞ் சாராயத்தை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பிரபல்யப்படுத்துவதற்காகப் பனை அபிவிருத்திச் சபை விஷேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

# புலிகளுக்கு குர்திஷ்களின் ஏவுகணைகள்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் குர்திஷ் கெரில்லாக்களிடம் ஏவுகணைகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக உளவுப்பிரிவுகளிற்குத் தகவல் கசிந்துள்ளது.

பீ.கே.கே. என்ற பெயரால் அறியப்படும் குர்திஷ் கெரில்லாக்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே ஒப்பந்தமொன்று உள்ளதாகச் சர்வதேச பொலிஸ் இந்நாட்டு அதிகாரிகளிடம் அறிவித்துள்ளதாக உயர் மட்டப் பாதுகாப்புத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்போது குர்திஷ் கெரில்லாக்களிடம் நூற்றுக்கும் அதிகமான ஏவுகணைகள் உள்ளதாகத் துருக்கி நாட்டு பொலிசார் இன்ரபோல் (சர்வதேசப்) பொலிசுக்குத் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் இலண்டன் சர்வதேச அலுவலகத்துக்கும், குர்திஷ் இயக்கத்தின் 'எல்க்நூறிக்' குமிடையே ஒப்பந்தமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளிவந்துள்ளது. நாம் இப்போது இவ் ஏவுகணைகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் பற்றி மிகுந்த அவதானத்துடன் இருப்பதாக அத் தகவல் வட்டாரங்கள் கூறின.

இதற்கு முன்பு புலிகள் ஆப்கானிஸ்தானின் முஜாஹிதீன் கெரில்லாக்களிடமிருந்து ஏவுகணைகளைப் பெற்றுக்கொண்டனர்.

புலிகள் இயக்கத்தினருக்கு, இலங்கை விமானப்படையின் ''குறொக்கடைல்'' விமானங்களால் பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால், இவ்வாறு மீண்டும் ஏவுகணைகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனத்தெரியவருகிறது.

இப்போது ஏவுகணை எதிர்ப்பு வலையமைவொன்று தமது விமானங்களில் செயற்படுத்தப்படுவதால் ஏவுகணை அச்சுறுத்தல்கள் பற்றி நாம் பயப்படவில்லை என சிரேஷ்ட விமானப்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

# நெடுந்தீவில் கொலை!

நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத்தின் காவலாளியான க. ஆறுமுகம் (48) என்பவர் அடித்தும், வெட்டியும் படுகொலைசெய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, ஆறுமுகம் என்பவர் நெடுந்தீவு ப.நோ.கூ சங்கத்திற்கு சொந்தமான மாவலித்துறையில் இருந்த படகிற்கு காவலாளியாக சடையம்மான் என்பவருடன் சேர்ந்து கடமையில் ஈடுபட்டிருந்தார்.

சம்பவம் நடந்த தினத்தன்று அங்கு வந்த நான்கு அல்லது ஐந்துபேர் கொண்ட கோஷ்டியொன்று இப்படகை அவிழ்த்துச் செல்வதற்கு முயன்றுள்ளது. இதனை எதிர்த்த ஆறுமுகத்தை அடித்தும், வெட்டியும் காயப்படுத்திவிட்டு மற்றக் காவலாளியான சடையம்மானை கட்டிப்போட்டுவிட்டு படகை இக் கோஷ்டியினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

காயத்துக்குள்ளான ஆறுமுகம் ஸ்தலத்திலேயே மரணமான நிலையில் காணப்பட்டார் என்றும் இக்கோஷ்டியினர் அங்கு இயங்கி வரும் ஈ.பி.டி.பி இயக்கத்தினைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இது தொடர்பான எத்தகைய முறைப்பாடுகளும் இதுவரை யாராலும் செய்யப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கும் இவ்வியக்கம் குறித்த அச்சமே காரணம் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

தேசிய காணி, விவசாய சீரமைப்பு இயக்கத்தினரால், (Monlar) எப்பாவல பொசுபேற் சுரங்கத் தொழில் விடயமாக அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 11.06.1997, 12.06.1997 ஆகிய இரு தினங்களும் அனுராதபுரத்தில் சில அனுஷ்டானமும், சத்தியாக்கிரக நடவடிக்கையொன்றும் மேற்கொள்ளப்பட்டுளளது.

எப்பாவல பொசுபேற் சுரங்கத்தை பல்தேசிய நிறுவனங்களுக்கு விற்க எடுக்கப்பட்டுள்ள முடிவை மாற்றுமாறு அரசைக் கோரியும், அரசின் இந்நடவடிக்கையை எதிர்த்துமே இச்சில் அனுஷ்டானமும், சத்தியாக்கிரக நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

# லோரன்சுடன் பேச்சு!

அரசுக்குச் சொந்தமான நிறுவனமொன்றின் தலைவரொருவர் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கச் சர்வதேசப் பேச்சாளர் லோறன்ஸ் திலகரைச் சந்திப்பதற்காக இரகசியமாகப் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றிருப்பதாக அரசுடன் தொடர்புடைய தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நபர் 08.06.1997 அன்று லண்டனை நோக்கிச் சென்றுள்ளதுடன், அங்கிருந்து பிரான்சுக்கு செல்ல உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அத்தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நிறுவனத்தின் தலைவர் ஜனாதிபதியின் இராஜதந்திர நடவடிக்கைகளில் மிகவும் நெருக்கமாகச் செயல்பட்டாலும், இத் தூது நடவடிக்கை பற்றி ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் லோறன்ஸ் திலகருடன் இவ் அரச அதிகாரி என்ன விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளார் என்பது பற்றி அரசின் மட்டத்தில் கடுஞ் சந்தேகம் நிலவுவதாகத் தெரியவருகிறது.

லோறன்ஸ் திலகருடன் அரச தூதராகப் பேச்சுவார்த்தை நடத்த அவருக்கு எதுவித முன்னறிவித்தலோ, அனுமதியோ வழங்கப்படாமையினால் இந்நபர் இலங்கைக்குத் திரும்பி வந்தவுடன் கடும் நடவடிக்கை எடுக்க முடிவெடுத்திருப்பதாகவும் அத் தகவல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நபர் இதனைத் தமது தனிப்பட்ட பிரயாணமாக ஆக்கிக்கொண்டிருக்கிறார் என அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அந்நபருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே இரகசிய தொடர்பொன்று இருப்பதாகச் சிற்சில தகவல்கள் இப்போதே அரசிடம் கிடைத்திருப்பதால், அது பற்றியும் விரிவான விசாரணையொன்றை ' நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

# ஐ.தே.க.வுக்கு அரசாங்கம் உதவி!

பிரேமதாச கேந்திரத்தினூடாகப் புதிய அரசியல் கட்சியொன்றை அமைக்க ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் சிறிசேன குறே நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அவர் இதற்காக இப்போதே உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள ஆரம்பித்துள்ளார். பிரேமதாச கேந்திரம் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வருவது ஐ.தே.கட்சியினுள் கடும் சிக்கலொன்று எழக்காரணமாகியுள்ளது.

29.06.1997 அன்று சுகதாச உள்ளக விளையாட்டரங்கில் நடத்தப்படவுள்ள பிரேமதாச நினைவுக் கூட்டத்தில் கலந்து கொள்ளாதிருக்க ஐ.தே.க. தலைமை முடிவெடுத்துள்ளமைக்கு அடிப்படைக் காரணம் பிரேமதாச கேந்திரம் அதற்கு உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள ஆரம்பித்ததேயாகும் என்று தெரியவருகிறது.

இம்முறை ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்திலும், நிறைவேற்றுக் குழுக்கூட்டத்திலும் இப்பிரச்சினை மிகவும் சூடான வடிவத்தில் விவதத்துக்குள்ளாகியுள்ளது. சிறிசேன குறேயை மீண்டும் கட்சியில் சேர்த்துக்கொள்ளாததே இவ்வாறான சிக்கலொன்று எழக் காரணம் என்று குறேக்கு நெருக்கமான ஐ.தே.கட்சி வட்டாரங்கள் கருதுகின்றன.

இச்சிக்கல் காரணமாக ஐ.தே.க நிறைவேற்றுக்குழு இரண்டு முடிவுகளுக்கு வந்துள்ளது. அதன்படி ஐ.தே.கட்சியின் பிற அமைப்புகளும், அதிகாரிகளும் கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதைவிட வேறு அமைப்புகளுக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோல் கட்சிப் பொது.ச் செயலாளரின் முன் அனுமதியின்றி வேறு நடவடிக்கைகளில் ஈடுபடவும் முடியாது.

மேற்கூறப்பட்ட முடிவுகள் இரண்டும் ஐ.தே.க. பிரேமதாச கேந்திரத்துக்கு உறுப்பினர்களைச்சேர்த்துக் கொள்வதையும் அதன் செயல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் தடுக்கவே எடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் 29.06 1997 அன்று சுகதாச உள்ளக விளையாட்டரங்கைப் பிரேமதாச நினைவுக் கூட்டத்துக்கு வருபவர்களால் நிரப்பவே குறே எதிர்பார்க்கிறார்.

ஆரம்பம் முதலே பிரேமதாச கேந்திரத்தினால் நெறிப்படுத்தப்படும் பிரேமதாச நினைவுக்கூட்டமானது, ஐ.தே.கவின் இப்போதைய தலைமையுடன் நடக்கும் பனிப்போராக மாறியுள்ளது.

ஐ.தே.கவினுள் தமது தலைமையை அடிமனதால் விரும்பாத பிரிவினர் பிரேமதாச கேந்திரத்தைச் சுற்றி ஒன்று சேர்வரா? என்பது எதிர்க் கட்சித் தலைவருக்கும் பிரச்சினையாகியுள்ளது.

கட்சியை சுத்தம் செய்யும் ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியில் வெட்டுப்படக் கூடிய அநேகர் இபோதே பிரேமதாச கேந்திரத்துடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளும் இரகசிய இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதே சமயம் மூன்று மாதங்களினுள் பிரேமதாச கேந்திரத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை பத்து இலட்சம் வரை வளர்ப்பது குறேயின் எதிர்பார்ப்பு ஆகும்.

எவ்வாறாயினும் பிரேமதாச நினைவுக்கூட்டம் எதிர்பார்த்தது போல் குறே அவர்களினால், நடாத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் இப்போது இல்லாமல் ஆகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவரை அவசர கால சட்ட விதிகளின் கீழ் கைது செய்து மூன்று மாத வீட்டுத் தடுப்புக்காவலில் வைக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டதைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளதால், இக்கூட்டத்தை நடத்துவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய் உள்ளது. குறேயின் சட்டத்தரணிகள் அவரை ஆட்கொணர்வு மனுவொன்றின் மூலம் வெளியே கொண்டு வர முயல்கின்றனர். இது வெற்றியளிக்காத பட்சத்தில் கூட்டம் எப்படி நடக்கும் என்பது கேள்விக்குறியாவே உள்ளது. ஐ.தே.கவுக்கு இந்தவிடயத்தில் அரசாங்கம் பெரியதொரு உதவியை செய்துள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# திம்பு நோக்கிய திரும்பல்!

அருண்

‘திம்புவில் முன்மொழியப்பட்ட நான்கு கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து இலங்கை அரசுடன் பேசுவதே, நியாயமான உரிமைகளை தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள அவசியமானது’ என்ற முடிவுக்கு அண்மையில் சில தமிழ் கட்சிகள் வந்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த அடிப்படைகள் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கோரிக்கைகளை இரத்தினச் சுருக்கமாக வெளிப்படுத்தும் அடிப்படைகள் என்பதால், இவற்றை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தை நடாத்தப்படும் பட்சத்திலேயே சமாதான நிலைமைகளை உருவாக்குதல் சாத்தியம் என்ற அடிப்படையிலான கட்டுரைகள் ஆரம்பத்திலிருந்தே சரிநிகரிலும் வெளிவந்திருந்தன. ஆயினும், அப்போதெல்லாம் யாரும் இதுப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

அண்மையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்கள் இது தொடர்பான ஒரு கட்டுரையை பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றார். கொழும்பு வாழ் தமிழர் பணிக்குழு ஏற்பாடு செய்த கூட்டம் ஒன்றின்போதும் இக்கருத்துக்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வளவு காலத்திற்குப் பிறகு அதாவது, திம்புப் பேச்சுவார்த்தை தோல்வியுற்ற 12 ஆண்டுகட்குப் பிறகு இந்த நாலு கோரிக்கைகள் தொடர்பான பேச்சு அடிப்படத் தொடங்கியிருக்கிறது. இதற்கான காரணம் என்ன?

இலங்கை அரசாங்கம் தயாரித்து வழங்கவிருக்கும் தீர்வுப்பொதி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக தமிழ் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை தீர்க்கும் ஒரு தீர்வாக இருக்கப்போவதில்லை என்பது இப்போது வெளிப்படையாகிவிட்டது. ஏற்கெனவே உள்ள மாகாண சபையும் சாத்தியமில்லை. எனவே முதலிலிருந்தே தொடங்குவோம் என்று இவர்கள் நினைப்பது இதற்கான காரணமாக இருக்கலாம். இந்த முயற்சிக்கு இன்னுமொரு காரணம் இருக்கலாம் என்றும், ஒரு சில சந்தேகங்கள் கிளப்பப்படுகின்றன. இச்சந்தேகத்தை கிளப்புபவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்: 1985இலேயே இந்தக்கோரிக்கைகளை ஏற்க முடியாது என்று கூறி அப்பேச்சுவார்த்தையை இலங்கை அரசாங்கம் முறித்துக்கொண்டது. ஈழத்தை தவிர வேறு வழியில்லை என்று நின்ற விடுதலை அமைப்புகட்கும், அரசாங்கத்துக்கும் இடையில் பேசப்படுவதற்கு வசதியாக வைக்கப்பட்ட அடிப்படையாகவே இது இருந்தது. இது சரி வராமல் போகவே, 1987ல் இதைவிட குறைந்த ஒரு தீர்வான இலங்கை இந்திய ஒப்பந்த அடிப்படையிலான 13வது திருத்தச்சட்ட மாகாண சபை ஏற்பாட்டிற்கு புலிகளைத் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் ஒப்புக்கொண்டன. இப்போது அது பூரணமாக அமுல்படுத்தப்படவில்லை. அதில் சில மாற்றங்கள் செய்து அதை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று கோரும் கோரிக்கையை ஈ.பி.டி.பி முன்வைத்திருக்கிறது. இன்று அரசியல் நீரோட்டத்தில் கலந்துள்ள கட்சிகள் இந்த நிலைப்பாட்டிலிருந்து பின்னோக்கிப்போய் திம்பு அடிப்படைகளைக்கைக்கொள்வது என்ற நிலைப்பாட்டை எடுத்தால், அது இன்றைய சமாதான முயற்சிகளை குழப்புவதாக, அரசாங்கத்தின் தீர்வுப்பொதி தொடர்பான பேச்சுக்களுக்கான வாய்ப்பை நிராகரிப்பதாகவே அமையும். தவிரவும், இவ்வாறு செய்வது புலிகளுடன் அரசாங்கம் பேச வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டை வலியுறுத்தவும், ஒருவிதத்தில் வேறுவிதமான சமாதான முயற்சிகளில் ஈடுபடுபவரை ஓரங்கட்டவுமே பயன்படும்.

இந்தக்கருத்துக்களின் சரிபிழைகள் ஒரு புறம் இருக்க, இன்னொரு முக்கியமான விடயமும் தெரிவிக்கப்படுகிறது.

‘புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் ஈழத்துக்கு மாற்றாக ஒரு தீர்வை முன்வைத்தால் தாம் பரிசீலிக்கத் தயார் என்று தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை இவ்வாறான ஒரு நிலைப்பாடு அவர்களைப் பேச்சுவார்த்தையை நோக்கிக் கவரக் கூடும். ஆனால், பிற தமிழ்க் கட்சிகள் இவ்வாறான ஒரு கோட்பாட்டு வடிவிலான அடிப்படையை வைப்பதில் அர்த்தமில்லை. ஏனென்றால், ஏற்கெனவே அவர்கள் ஈழத்துக்கு மாற்றாக மாகாண சபையை ஏற்றவர்கள். இப்போது அவர்கள் ஏதாவது மாற்று தேவையென்றால், அதைக் கோட்பாட்டு வடிவிலான கோரிக்கைகளாக வைப்பதற்குப் பதில் ஸ்தூலமான வடிவில் வைக்க வேண்டும். தீர்வு தரக்கூடிய ஒரு சட்ட அமைப்பு வடிவில் அதை தெரிவிக்க வேண்டும். அப்போது தான் அதன் சாத்தியப்பாடு தெளிவாகும். மாகாண சபைக்கும், ஈழத்துக்கும் இடைப்பட்ட ஜனாதிபதியின் தீர்வுப்பொதியை விட சிறப்பான அந்தத் திம்பு அடிப்படைகளை வழங்கக்கூடிய ஒரு தீர்வுக்கான வடிவம் என்ன? வெறும் கோட்பாட்டு அடிப்படைகளை கூறுவதற்குப் பதில் இப்படி ஸ்தூலமாக அதை தெரிவிப்பதே பயனமிக்க விளைவைத்தரும் என்பதே அந்த முக்கிய விடயமாகும்.

கோட்பாட்டு ரீதியில் திம்புக் கோரிக்கைகள் இன்னமும் காலாவதியாகி விடவில்லை. அவை தேவையானவையாகவும், அவசிமானவையாகவும், இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அடிப்படைகளை கொண்டவையாகவும் உள்ளன. இந்தக் கோட்பாடுகளை அங்கீகரிக்கின்ற, தனிநாட்டுக்குப் பதிலான சுயாதிபத்தியம் கொண்ட ஒரு அரசியல் அமைப்பு வடிவம் எப்படி அமையமுடியும்? அதன் அம்சங்கள் எவை? அரசாங்கம் முன்வைக்கும் மாற்றுத்திட்டத்தினைக் கேட்டுக் கொண்டு தமக்கென ஒரு திட்டமும் இல்லாதிருக்கும் தமிழ்க் கட்சிகள், இவ்வாறு ஒரு மாற்றுத்திட்டத்தைத் தாமே தயாரிப்பதில் இதுவரை காலம் முயற்சி எடுக்காவிட்டாலும்

→6

# வாழைச்சேனை வருமானம்!

புலிகள் இயக்கத்தினர் மீண்டும் ஆரம்பித்துள்ள கப்ப நடவடிக்கையில் தற்போது வாழைச்சேனை ஓட்டமாவடி பிரதேச அப்பாவி முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 9ம்திகதி திங்கட்கிழமை விறகு, மரம்வெட்டச் சென்றவர்களின் வண்டில்களும், துவிச்சக்கர வண்டிகளும் பறிமுதல் செயயப்பட்டுள்ளன.

இவர்களின் அன்றாடப் பிழைப்பு காட்டுக்குச்சென்று விறகு வெட்டிப் பிழைப்பதாகும். இவர்களிடம் நாளாந்த வருமானத்தைத் தவிர வேறு பெரிய வருமானங்கள் இல்லை. இவர்களின் ஒவ்வொரு வண்டிலுக்கும் பகரமாக பதினைந்தாயிரம் ரூபா கப்பமாகக் கேட்கப்பட்டுள்ளது. இதில் பத்துப்பேரளவில் அங்கு மிங்குமென பணத்தைச் சேர்த்துக் கொண்டு சென்றுள்ளார்கள் என அறியமுடிகிறது. துவிச்சக்கரவண்டிகளின் நிலை அதோ கதிதான் எனப்படுகிறது.

இதற்கு முன்னர் ஊருக்குள் வந்து மூன்று மோட்டார் சைக்கிள்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். பெண்களை தகாத வார்த்தைகளால் பேசி, பலவந்தித்து எடுத்துச் சென்றுள்ள இவற்றையும் மீளப் பெற முடியாத பட்டியலில் சேர்த்துள்ளனர் ஊரார்.

இதைவிட, கடந்த ஏழாம்திகதி வாழைச்சேனை பிரதான வீதியிலுள்ள நான்கு புடவைக்கடைகள் கொள்ளையிடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இது அப்பிரதேசத்து மக்களை அச்சத்திற்கும் எச்சரிக்கையுணர்விற்கும் தள்ளியுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் புலிகளின் தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைத் தொடர்களில் ஒன்றென்றும், அது அவர்களால் காலத்துக் காலம் நடைமுறைப்படுத்தப்படுமென்றுமே எண்ணத்தோன்றுகிறது.

# திருமலை: ஏமாற்று முகவர்கள் !

உள்ளூர் வேலைவாய்ப்பு முகவர்களான அரசியல் அடிவருடிகள் சிலர் தம்மை அறிமுகப்படுத்தித் திருகோணமலையில் உழைக்க ஆரம்பித்துள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையங்களுக்குப் பதிவு எண் இருப்பது போல் இவர்களுக்கு அரசாங்கத்தின் தொடர்பு, பாராளுமன்ற உறுப்பினர்களின் தொடர்பு என்று ஏமாற்ற முகங்கள் இருக்கின்றன.

திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைச் சுற்றிப்பிழைக்கும் பேர்வழியொருவர் தபால் கந்தோரில் ஒரு பியோன் வேக்கன்ஸி இருப்பதாகவும், யாருக்கும் தெரியாத வகையில் அந்த வாய்ப்பை இளைஞர் ஒருவருக்குப் பெற்றுத்தர தம்மால் முடியும் என்றும் சரடு விட்டிருக்கிறார். அதற்குப் பதிலாக ஒரு தொகைப் பணம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார். பணம் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று இளைஞர் கேட்டதற்கு அது எம்.பி.யிடம் கலந்து பேசித்தான் சொல்ல முடியும் என்று ‘நேர்மை’யாகப் பதில் கூறியிருக்கிறார். அந்த இளைஞனுக்கோ மகிழ்ச்சி, அரசாங்க உத்தியோகம் கிடைக்கும் என்பதில்!

எம்.பி.யிடம் கலந்து பேசித்தான் பணம் என்றதால் நம்பிக்கை வேறு ஏற்பட்டிருக்கிறது.

மகிழ்ச்சியில் அந்த இளைஞர் விசயத்தை உறவினர்களிடம் சொல்லப்போய், ஏமாறாமல் தடுக்கப்பட்டார். உண்மையில் தபாற்கந்தோரில் இப்பேர் வழி குறிப்பிட்ட தபாற்காரர் உத்தியோகத்துக்கு நேரடியாக ஆட்கள் தெரிவு செய்யப்படுவதில்லை. படிப்படியாக உயர்த்தப்படுமொருவரே தபாற்காரர் ஆகிறார்.

தபாற் கந்தோரில் பகுதி கடமைக்காக இளைஞர்கள் நியமிக்கப்படுவதுண்டு. இது தபால் அதிபரின் தீர்மானப்படியே நடைபெறுகிறது. இவ்வாறு வரு ஒருவர், யாராவது கடமைக்கு வராத தினங்களில் மட்டும் ஆகக்குறைந்த தரக் கடமைகள் செய்யுமாறு கேட்கப்படுவார். இத்தகைய நியமனதாரருக்கு உத்தியோக உத்தரவாதமோ வேலை தொடர்ந்து தினமும் தரப்படும் என்ற உத்தரவாதமோ கிடையாது.

இந்தப் பதவியைக் கூடக் காசாக்கு மளவுக்கு முயற்சி செய்திருக்கிறார் அந்தப்பேர்வழி. அந்தப் பாராளுமன்ற உறுப்பினரிடம் பணம் கொடுத்து உத்தியோகம் பெறலாம் என்ற எண்ணத்தை இப்பேர்வழிகள் மக்களிடையே நன்றாக விதைத்துப் பிழைத்துக்கொள்வதை அவர் அறியாமல் இல்லை. கட்சிக் கிளை கூட ஒரு கூட்டத்தில் பா.உவுக்கு இத்தகைய சம்பவங்களைக் காசாரமாகச் சுட்டிக் காட்டி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொருவர்; திருகோணமலையில் சந்திரிகா அம்மையாரின் வலதுகை என்று தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்பவர்; தந்தை செல்வாவின் மனங்கவர்ந்த தனயன் (வேறு கட்சியில் தான் இருக்கின்ற போதிலும்) தானே யென்றும் அண்மையில் மேடையொன்றில் கூறியவர்.

இப்போது ‘பேங்க் அப்பாயின்மென்ட்’ எடுத்துத் தருவதாகப் பணம் வாங்க ஆரம்பித்திருக்கிறார். வங்கி நியமனத்தின் விலை அறுபதினாயிரம் ரூபா அட்வான்ஸ் முப்பதினாயிரம் ரூபா பலபேரிடம் பெற்றுக்கொண்டு விட்டார். மிகவும் இரகசியமாக இரண்டு மாதங்களில் நியமனம் கொடுக்கத் தவறினால் தர்ம அடி கிடைக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏமாற மக்கள் தயாராக இருக்கிறார் என்று தெரிந்தால் எவன்தான் ஏமாற்ற முன்வரமாட்டான்.

விவேகி

# ‘துப்பாக்கிகள் சமாதானத்தைப் பிரசவிக்காது’

‘இருபது வருடங்களைத் தாண்டியுள்ள தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு பொது இணக்கம் காணப்பட்ட ஒரு அரசியல் ரீதியான தீர்வினை ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துள்ள கட்சிகளுக்கு மத்தியிலேயே அடைய முடியாத நிலையில், விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான யுத்தங்கள் கொச்சைப்படுத்தப்பட்ட ஒரு இராணுவத் தீர்வை நிர்ப்பந்திக்கும், நோக்கத்தை உடையனவாகும் என்று முஸ்லிம் கட்சியின் தலைவரும், கலைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சட்டத்தரணி எம். எச். சேகு இஸ்ஸதீன் கூறியுள்ளார்.

‘வெற்றி நிச்சயம்’ என்ற பெயரில் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் என்னவிதமான வெற்றிகளை எந்தத் தரப்பாருக்கு நிச்சயிப்பதற்காக செய்யப்படுகின்றன என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும்.

நிரந்தரமான சமாதானத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஜனநாயக முறையிலான நடவடிக்கைகளினாலும் பொது இணக்கம் பெறப்பட்ட அரசியல் தீர்வுகளாலுமே வெற்றி நிச்சயிக்கப்படுமேயன்றி, தற்காலிக இராணுவ வெற்றிகளினால் உரிமைப்போராட்டங்களை நிரந்த மாக அடக்கிவிடுவதும், போராடும் சமூகங்களின் இதயங்களை வெல்வதும் இயலாத காரியங்களாகும்.

உரிமைப்போராட்டங்கள் தொடர்பாக எல்லா நாடுகளும் செய்த தவறுகளை ஒவ்வொரு நாடும் செய்துதான் திருந்தவேண்டுமென்பது பரிதாபத்துக்குரிய விதியாகும். வட நாட்டு மக்கள் பல ஆண்டுகளாக தம் வாழ்வில் அனுபவித்து வரும் நகர வேதனைகளுக்கு முடிவுகட்ட இராணுவ நடவடிக்கைகளை உடனே நிறுத்துவதுதான் மனிதாபிமான செயலாக இருக்கும். சகல சமூகங்களையும் சார்ந்த அதிகபட்சமான தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற எந்த ஒரு அரசியல் தீர்வும் இதுவரை எய்தப்படவில்லை.

அவ்வாறான ஒரு தீர்வைப்பெற்று அந்தத் தீர்வுக்கு விடுதலைப்புலிகள் இணங்காத பட்சத்தில் அவர்களுக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதை நியாயப்படுத்த முடியும். பொது மக்களின் அநுசரணையும் பெறப்பட முடியும் அவ்வாறில்லாமல் தேவைப்படும் போது விடுதலைப் புலிகளை உரிமைப் போராளிகளாகவும், வேண்டாதபோது பயங்கரவாதிகளாகவும் வேறுபடுத்தி யுத்தங்களை நடத்திச் செல்வதனால் பொது மக்களே பலிக்கடாக்களாக்கப் படுகின்றனர்.

துப்பாக்கிக் குழல்களிலிருந்து சமாதானக் குழந்தைகள் பிரசவிக்கும் என்ற தப்புக்கணக்கில் செயற்படுவது சிறுபான்மை சமூகங்களுக்கெதிராக இதுகாலவரைக் காட்டப்பட்டுவந்த பாரபட்சங்களுக்கு முள் கிரீடம் சூட்டுவதாகவே முடியும்.

நிரந்தர சமாதானத்துக்கு எதிராகச் செயற்படும் ஜனநாயகப் போர்வையிலுள்ள அரசியல் பிழைப்பு வாதிகளுக்கு எதிராக ஒரு தார்மீக யுத்தத்துக்கு பொது மக்கள் தயாராக வேண்டும்.

-அம்ரிதா-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ்ப்பாணச் செய்திகள்!

## கற்பகப் பணிகள்

யாழ்ப்பாணத்தில் தலைமை யகமாகக் கொண்டுள்ள பனை அபிவிருத்திச் சபை ஒரு பெயர் பெற்ற நிறுவனம். இதனால் யாழ். குடாநாட்டில் பனம் பொருட்களின் அபிவிருத்தி மட்டுமல்ல பலருக்கு சுய வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தி வந்தது.

ஆனால் நாட்டு நிலைமையைக் காரணம் காட்டி இதன் தலைமை யகத்தை முழுமையாக கொழும்புக்கு கொண்டு செல்ல மெல்ல மெல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை அதன் அண்மைக் கால நிர்வாக செயற்பாடுகள் காண்பிக்கின்றன.

பனை வளம் உள்ள யாழ்ப்பாணத்திலேயே இதன் தலைமையகம் இருக்கவேண்டும் என்றும் அதன் தலைவர், செயலாளர், பொது முகாமையாளர் கணக்காளர் போன்றவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து பணிபுரிய வேண்டும் என்று இது ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் முன்னைய தலைவர் க. நடராசா அரசியல் பிரச்சினை, பாதுகாப்பு காரணமாக கொழும்பில் இருந்து செயற்பட்டார். இப்போதுள்ள தலைவர் மு. பாக்கிய நாதனும் அதேபோல கொழும்பில் இருந்து பணியாற்றுகிறார். தலைவர் கொழும்பில் இருக்க தலைமை யகத்தை யாழ்ப்பாணத்தில் எப்படி இயக்குவது, கஷ்டம்தானே. அதனால் கொழும்புக்கு கொண்டு போக முயற்சி.

1990க்குப்பின்னர் திறைச்சேரியின் நிதி ஒதுக்கீடுகள் கொழும்புக்கு மாற்றப்பட்டன. 1996வரை கணக்காளர் யாழ்ப்பாணத்தில் பணியாற்ற கணக்காளரின் கணக்காய்வு இன்றி பண ஒதுக்கீடுகளும் செலவுகளும் செயற்படுத்தப் பட்டுள்ளன. இதனை முன்னைய தலைவர் நடராசாவும், தற்போதைய தலைவர் பாக்கியநாதனும் மேற்கொள்ள வழிவகுத்தனர்.

1996இல் கணக்காளர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் கொழும்பில் இருந்தே கணக்காய்வை அவர் செய்ய வேண்டி ஏற்பட்டது.

அரசுகள் மாறும்போது தலைவர்களும் மாற்றப்படுகின்றனர். தற்போதைய தலைவருக்கு கொழும்பில் தனிப்பட்ட தொழில்கள் இருக்கின்றன. அவர் எப்படி யாழ்ப்பாணத்தில் இருந்து பணிபுரிவார்.

'கற்பகம்' என்ற விற்பனை நிலையத்தை மையமாக வைத்துக் கொண்டு தலைவர், செயலாளர், உற்பத்தி உத்தியோகத்தர், பிரதம எழுதுவினைஞர், நிர்வாக உத்தியோகத்தர் எல்லோருமே கொழும்பில் தற்போது பணிபுரிகிறார்கள். பெயரளவில்தான் யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்திச் சபை தலைமையகம் உள்ளது என்று கூறலாம்.

இனி இதன் நிர்வாக நடவடிக்கைகளை கவனித்தால்; அரசின் சம்பள மீளாய்வு அறிக்கையின் படி சபையின் ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரித்து வழங்குவதற்கு போதிய ஆட்கள் இல்லையென்று கூறப்படுகிறது.

தற்போதைய தலைவர் பாக்கியநாதன் விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து சில நாட்கள் தலைவரின் ஆசனத்தில் இருந்து பணியாற்றிப் போவார்.

இனி பனம் பொருட்களை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. 1995இல் சபையினால் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பனம் பொருட்களுக்கு 1996 நவம்பரில் தான் பணம் கொடுக்கப்பட்டது. இதனால் கடனுக்கு பனம் பொருட்களை கொள்வனவு செய்ய முடியவில்லை. உற்பத்தியாளர் மறுக்கின்றனர். பணம் கொழும்பில் இருந்து வரவேண்டும் என்று அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கொழும்புக்கு தலைமையகம் போகப்போகிறது என்ற கதையும் யாழ்ப்பாணத்தில் பரவலாக பேசப்படுகிறது. இதனாலும் கடனுக்கு பொருட்கள் தர உற்பத்தியாளர் மறுக்கின்றனர்.

மேலதிகமாக ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் நிரந்தர ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சம்பள உயர்வு வழங்க முடியவில்லை. 260பேர் வரை சபையில் பணியாற்றுகின்றனர்.

மன்னார், புத்தளம், மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய பகுதிகளில் சபையின் விரிவாக்கம் கூடியிருப்பதால் ஆளணி தேவைப்பட்டுள்ளது. ஆனால் ஆளணிக்கு மேலாக புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து உற்பத்திப் பொருட்கள் கொழும்புக்கு வருகின்றன என அரசு தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்கிறது. காங்கேசன்துறைக்கு வரும் கப்பல்கள் சில திரும்பிச் செல்லும் போது வெறுமையாகவே செல்கின்றன. இவற்றில் அனுப்பலாம்தானே.

க. மாணிக்கவாசகர் அவர்கள் அரசாங்க அதிபராக இருந்தபோது இரண்டு தடவைகள் பனம் பொருட்கள் இலவசமாக கப்பலில் அனுப்பப்பட்டன. அதாவது கப்பல் கட்டணம் இன்றி அனுப்பப்பட்டன. அவற்றை பனம் உற்பத்திப் பொருட்களை கொழும்பில் சந்தைப்படுத்த பல உதவிகள் செய்தார். ஊக்கமும் அளித்தார்.

வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின் தலைவர் சோமபால குணதீர யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையின் வளர்ச்சிக்கு ஆதரவு நல்கினார். அத்துடன் பனம் பொருட்களை சபை கப்பலில் அனுப்ப கட்டணம் அறவிடப்படாது என்றும் கூறினார். ஆனால், ஏன் கடந்த வருடம் யாழ்ப்பாணம் வந்த கைத்தொழில் அமைச்சர் சீ.வி. குணரட்னாவும் பனம் பொருட்களை கொழும்புக்கு கட்டணம் எதுவுமின்றி இலவசமாக அனுப்ப ஏற்பாடுகள் செய்து தருவதாகக் கூறினார்.

ஆனால் யாழ். செயலக புனர்வாழ்வு புனரமைப்பு பகுதியினர் இம்முறை கட்டணம் அறவிட்டே கப்பலில் பனம் பொருட்களை அனுப்பியுள்ளனர்.

இப்படியாக பனை அபிவிருத்திச் சபையின் பணிகள் நடைபெறுகின்றன. சபை கொழும்புக்கு மாற்றப்பட்டால் குடாநாட்டு பனம் பொருட்களை விட்டுவிட்டு ஏனைய பகுதி பனம் பொருட்களை தரைமார்க்கமாக அனுப்புவது சுலபம் அல்லவா.

**மரியான்**

## யாழ்ப்பாணக் கசிப்பு

கசிப்புக்கு இன்று இலங்கையில் பெயர்போன இடம் யாழ்ப்பாணமாக வந்துவிட்டது. லாபகரமான தொழில் என்று எல்லோரும் செய்கிறார்கள். வீட்டுக்கு வீடு, விற்பனை. கண்டும் காணாமல் உள்ளனர். நீதிமன்றத்திற்கு ஒருசில வழக்குகள் வரும். குற்றப்பணம் கட்டிவிட்டு போய் மீண்டும் அத்தொழிலைச் செய்கிறார்கள் குறிப்பாக பெண்களே அதிகமாகச் செய்கின்றனர்.

அது மட்டுமல்ல பாண் தயாரிக்க பயன்படும் ஈஸ்ட் யாழ்ப்பாணத்தில் விலை அதிகரிப்பு, ஈஸ்ட் கசிப்புக் காய்ச்சப் பயன்படுகிறது.

இனி மது பான விற்பனை நிலையங்களும் எங்கும் திறக்கப்படுகின்றன. புலிகள் இருந்தபோது திறக்கப் பட்டது போலவே இப்போதும் மது பானக்கடைகள் திறக்கப்படுகின்றன. ஆலயங்கள், பாடசாலைகள் என்றும் பாராமல் சட்ட விதிகளுக்கு மாறாக ஆலயங்களுக்கு அருகில் திறக்கப்படுகின்றன. சிவில் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் எப்படி நடை பெறுகிறது என்று தெரிகிறது.

**ரூபன்.**

## வெற்றிடம் இங்கே வேலை அங்கே!

1995ம் ஆண்டு நடைபெற்ற சுருக்கெழுத்து, தட்டெழுத்தாளர் தெரிவுப் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து ஏழுபேர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு நேர்முகப் பரீட்சையும் நடைபெற்றது. அதில் நால்வருக்கு தென்பகுதிக்கு நியமனம் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீதிமன்றங்கள் உட்பட பல திணைக்களங்களில் இவ்வெற்றிடங்கள் உள்ளன. இது யாழ். அரசாங்க அதிபருக்கும் தெரியும். இவர்கள் அரசாங்க அதிபரிடம் கேட்டபோது தெற்கே போகுமாறு சொன்னார்.

அவர் நினைத்தால் இவர்களுக்கு இங்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கலாம். தற்காலிகமாக சிலரை (அரியாலை வாசிகள்) இங்குள்ள திணைக்களங்களில் நியமிக்க அரசாங்க அதிபர் திட்டம் என இவர்கள் கூறுகின்றனர்.

தற்போதைய சூழ்நிலையில் தென்பகுதிக்கு இளம் பெண்களான நாம் எப்படிப்போவது என்கிறார்கள்.

பி. மீனா (163 புள்ளிகள்), எஸ். குமுதினி (139 புள்ளிகள்), இ. சந்தியா (122 புள்ளிகள்), அ. ஜெயந்தி (118 புள்ளிகள்), எஸ். தமயந்தி (107 புள்ளிகள்), எஸ். தயாளினி (101 புள்ளிகள்), எஸ். ரஞ்சனா (098 புள்ளிகள்) ஆகியோரே இவர்களாவர். இவர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்

**யாழூரான்.**

---

## நகர் பயிற்சியாளர் கொலை:

# சந்தேக நபருக்கு எதிராகச் சாட்சியங்களில்லை!



பப்புவா நியூகினி நாட்டைச் சேர்ந்த நகர் பயிற்றுவிப்பாளரான, ஜொயெல் பெராவின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப் பட்டிருந்த ஆறு சந்தேக நபர்களில், லொஹான் ரத்வத்தை உட்பட மூவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யுமளவிற்கு சாட்சியில்லாததன் காரணமாக அவர்களை விடுதலை செய்யுமாறு, இரகசிய பொலிசார் நீதிமன்றத்தை கோரியிருந்தனர் என லங்காதீப பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏனைய மூவரும் எதிர்வரும் 18ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக பரபரப்பாக பேசப்பட்ட இக்கொலைச்சம்பவம் தொடர்பாக, பல்வேறு பத்திரிகைகளும் பலதரப்பட்ட செய்திகளை வெளியிட்டிருந்தது தெரிந்ததே. இது தொடர்பாக பிரதி பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்தை கடந்த 5ம்திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் பொழுது இவ்வாறு குறிப்பிட்டார். ''ஜயசிக்குறு'' நடவடிக்கை முன்னணிலையில் சென்று வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டிருக்கும் நிலையை பொறுத்துக்கொள்ள முடியாத, எதிர்க்கட்சியும் சில தொடர்பூடகவியலாளர்களும், எனக்கு அவமானம் ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றனர்'' என்றார்.

லொஹான் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜரான வழக்கறிஞர் வசந்த பண்டார அவர்கள் ''இந்த கொலைக் குற்றத்துடன் தொடர்புடைய இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. ஒன்று விடுதிக்குள் இறந்தவர் தாக்கப்பட்டதாகும். இரண்டாவது பம்பலப்பிட்டி தாச கட்டிடத்து வாசலில் ஜொயெல் சுடப்பட்டதாகும். இவ்விரண்டு சம்பவங்களும் நடைபெறும் சந்தர்ப்பத்தில் அருகில் இருந்த நபர் ஜொயெலின் நண்பரான ஜீடியோன் ராகாவாகும். அவர் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டு லொஹான் ரத்வத்தையை உறுதிப்படுத்தியுள்ளார்.

முதலில் லொஹான் ரத்வத்தை விடுதியில் அமர்ந்திருந்தார் என்றும், இரண்டாவதாக அவர், ஜொயெல் சுடப்பட்ட வீதியோரத்தில் இருந்தார் என்றும் அடையாளப்படுத்தியுள்ளார். இவ்வுறைத் தவிர, வேறு எந்த அடையாளப் படுத்தலும் அவரால் மேற்கொள்ளப் படவில்லை'' எனக் குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தின் போது, அரச தரப்பு வழக்கறிஞருக்கும், ஜொயெல் பெராவின் குடும்ப நலனைக் கவனிக்கவென ஆஜரான சட்டத்தரணி குமார் பொன்னம் பலத்துக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அடையாள அணிவகுப்பின் போது, அங்கு சமூகமளித்த மாஜிஸ்திரேட் மல்காந்தி விக்கிரமநாயக்க லொஹான் ரத்வத்தையின் உறவு முறைக்காரர் என்பதால் ஏனைய சட்டத்தரணிகளுக்கு அடையாள அணிவகுப்பை பார்வையிட அனுமதியளிக்கவில்லையெனகுறிப் பிடப்படுகின்றது. அடையாள அணிவகுப்பை பார்வையிட முன்வந்த போதும், லொஹான் ரத்வத்தவின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் டிரந்த வலலியத்த அவர்களது எதிர்ப்பினைக் காரணம் காட்டியே பொன்னம்பலம் அவர்கள் உட்பட ஏனைய வழக்கறிஞர்கள் வெளியேற் றப்பட்டனர்.

இது தொடர்பாக ராவய பத்திரிகை, குமார் பொன்னம்பலம் அவர்களிடம் வினவிய பொழுது அவர், மாஜிஸ்திரேட் அவர்கள் அடையாள அணிவகுப்பினை பார்வையிட அனுமதி மறுத்ததானது, நீதிமன்றத்தின் சட்டத்திற்கும், சாதாரண நடைமுறைக்கும் முரணானதாகும். இதற்கு சந்தேக நபரான லொஹான் ரத்வத்தை அவர்களுக்கும், மஜிஸ்திரேட் அவர்களுக்கும் இடையிலான உறவு உதவி புரிந்துள்ளது'' என்றார்.

இக்கொலைச்சம்பவத்துடன் நாலந்த எல்லாவலையின் கொலைச் சம்பவமும் தொடர்பு படுத்தப்பட்டு பேசப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அச்சம்பவத்திலும் இதே போன்ற ஓர் நிலைமை ஏற்பட்டிருந்ததெனவும், ஆனால் அங்கு லொஹான் ரத்வத்தை போன்ற முக்கிய சந்தேக நபர்கள் இன்னும் விசாரணைக்காக வைக்கப்பட்டிருப்பதாகவும் ஐ.தே.க வட்டாரங்களிருந்து எதிர்க்குரல்கள் எழுந்துள்ளன.

இச்சம்பவத்தில் அரசியல் தன் உச்ச பங்கினை வகித்திருப்பது கண்கூடு.

**-பிஷா.**

www.tamilarangam.net



# அழிப்ப யுத்தமும், அழியும் தேசமும்!

நொச்சிமோட்டையில் நடந்த சம்பவம் தொடர்பாக அரச தரப்பு அறிவித்திருந்த அறிவிப்புக்களை வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் அறிந்து கொண்டவர்களுக்கு, நிச்சயமாக ஒரு விடயம் தெளிவாகியிருக்கும்.

அதாவது, இலங்கை அரசாங்கம் எந்தவொரு யுத்தக்களத்திலும் தனக்கேற்படும் தோல்வியை அல்லது நெருக்கடியை ஒப்புக் கொள்ளவோ, யுத்த நிலைமைகள் குறித்த உண்மைகளை மக்களுக்கு தெரிவிக்கவோ போவதில்லை என்பது தெளிவாகியிருக்கும். கூடவே உண்மைகளை ஒப்புக் கொள்ள மறுக்கும் அரசாங்கத்தின் இப்போக்கு, தொடர்ந்து யுத்தத்திலும், யுத்த மூலமான வெற்றியிலும் அதற்கிருக்கும் உறுதிப்பாட்டையும் தெளிவுபடுத்தியிருக்கும். எந்தவிலை கொடுத்தாவது வடக்குக்கான தரைப்பாதையைத் திறப்பது என்பதில் அரசாங்கம் திடசங்கற்பம் கொண்டிருப்பதை இந்தச் சம்பவம் தெளிவாக உணர்த்தியுள்ளது.


யுத்த கள தோல்விகளை வெற்றிகளாக கூறுவதும் தமது இழப்புக்களுக்கு மேலாக எதிராளியின் இழப்புக்களை பெரிதுபடுத்திக் காட்டுவதும் இலங்கையின் கடந்த கால யுத்த வரலாற்றில் ஒன்றும் புதிய விடயம் அல்ல. இவ்வாறு செய்வதற்கான காரணம் படையினரின் மனோநிலையை அது பாதித்து விடக்கூடாது என்பதற்காகவே என்பது ஒரு பொதுவான அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடாக அரசாங்க மட்டத்தில் நிலவி வருவதும் தெரிந்ததே.

இந்தக் குறிப்பிட்ட நொச்சி மோட்டை தாக்குதலில் வெற்றி பெற்றவர்கள் யார்? இதில் அரசாங்கத்தின் இழப்புகள் எவ்வளவு, புலிகளின் இழப்புக்கள் எவ்வளவு, புலிகள் நொச்சிமோட்டையிலிருந்த தாங்கிகளையும், எறிகணைகளையும் எடுத்துச் சென்றார்களா? ஆயுதக்கிடங்கு 'எதிரியின் கைக்குப் போய் விடக்கூடாது என்பதற்காக இராணுவமே தீவைத்தது' என்பது உண்மையா? புலிகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை தம்மைவிட அதிகமானதாகக் கூறுவதும், புலிகளில் இறந்தவர்களது தொகையை அவ்வளவு சரியாகச் சொல்லும் பாதுகாப்பு வட்டாரங்கள், தமது பக்க இழப்புகள் பற்றி சரியாக சொல்ல முடியாமல் இருப்பது ஏன் என்பது போன்ற கேள்விகளை கேட்டு அலசுவது இப்பத்தியின் நோக்கமல்ல. மாறாக, இந்த யுத்தத்தின் விளைவுகள்பற்றிய சில அடிப்படையான உண்மைகளை தொட்டுக்காட்டுவதே இதன் நோக்கமாகும்.

வடக்கு நோக்கிய பாதை திறப்பதை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படும் இன்றைய ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை இரண்டு பிரதான அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஒன்று, வடக்கில் நிலை கொண்டிருக்கும் படையினருக்கான பிரதான வழங்கற்பாதையாக தரைப்பாதை ஒன்றை அமைப்பதே பொருளாதார ரீதியில் தொடர்ந்து யுத்தத்தை நடாத்த உகந்த ஒன்றாகும் என்பது. இரண்டாவது, வன்னிக்காட்டை ஊடறுத்துச் செல்லும் இந்தப்பாதையைத் திறப்பதன் மூலமாக புலிகளின் கௌரவத்திற்கும், ஆதிக்கத்திற்கும் அரசியல் இருப்புக்கும் மாபெரும் அடியை கொடுக்க முடியும் என்பதாகும். குடாநாட்டை விட்டு ஓடிவந்தவர்கள், வன்னியையும் பாதுகாக்க முடியவில்லை என்ற நிலையை ஏற்படுத்திவிட்டால், அது அரசாங்கத்திற்கு வெறும் யுத்த ரீதியிலான வெற்றி மட்டுமல்ல, மாபெரும் அரசியல் வெற்றியுமாகும்.

இந்த இரண்டு அம்சங்களையும் நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படும் அரசியல் ஆயுதங்கள் இரண்டு. ஒன்று, 'பயங்கரவாத புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவித்து அவர்களை சுதந்திரமான அரச நிர்வாகத்தின் கீழ் வாழ விடுதல்'. இரண்டு, வடக்கிலுள்ள மக்களுக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்லும் பாதுகாப்பான, வசதியான தரைப்பாதை ஒன்றை அமைத்துக்கொடுத்தல் மூலம் அவர்களை சுமுகமான நிலைக்கு கொண்டு வருதல்.

இந்த இரண்டு அரசியல் காரணிகளும், அரசாங்கத்தின் இந்த யுத்தத்தை ஒரு மீட்பு யுத்தமாக பிரசாரம் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றிற்கான முயற்சிகள்



சலிப்பூட்டுமளவிற்கு ஆறுதலாகவும், அர்த்தமற்றவிதத்திலும் நடந்து கொண்டிருந்தாலும் அவை நடந்து கொண்டிருக்கின்றன என்பது இந்த 'மீட்பு யுத்தத்தை' நியாயப்படுத்த உதவியான ஒரு விடயமாக கொள்ளப்படுகிறது. வழமையான, ஐ.தே.க அரசகாலத்தைய அதே சாக்குப்போக்குகள் இழுபறிகள் (உ+ம், முஸ்லிம் கட்சிகளும் தமிழ்க் கட்சிகளும் தம்முள் இணக்கப்பாடு காணும் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கோருதல்) இருந்த போதும் 'தீர்வுப் பொதி' பிரச்சினையத் தீர்க்கப் போதாது என்று பொதுவாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் கருதுகின்றபோதும், அது நிறைவேற்றப்படும்... படும்... என்று அரசாங்கத் தரப்பு திரும்பத்திரும்ப கூறிவருகிறது இதனாலேயேயாகும்.

எவ்வாறாயினும், இந்தத் தீர்வுப் பொதி நடைமுறைக்கு வருமோ இல்லையோ, அது இங்குள்ள இனப்பிரச்சினையைத் தீர்க்குமோ இல்லையோ, யுத்தம் தொடர்ந்து நடக்கும் என்பது மட்டும் இன்று தெளிவாகத் தெரிகின்றது. இந்த யுத்தம், வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒரேயொரு தடையாக உள்ள புலிகளை அடக்கிப் பலவீனப்படுத்திவிடுவதற்காகவே நடக்கும் ஒன்று என்று கூறப்படுவதால், தீர்வுப்பொதிப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டாலும், புலிகளை அடக்கி ஒடுக்குவது அவசியமான ஒன்று என்ற தர்க்கமே இதன் பின்னால் நிலவுகின்றது என்பது வெளிப்படை. இதனால் தான், யுத்த கள உண்மைகளை விட, யுத்த கள விழுப்பங்கள் செய்திகளாக அறிவிக்கப்படுகின்றன.


எனவே, இந்த யுத்தம் இன்னும் ஒரு சில ஆண்டுகட்கு தொடர்வது தவிர்க்க முடியாத ஒன்று என்பது தெளிவாகிறது. வடக்கின் யதார்த்த நிலைமைகளும், கடந்த கால யுத்த வரலாற்று அனுபவங்களும் இந்த யுத்தத்தின் முடிவை கிட்டிய தூரத்தில் இருப்பதாக நம்ப உதவவில்லை. வடக்கு நோக்கிய பாதை திறக்கப்பட்டபின்னும் கூட புலிகளால் தொடர்ந்து வன்னியில் இருக்கவும், தொடர்ந்து சண்டையிடவும் முடியும் என்பதை இந்திய படை கால அனுபவங்கள் காட்டுகின்றன. லட்சக்கணக்கில் துருப்புக்களையும், இலங்கை இராணுவத்தைவிட பல மடங்கு ஆயுதங்களைக்கொண்டிருந்தும் இந்தியப் படையினால் புலிகளை முற்றாக நசுக்கிவிட முடியவில்லை. முழத்துக்கொரு முகாமும் , மூலைக்கொரு 'சென்றி'யுமாக இருந்தும் இந்தியப் படையால் புலிகளை இல்லாதொழிக்கவோ அமைதியை நிலைநாட்டவோ சாத்தியமாகவில்லை.

இதேமாதிரி ஒரு நிலை இலங்கைப் படைக்கும் ஏற்படாது என்று கூற பொருத்தமான காரணங்கள் எதுவும் இல்லை.

ஆக, இறுதியாக எஞ்சப்போவது என்ன என்ற கேள்வி எழுகிறது.

இந்தியப் படையைவிட ஆட்பலமும், ஆயுதத் தளபாட பலமும் குறைவாக இருப்பதனால் இலங்கை இராணுவம் அவர்களைப்போல முழத்துக்கொரு முகாமிடும் வேலையைச் செய்வதற்குப் பதிலாக, அணைக்கட்டுக்களை கட்டி பிரதேசங்களை பாத்திகளாக்கியிருக்கிறது. 10-15 அடி உயரத்திற்கு வீடு வாசல்கள், மரம் தடிகள் கல்லுகள் என்று டோசர்களால் இடித்து தள்ளிவரப்பட்ட மண் அணைகள் கட்டப்பட்டு சிறுசிறு கோட்டைகளாக பிரதேசங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. குடாநாட்டிற்குள் ஏற்கெனவே 'பண்ட்' என்று அழைக்கப்படும் இந்த அணைகள் பிரசித்தமாகிவிட்டன. இப்போதைய ஜயசிக்குறு நடவடிக்கையின் போதும், குடாநாட்டின் இந்த 'பண்ட்' பாதுகாப்பு ஒழுங்கு நடைபெறுகிறது. இதன்படி பாதையின் இருமருங்கும் உயரமான 'பண்ட்'டுகள் டோசர்களால் உருவாக்கப்படுகின்றன. இந்த அணைக்கட்டில், வாய்க்காலாகவே தரைப்பாதை போக உள்ளது. போக்குவரத்துக்கு பாதுகாப்பாயிருக்கக் கூடிய இந்த அணைக்கட்டுக்காக பல்லாயிரம் தொன் மண் புரட்டப்படுகின்றன. பல வயல்கள் கிண்டப்படுகின்றன; வீடுகள் தரைமட்டமாகின்றன. பெருவிருட்சங்கள் முதல் சிறுமரங்கள் வரை வேரோடு சாய்க்கப்படுகின்றன.

இந்த இராட்சத போர் நகர்வு, பல கோடி சொத்தழித்தலை, பூமி, சுற்றுச்சூழல் அழிவை, உயிரழிவை பொருட்படுத்தாத தீவிரத்துடன் தொடருமானால், இந்தப்பாதையை ஒரு வேளை இராணுவம் திறந்து முடித்துவிடும் வாய்ப்பும் இருக்கவே செய்கிறது. ஆனால் இதன் விளைவு?



இன்றைய இந்த யுத்தம் ஏற்படுத்துகிற விளைவுகளைப் பார்க்கும் ஒருவருக்கு மிகத்தெளிவாக இரண்டு விடயங்கள் தெரிகின்றன. ஒன்று யுத்தத்தின் நேரடி அழிவுகள்; மற்றையது அதன் மறைமுகமான அழிவுகள்.

யுத்தத்தின் நேரடி அழிவுகளாக சொத்து அழிவு, மன[illegible] அழிவு, சுற்றுச்சூழல் அழிவு என்பனவற்றைக் குறிப்பிடலாம். நாளுக்கு நாள் மரணப்பீதியுடனும், உயிரிழப்புகளுக்கு மத்தியிலும் ஒட்டாண்டிகளாக அகதிகளாகிக்கொண்டிருக்கும் ஒரு சமூகம் தனது எல்லா ஆற்றல்களையும் இழந்து கொண்டிருக்கிறது. அது வாழ்வதற்கான உரிமை பறிக்கப்படுகிறது. சொத்துக்கள் அபகரிக்கப்படுகின்றன. அதன் சூழல் நஞ்சூட்டப்பட்டதாக மாறுகிறது. எதிர்கால சந்ததிக்கு அது அச்சத்தையும், அகதிவாழ்வையும் தவிர மற்றெதையும் விட்டுவைக்க முடியாத ஒரு சமூகமாக மாறிக் கொண்டிருக்கிறது. மரணம் அதன் நாளாந்த விதியாகிவிட்டது. மன நோய் மலேரியாவை விட அதிகமான நோயாக வளரத் தொடங்குகிறது.

யுத்தத்தின் மறைமுகத்தாக்கங்களோ இன்னொரு கொடுமையாகி விட்டது. யுத்தத்திற்கு அஞ்சி நாட்டின் இதர பாகங்களை நோக்கி ஓடும் அனைவரும் தடுத்து பலவந்தமாக சிறைவைக்கப்படுகிறார்கள். அகதிமுகாம்கள் தடை முகாம்களாக மாறிவிடுகின்றன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு போகும் படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மறுப்பவர்கள் தாம் விரும்பும் பகுதிக்கு போக எண்ணிலடங்காத தடைகள் போடப்படுகின்றன. அத் தடைகளையும் தாண்டி வருபவர்கள் நாளாந்த சந்தேகத்திற்கும் மனோ ரீதியான இம்சைக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். பாலியல் வல்லுறவு, பலாத்காரம், ஏமாற்று, மோசடி, மிரட்டல், புலிகள் என்ற சந்தேகத்தின் பேரிலான இம்சை, புலிகள் என்று காட்டிக்கொடுப்போம் என்று கூறி மிரட்டும் கும்பல்களின் அட்டகாசம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்களது அவஸ்தைக்கு எல்லையில்லை. இதுமட்டுமல்ல, நாளுக்கொரு உறவு இறப்பதையும் பொழுதுக்கொரு இழப்பு நடப்பதை செய்திகளாக கேட்கிறார்கள்; இளம் சந்ததிகள் வெறுப்பும் விரக்தியும் கொண்டவர்களாக வளர்கிறார்கள்.

வடக்கில் அண்மையில் அரசாங்க அதிபர் தெரிவித்த தகவல் ஒன்றின் படி பிறப்பு வீத வரைவு இலங்கையின் பிற மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் நேரெதிர் திசையில் செல்கிறதாம். பிறக்கும் சிசுக்களும் யுத்தத்தின் மடியில் பிறந்த் வன்முறையின் குழந்தைகளாகவே பிறக்கின்றனர்....

இத்தகைய ஒரு நிலைமையை இந்த யுத்தம் இன்று உருவாக்கிவிட்டுள்ளது. இதே நிலை இன்னொரு தசாப்தத்திற்கு நிகழுமானால் வடக்கு கிழக்கு எப்படி அமையும் என்பதை எண்ணிப்பார்க்கவே முடியாது. இது ஒரு தேசத்தை முற்றுமுழுதாக அழித்தொழிக்கும் நிலைக்கே இட்டுச் செல்லும் என்று சொல்வதற்கு எத்தகைய ஆய்வும் தேவையில்லை; வெறும் பொது அறிவே போதும்.

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முல்லைத்தீவு: அல்லலுறும் அகதி மக்கள்!

கடந்த மாதம் 13ம்திகதி ஆரம்பிக்கப்பட்ட 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம், கனகராயன்குளம், மாங்குளம், நெடுங்கேணி, மருதோடை, ஒலுமடு, சேலைப்பிளவு, பழம்பாசி, மாமடு, தண்டுவான், கரடிப்புலவு, குளவிசுட்டான், ஒட்டிசுட்டான் ஆகிய இடங்களில், யாழ் மாவட்டத்தில் இடம்பெற்ற 'முன்னேறிப் பாய்தல்', 'சூரியக்கதிர்' ஒன்று, சூரியக்கதிர் இரண்டு இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்கள் தங்கியிருந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற ''சத்ஜெய'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்தும் அங்கிருந்த மக்களும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் இப்பகுதிகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் குடிசைகள் அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இன்று இந்த அனைவரும் நிரந்தரமாக நிர்க்கதியாகியுள்ளனர்.

''ஜயசிக்குறு'' இராணுவ நடவடிக்கையினால் நிர்க்கதியான மக்களுள் சுமார் ஒரு லட்சத்து அறுபதாயிரம் பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தண்ணீரூற்று, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, பேராறு, முத்தையன்கட்டு, விசுவமடு ஆகிய இடங்களுக்கு சகல உடமைகளையும் இழந்து கையில் அகப்பட்ட பொருட்களுடன் கால்நடையாகச் சென்று மர நிழல்களுக்கு கீழும், பொது இடங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட 19 நலன்புரி நிலையங்களில் மட்டும் 1170 குடும்பங்களைச் சேர்ந்த 6145பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நலன்களை பெரும் சிரமத்தின் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் கவனித்து வருகின்றனர்.

இந்த இடம்பெயர்ந்த மக்கள் இன்று சகல அடிப்படை வசதிகளையும் இழந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் தெரு ஓரங்களிலும் மரநிழல்களுக்கு கீழும் வசித்து வருகின்றனர்.

இவர்கள் இடம் பெயர்ந்து சென்ற ஓரிரு தினங்களில் பெய்த பெரு மழையினால் நனைந்த காட்சி (சிறுவர்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட சகலரும்) சகலரையும் கண்கலங்கவைத்தது.

உறைவிடமின்றியும், போதிய உணவின்றியும், மலசல கூட வசதி இல்லாமலும் குடிதண்ணீர் வசதியின்றியும் இவர்கள் அவதிப்படுகின்றனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் இவர்களின் துயரங்களைப் போக்குவதற்கு துடியாய்துடிக்கின்றனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்குப்பின்னர் இந்த மாத முற்பகுதியிலேயே உணவுப் பொருட்களும் மருந்துப் பொருட்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இது போதுமானதல்ல. இதனால் இங்கு உணவுப்பொருட்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது.

வயிற்றோட்டம், சொறிசிரங்கு, மலேரியா, மூளை மலேரியா, கண் நோய் போன்ற தொற்று நோய்கள் வேகமாகப்பரவி வருகின்றது. குறிப்பாக போசாக்கற்ற குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள் ஆகியோரே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர். இக்கொடிய நோய்களின் தாக்கம் கூடுதலாக பேராற்றில் தங்கியுள்ள குடும்பங்களுக்கே பீடித்துள்ளது. அண்மையில் இங்கு வயிற்றோட்டத்தினால் ஒரு குழந்தையும், மூளை மலேரியாவினால் ஒரு சிறுவனும் மரணமடைந்துள்ளனர்.

அரிசி, சீனி, மா போன்ற உணவுப் பொருட்கள் பனடோல் உட்பட சகல மருந்துப் பொருட்களும் பல மடங்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

சகல தரப்பட்ட நோய்களுக்கும் சிகிச்சைபெறுவதற்காக மக்கள் அரசினர் வைத்தியசாலைகளில் நீண்ட கியூவரிசையில் நிற்கின்றனர். ஆனால், மருந்துகள் இல்லாமையினால் நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியாமல் வைத்தியர்கள் திண்டாடுகின்றனர்.

''ஜயசிக்குறு'' இராணுவ நடவடிக்கை தொடர்கின்றது. ஷெல் தாக்குதலினால் நாளுக்கு நாள் மக்கள் அழிகின்றனர். உடமைகள், கட்டிடங்கள் அழிக்கப்படுகின்றது. சமணன்குளம் என்ற இடத்தில் மாட்டு பட்டிக்குள் ஷெல் வீழ்ந்தமையினால் பத்துக்கு மேற்பட்ட மாடுகள் சிதறிப் பலியாகியுள்ளது. காட்டு விலங்குகள் அழிக்கப்படுகின்றன. காடுகளும் அழிக்கப்படுகின்றன.

தொடரும் இராணுவ நடவடிக்கையினால் வன்னிபெரு நிலப்பரப்பில் இருந்து இந்தியாவுக்கு செல்வதற்காக சென்றவர்களுள் படகு விபத்தில் மட்டும் 110 பேர் பலியாகியுள்ளனர். 'ஜயசிக்குறு' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு சென்றவர்களுள் நாச்சிக்குடா கடற்பரப்பில் ஒரு படகு கவிழ்ந்து ஒரே குடும்பத்தைச்சேர்ந்த ஏழு பேர் உட்பட 19 பேர் அநியாயமாக கடலுக்கு இரையானார்கள்.

நாச்சிக்குடா வலைப்பாடு கடல் பரப்பில் சூரியக்கதிர் ஒன்று, இரண்டு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இந்தியா நோக்கிச் சென்றவர்களுள் ஒரு படகு கவிழ்ந்து 16 பேர் மாண்டனர். வன்னி பெருநிலப்பரப்பில் மேற்கொண்ட ''எடிபல'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து 94 பேர் மாண்டனர். ''ஜயசிக்குறு'' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற 19 பேர் மாண்டனர்.

இன்று இலங்கையில் தமிழனாகப் பிறப்பது பாவம் என்ற மனோநிலை சகலரிடத்திலும் குடி கொண்டுள்ளது.

இன்னும் எத்தனை இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுமோ? அத்தனை இராணுவ நடவடிக்கைகளுக்கும் தமிழன் அநியாயமாக பலியாவது தொடர்கதையாகவே இருக்கப் போகின்றது. இராணுவத் தாக்குதல்களால் அங்கும் இங்கும் கலங்கி ஓடும் இந்த மக்களின் நாடோடி வாழ்க்கைக்கு மூற்றுப் புள்ளி என்று கிடைக்கும் என்பது எவருக்குமே புரியாத புதிராகவே இருக்கின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று அல்லல்படும் இந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை ஓரளவாயினும் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வரவேண்டியது மனிதாபிமான முறையில் அவசியம் ஆகும்.

அன்பு

## அழிப்பு யுத்தமும்...

ஆனாலும் இந்த யுத்தம் தவிர்க்க முடியாதது. இது புலிகளால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது. எனவே அவர்களை முற்றுமுழுதாக அழிக்கும் வரை அல்லது அவர்களை அடக்கி ஒடுக்கும் வரை தொடரவே வேண்டும், வேண்டுமானால், மக்கள் பெருமளவுக்கு பாதிக்கப்படாது இந்த யுத்தத்தை நடாத்துமாறு அரசுக்கு கூறலாம் என்று கருதும் ஒரு சிந்தனைப் போக்கு இங்கு பலமாக நிலவுகிறது. அதுவும் படித்த முற்போக்கு சிந்தனையாளர்களாக ஏனைய விடயங்களில் இனங்காணப் படுகின்றவர்கள் மத்தியில் இப்போக்கு நிலவுகிறது. இவர்களே அரசாங்கத்தின் இன்றைய நடவடிக்கைக்கான அரசியல் நியாயப்படுத்தல்கட்குரிய ஆதாரத்தூண்களாக விளங்குகிறார்கள்.

இவர்களது விவாதங்களின் போது மிகவும் அடிப்படையானஒரு உண்மை மறக்கடிக்கப்பட்டு விடுகிறது. அதாவது இந்த நாட்டில், இந்த யுத்தங்களுக்கெல்லாம் தொடக்கமாக இருந்த சிறுசிறு ஆயுதக் கிளர்ச்சிகள் வெடித்தகாலகட்டத்திற்கு பலபத்தாண்டுகட்கு முன்னே எழுந்த இந்த நாட்டின் இனப்பிரச்சினையும், வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் உரிமை குறித்த பிரச்சினையும் இன்னமும் இலங்கையில் வந்த எந்த அரசாங்கங்களாலும் உரிய முறையில் அங்கீகரிக்கப்படவோ, தீர்க்கப்படவோ இல்லையென்பது.

புலிகளை, தீர்க்கப்படாத இந்த அரசியல் உரிமைகளின் தீவிரமான வேண்டுமானால் அதிதீவிரமான, அல்லது படுமோசமான ஒரு வெளிப்பாடாகவாவது இவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் இவையெல்லாவற்றிற்கும் அப்பாலான ஒரு வெற்று வெறிபிடித்த இராணுவக் கும்பலாகவே கருதப்படுகிறார்கள். இதுவே இந்த அரசாங்கத்திற்கும் அவசியமான, தேவையான ஒரு நிலைப்பாடாக இருக்கிறது.

இத்தகைய ஒரு உண்மையை காண மறுக்கும் போக்கு யுத்தத்திற்கு மேலும் மேலும் நியாயத்தை கற்பிக்க உதவுகிறது.

ஆனால், அரசியல் தீர்வு வெறும் கடதாசிகளிலும், அரசியல் வாதிகளின் வாய்களிலும் கிடந்து அரைபட்டுக்கொண்டிருக்கையில், வடக்கு கிழக்கு மக்களது அரசியல் உரிமை இன்னமும் ஒரு 'விவாதத்துக்குரிய விவகாரமாக' பேசப்பட்டுக்கொண்டிருக்கையில், (அந்த மக்கள் இரத்தமும் சதையும் சிதற யுத்தத்தில் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.) எந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இன்னமும் காணப்படாமல் இருக்கிறதோ அந்த மக்களைக் கொல்வது அந்தத் தீர்வு முயற்சியின் ஒரு அம்சமாக அமைவதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

புலிகள் பயங்கரவாதிகள்; ஜனநாயக விரோதிகள்; பாசிஸ்டுக்கள் என்பன போன்ற எந்த அடைமொழிகளும் இந்த யுத்தத்தை நியாயப்படுத்த போதுமானவையல்ல. வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் உரிமை மறுப்பின் முன்னால், இவ்வடை மொழிகள் எந்த வீரியமும் அற்றவையாகி விடுகின்றன.

எனவேதான் இந்த யுத்தம் ஒரு ஆக்கிரமிப்பு யுத்தமாகிவிடுகிறது. அடக்கு முறையைத் தீர்வாக திணிக்கவிரும்பும் ஒரு யுத்தமாகி விடுகிறது; தேசத்தை அழிக்க நடாத்தப்படும் ஓர் அழிவு யுத்தமாகி விடுகிறது.

எல்லா யுத்தங்களும் அழிவையே தருகின்றன. ஆனால் யுத்தத்தின் நோக்கம் எல்லா வேளைகளிலும் அழிப்பாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உரிமைகட்கான, விடுதலைக்கான உலக மக்களின் யுத்தங்கள் எல்லாவற்றின் போதும் அழிவுகள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. ஆனால் அவை அழிப்புக்காக நடாத்தப்பட்ட யுத்தங்கள் அல்ல. தமது உரிமைகள் அழிவதை காப்பதற்காக செய்யப்பட்ட யுத்தங்கள்.

இந்த அரசாங்கம் இன்று நடாத்திக்கொண்டிருக்கும் யுத்தம் என்ன? இது வடக்கு கிழக்கு மக்களின் உரிமையை, அவர்களது பௌதிக இருப்பை அழிப்பதற்கான யுத்தம் அல்ல என்று சொல்லமுடியுமா?

இல்லை, இது அவர்களை புலிகளிடமிருந்து விடுவிப்பதற்கான யுத்தம் என்று சொல்லப்படுகிறது.

சரி, அதுதான் உண்மையென்றால், இந்த அரசுக்கும், அதன் தனிச் சிங்கள இராணுவத்திற்கும் அந்த ஆணையை எப்போது அம் மக்கள் வழங்கினார்கள்? புலிகளிடமிருந்து விடுவித்து மக்களுக்கு அரசு வாங்கித்தரப்போவது என்ன? எந்த மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக புலிகளும்புலிகள் போன்ற அமைப்புகளும் அன்று உருவாகினவோ அவற்றில் எவற்றை இப்போது அரசாங்கம் புலிகளிடமிருந்து விடுவித்து அவர்களுக்குத் தரப் போகிறது?

இவைகள் எம்முன் எழும் கேள்விகள்?

இந்த யுத்தத்தை நிராகரித்து எழுகின்ற கேள்விகள்.

## திம்பு நோக்கி ...

பரவாயில்லை, இப்போதாவது எடுக்கலாம். ஆனால் அவை ஒன்றில் கோட்பாடுகள் மட்டத்திலேயே நிற்கின்றன; அல்லது 13வது திருத்தச் சட்டத்தினை நோக்கிச் செல்கின்றன.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) ஒரு மாதிரி நகல் அரசியலமைப்புத் திட்டத்தை இந்த அரசாங்கம் வருமுன்பே தயாரித்திருந்தது. இது இந்தக் கோட்பாடுகளின் பெரும்பாலான அம்சங்களை உள்ளடக்கியிருந்தது. இதைத் தயாரிப்பதில் பல தமிழ் சிங்கள புத்திஜீவிகள் பங்குபற்றி இருந்தார்கள். (இதுபற்றியும் சரிநிகரில் குறிப்பிடப்பட்டிருந்தது) ஆயினும், தமிழ் கட்சிகள் இதையிட்டு பெரிய அக்கறை காட்டவில்லை அரசாங்கமும்தான்.

சந்திரிகா அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்தமாக அறிவிக்கப்பட்ட 'தீர்வுப்பொதி'யின் சட்டவரைபின் போதாமை இப்போது எல்லாக்கட்சிகளாலும் கூறப்படுகிறது. ஆனால், 'ஈழம் வேண்டாம், ஐக்கிய இலங்கைக்குள் தீர்ப்போம்' என்று கூறும் எந்தக் கட்சிகளும் தாமாக ஒரு தீர்வுத்திட்டத்தை தயாரித்து, அதன் அடிப்படையில் தமது போராட்டத்தை நடாத்தத் துணியவில்லை. மாறாக, இவ்வளவு காலத்திற்குப் பிறகு இப்போதும் திம்புக் கோட்பாடுகளை மட்டுமே சொல்கிறார்கள்.

இன்னமும் கூட இவர்கள் அதில் ஈடுபடமுடியும். ஆனால் ஒரு விடயம்.

1985ல் பெரிதாக கவனிப்புப் பெறாத ஒரு விடயம் இன்று 1997ல் எழுந்துள்ளது. அந்த விடயமும் இந்த அடிப்படைகளுள் சேர்க்கப்படுவது இன்றைய நிலையில் மிகவும் அவசியமாகும். அதாவது, வடக்கு கிழக்கு - இத்திம்புக் கோரிக்கைகள் குறிப்பிடும் தாயகம் அங்கு பாரம்பரியமாக வாழும் முஸ்லிம் மக்களதும் தாயகமே என்பது ஏற்றுக் கொள்ளப்படுவதும், அவர்கள் வெறும் மதச் சிறுபான்மையினர் அல்ல, அவர்களும் ஒரு தனித்துவமிக்க தேசிய இனமாவர் என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதும் அவசியமாகும். இவ்வாறான அடிப்படைகளின் மீதே ஒரு மாற்று அரசியல் தீர்வை இக்கட்சிகளால் உருவாக்க முடியும். செய்வார்களோ என்னவோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தீர்வுப் பொதியும் இல்லை திடீர் தேர்தலும் இல்லை!



கடந்த 9ம்திகதி புதிய அமைச்சரவை மாற்றமும் அதற்கு அடுத்த தினமான 10ம்திகதி தாண்டிக்குள இராணுவ விநியோகத் தளத்தைத் தாக்கி அழித்த விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கையும் கடந்த வாரத்தில் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள்.

வன்னி - யாழ் தரைப்பாதையை திறக்கும் இலங்கை அரசாங்கத்தின் ''வெற்றி நிச்சயம்'' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து ஒரு மாத காலத்தின் பின் அவ்விராணுவ நடவடிக்கையின் பெறுபேறு இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்ததை விட மிகவும் தோல்வி நிலையில் இருந்த வேளை, அதன் பிரதான செயற்பாட்டு, விநியோக மையமாகவிருந்த தாண்டிக்குள படைத்தளத்தை விடுதலைப்புலிகள் தாக்கி அழித்ததோடு, அப்பிரதேசத்தை 48 மணிநேரம் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்து திரும்பிச் சென்றனர்.

இலங்கை இராணுவம் 500 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட ஆயுதத் தளபாட இழப்புக்களை இத்தாக்குதலில் சந்தித்தும், தனது ஆட்படைபலத்தில் 300க்குமேற்பட்ட இராணுவத்தை இழந்தும், 500 க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தும் வடக்கின் இராணுவ தளத்தில் பின்னடைவு கண்டிருக்கின்றனர். கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாகத் தொடரும் யாழ்ப்பாண தரைவழிப்பாதை திறப்பு யுத்தத்தில் தாண்டிக்குள தாக்குதலில் இழந்த படையினரை விட மேலும் பல நூற்றுக்கணக்கான படையினரை இழந்திருக்கும் இலங்கை இராணுவத்திற்கு விடுதலைப்புலிகளின் இத்தற்கொலைத் தாக்குதல் முயற்சி பாரிய அதிர்ச்சியையும் பின்னடைவையும் ஏற்படுத்தியிருக்கிறது.

சிங்களத் தேசத்தைக் காப்பதற்கான யுத்தமாக வடக்கு நோக்கிய படை நகர்வை இலங்கை அரசு பிரச்சாரப்படுத்தி தெற்கிலுள்ள வறிய சிங்கள இளைஞர் - யுவதிகளை தங்களது இராணுவப் படைக்குள் உள்வாங்கி வரும் கடந்த கால சூழலில், இலங்கை அரசாங்கமும் அதன் இராணுவமும் ஆட்பலத்தை திரட்டும் முயற்சியில் பலத்த தடைகளையும், வீழச்சிகளையும் கண்டுவரும் இத்தருணத்தில் இராணுவத்தின் ஆயிரக் கணக்கான படையிழப்பு கடந்த் ஒரு மாத காலத்திற்குள் ஏற்பட்டிருப்பதானது பலத்த வீழ்ச்சியையும் சிக்கலையும் இலங்கை இராணுவம் எதிர்நோக்குவதில் உச்ச கட்டத்தை அடைந்திருக்கிறது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவச் செயற்பாடு அதிகரித்த வண்ணமிருக்கிறது. வெலிக்கந்தை தொடக்கம் களுவாஞ்சிக்குடி வரையான பிரதேசங்களில் அண்மையில் இலங்கை இராணுவத்திற்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் உயிரிழப்புகளும் அதிகரித்திருக்கின்றன. இராணுவம் நகர முடியாத பெரும் எதிர்ப்பு மிக்க பிரதேசமாக வாழைச்சேனை நகர் இன்று மாறிவிட்டது.

''வெற்றி நிச்சயம்'' இராணுவ நடவடிக்கை மூலம் வடக்கில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்திருக்கும் சூழலில், ஏற்கெனவே நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின் மூலம் கைப்பற்றப்பட்ட யாழ் நகரத்தில் மக்கள் அச்சத்திற்கும் பாதுகாப்பற்ற உத்தரவாதமில்லாத இராணுவ நிர்வாகத்திற்குள் மூடுண்டு சிக்குப்பட்டிருக்கும் சூழலில் யுத்தத்தை முன்னெடுப்பதற்காக தனக்கு தேவையான பொருளாதார உதவிகளையும், சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும்-



எம். பௌசர்

தீர்வுத் திட்டம் என்ற வெறும் பிரச்சாரத்திற்கான யுக்தியை அரசு முன்னெடுத்துச் செல்கிறது.

கடந்த ஒகஸ்டில் முன்வைக்கப்பட்ட சந்திரிகா - பீரிஸ் தீர்வுத்திட்டம் யுத்தத்தை தீவிரமாக முன்னெடுப்பதற்கு வெளியுலகிற்கு காட்டப்பட்ட வெறும் காகிதப்பூச்சாண்டி என நிரூபிக்கப்பட்டு வரும் அதன் ஆயுள் முடிந்து விடும் அரசியல் தருவாயில் அது இன்று உள்ளது. தமிழ்க் கட்சிகளைக் கூட திருப்திப்படுத்தாத இத்தீர்வுத் திட்டம் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கான அடிப்படை காரணிகளுக்கு தீர்வு கண்டாக வேண்டிய முக்கிய விடயங்களில் வெறும் கானல் நீராகவே உள்ளது.

ஒற்றையாட்சித் தீர்வா? அல்லது ஒற்றையாட்சிக்கு புறம்பானதீர்வா? வடகிழக்கு இணைப்பா, பிரிப்பா? அதிகார அலகு என்பன போன்ற முக்கிய விடயங்களில் காலத்தை இழுத்தடித்து தீர்வை வெறும் காகிதமாக மாத்திரமே வைத்துக் கொள்ள அரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஆடிய நாடகத்தில் இப்போது தமிழ்க்கட்சிகளும் ஏமாற்றம் கண்டு விட்டிருக்கின்றன. திம்புவில் தொடங்கி ஜே.ஆரின் வட்டமேசை மகாநாடு, பிரேமதாசாவின் மங்கள முனசிங்கத் தெரிவுக்குழு, சந்திரிகாவின் தீர்வு, பீரிஸின் பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற வெறும் காலம் கடத்தல் நாடக முயற்சியே இத்தீர்வுத்திட்டம் என நிரூபிக்கப்பட்டுவிட்டது.

கடந்த கால ஐக்கிய தேசியக் கட்சியை விடவும் தமிழ் முஸ்லிம் மக்கள் தொடர்பான அணுகு முறையில் எவ்விதத்திலும் குறைந்ததல்ல என நிரூபித்துவிட்ட சந்திரிகாவின் அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை தீவிரமாக முன்னெடுப்பதன் ஊடாக தமிழ் மக்களின் போராட்டக் குரலை நசுக்கி விடுவதில் குறியாயிருப்பதன் மூலம் தங்களது சிங்கள மேலாதிக்கப் பார்வையை வெளிப்படுத்துகின்றது.

ஈ.பி.டி.பி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ், ரெலோ போன்ற தமிழ்க் கட்சிகளைக் கூட திருப்திப்படுத்தாத சந்திரிகாவின் இத்தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றும் என்பதில் எந்தவிதமான நம்பிக்கையும் இல்லை.

புதிய அமைச்சரவை மாற்றத்தினால் எழுந்துள்ள சூழலில் அண்மைக் காலமாக எழுப்பப்படும் கேள்வி திடீர் பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படுமா என்பதாகும். சந்திரிகாவின் பலவீனமான அரசாங்கம் இன்றைய நிலையில் ஒரு பொதுத்தேர்தலை சந்திப்பதற்கு எந்த வகையிலும் தயாரில்லை என்பதே யதார்த்தமாகும். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருளாதார நெருக்கடி, ஜனாதிபதித்துவ முறையை நீக்காமை, பொதுசனத் தொடர்பு சாதனத்துறை மீதான கட்டுப்பாடு, ஊழல் மலிந்த பலவீனமான நிர்வாகம் போன்ற பல்வேறு நெருக்கடிகளில் சிக்கித் திணறும் சந்திரிகாவின் அரசு கடந்த கால தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்ட சூழலில் மக்களை ஒரு திடீர் பொதுத்தேர்லின் ஊடாக சந்திப்பதற்கு தயாராகவிருக்காது. அரசின் அமைச்சரவையில் இருந்து ஸ்ரீமணி நீக்கப்பட்டது அரசாங்கத்திற்கு ஒரு போதும் அச்சுறுத்தலாக அமையப் போவது இல்லை. ஸ்ரீமணி தனது அரசாங்கத்தையே கவிழ்த்து விடுவார் என சந்திரிகா நம்பி இருப்பின், ஸ்ரீமணியை ஒரு போதும் அமைச்சரவையிலிருந்து நீக்கி இருக்க மாட்டார் என்பதே உண்மை.

ஸ்ரீமணி லலித் அத்துலத்முதலி கடந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலிலேயே போட்டியிட்டிருந்தார். இதனால் ஸ்ரீமணி தனது பாராளுமன்ற பதவியை காப்பாற்ற வேண்டிய பலவீனமான நிலையிலேயே உள்ளார். ஸ்ரீமணியுடன் தெரிவான எம்.பி.க்கள் அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்களாக இன்று இருக்கின்றனர். ஸ்ரீமணி தனது கட்சிக்கும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட தேர்தல் கால உடன்பாட்டை மட்டுமே பேசலாமே ஒழிய பொ. ஐ. முக்குள் ஒரு பேரம் பேசும் சக்தியாக நின்று சந்திரிகாவை பயமுறுத்த முடியாது என்ற உண்மையே ஸ்ரீமணியை தூக்கிவீச காலாயிருந்திருக்கிறது. ஆகவே ஸ்ரீமணியின் அமைச்சரவை நீக்கம் ஒரு திடீர் பொதுத் தேர்தலை சந்திக்கும் அரசியல் நெருக்கடிக்கு வழி வகுக்காது!

அடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிலைப்பாடு, அமைச்சர் அஷ்ரஃப்பின் புனரமைப்பு - கிழக்கு தவிர்ந்த புனர்வாழ்வு அமைச்சை நீக்கியதும் தொலைத்தொடர்பு பிரதி அமைசசராகவிருந்த ஹிஸ்புல்லாவை நீக்கியதும், ஹிஸ்புல்லா தனது புதிய பிரதி அமைச்சர் பதவியை இன்னும் ஏற்காததும் திடீர் பொதுத்தேர்தல் ஒன்றை நோக்கித் தள்ளும் வாய்ப்பை ஒருநாளும் தராது! ஏனெனில் அமைச்சர் அஷ்ரஃப் பொதுஜன முன்னணி அரசின் பாராளுமன்ற ஆயுட்காலம் முடியும் வரையும் பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான தனது கூட்டை முறித்துக் கொள்ள விரும்ப மாட்டார்! இவ்வுறவு நீடிப்பிற்கான அவசியம் உள் நிலவரங்களை விடவும் வெளிநிலவரங்களால் அஷ்ரஃப்க்கு அவசியமானதாகவும், தனது கட்சியின் ஸ்திரத்திற்கு நிலைக்காரணியாகவும் இருக்கிறது. தனது 7 பாராளுமன்ற பிரதிநிதிகளும் (ஒருவர் பொ. மு. தேசியப்பட்டியல் உறுப்பினர்) அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொள்ளும் போது அதைவிடவும் அதிகரித்த தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தங்களது ஆதரவை அரசாங்கத்திற்கு வழங்கினால் முஸ்லிம் காங்கிரஸின் நிலை என்னாகும் என்ற ஐயப்பாடு அமைச்சர் அஷ்ரஃப்புக்கு இருக்கும்வரை அமைச்சர் அஷ்ரஃப்பின் ஆதரவு பொதுஜன முன்னணிக்கே இருக்கும்.

## உள் விழுங்கிய கணங்கள்



இன்றைய எழுதலிலும்
இங்கொன்றும்
அங்கொன்றுமாய்
இருப்புக் கொள்ளாமல்
மௌனம் கொள்கிறேன்

இருட்குகை
உள்ளளுக்குகளில்
படிந்த ரணமும் சதையும்
**இன்னமும்**
மணக்கிறதெனில்....

உட்புகுந்தெழுந்த
நெருப்பாற்றில்
உயிர் காவி
உடனிருந்தோரையும்
சேர்த்தே கொன்றொழித்து
ஓராயிரம் ஆண்டுகளை
உள் விழுங்கிய கணங்கள்
ஒன்றென எழுகையில்...

மறுபடியும் மறுபடியும்
வெடித்துச்சிதறி
மௌனம் கொள்கிறேன்.

என் பிரிய நண்பர்களே....
வாழ்வின் முகங்களில்
எச்சம் பூசி
கனவுகளை சுமக்கத்தந்த
காலங்களேதும்
இன்னமும் உங்கள்
மன இருப்புகளில்
மிச்சமிருக்கிறதா....?

1997.06.11

ப. ரவிவர்மன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பின் நவீனத்துவமும் பின் காலனித்துவமும்

கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்

பின் நவீனத்துவம் (Post modernism) பற்றி அண்மைக் காலங்களில் நிறையவே பேசப்பட்டு வருகிறது. பின் நவீனத்துவம், அடிப்படையில் வாழ்நிலையினை குறிக்கும் ஒரு பதமாகும் (Post modern condition). இந்த வாழ்நிலை காரணமாக குறிப்பாக மேலைத்துவ நாடுகளில் வாழ்பவர்களது உலகம் பற்றிய நோக்கு மாற்றமடைந்து வருவதாகவும் - குறைந்த பட்சம் மாற்ற மடையும் தேவை ஏற்பட்டுள்ளதாகவும் கருதப்படுகிறது.

பின் நவீனத்துவ சிந்தனையின் வளர்ச்சியின் விளைவால் ஏற்பட்டு வரும் ஒரு முக்கிய மாற்றம் பின் காலனித்துவம் (Post colonialism) பற்றிய கருத்துநிலையில் ஏற்பட்டு வரும் விரிவாக்கமாகும். இந்த கருத்து நிலை மாற்றத்தை விளங்கிக் கொள்வதற்கு காலனித்துவ கால பாதிப்புகளையும் அதன் பின்னணிகளைப் பற்றியும் சிறிது ஆராய்வது அவசியம்.

காலனித்துவ ஆட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகள் அடிப்படையில் இரண்டு வகையின. ஒன்று காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் நிலவிவந்த கலை, இலக்கிய, கலாசார சூழ்நிலையில் ஏற்பட்ட சிதைவு. பாரம்பரியமாக கலை இலக்கிய முயற்சிகளில் ஏற்பட்டு வந்த வளர்ச்சி காலனித்துவ ஆட்சியினால் முக்கியத்துவமிழந்து சிதைவுக்கும், தேய்விற்கும் உள்ளாகின. இரண்டாவது ஒரு 'நன்மையான' விளைவாகக் கருதப்படக் கூடியது. காலனித்துவ மேலாதிக்கத்திலிருந்து பெற்றுக்கொண்ட 'நவீனமயமாக்கல்'தான் அது.

இந்த 'நவீனமயப்பாடு' ஐரோப்பிய மையவாதத்தை நோக்கிய ஒடுக்கப்பட்ட வரலாற்றுப் போக்கினைக் கோரி நிற்கிறது. இது பற்றி ஒரு புதிய பார்வைக்கோணத்தையே பின்நவீனத்துவமானது திறந்து விட்டுள்ளது.

காலனித்துவ மேலாதிக்க நாடுகள், தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை விஸ்தரித்த பொழுது அந் நாடுகள் அறிவொளிக் காலத்திலும் (Enlightenment) நவீனகாலப்பகுதியிலும் வாழ்ந்து கொண்டிருந்தன. அதாவது இம்மேலாதிக்க நாடுகள் புதிய அறிவியல் வளர்ச்சிக்கும் கைத்தொழில்மயப்பாட்டிற்கும் உட்பட்டுக்கொண்டிருந்த காலமது. இவர்கள் ஆக்கிரமித்த நாடுகள் இவர்களது அளவுகோலின்படி அறிவுக்கு எட்டியபடி - பின் தங்கிய காட்டுமிராண்டித்தனமான நாகரீகமற்ற நாடுகளாயிருந்தன. ஆகவே இக்காலனித்துவ நாடுகளை பின் தங்கிய நாடுகளாகக் கருதி தமது வருகை, 'அறிவொளியை' ஏற்படுத்தும் எனக் கருதினர். இதனடியாகவே தம்மை முதலாம் உலக நாடுகள் என்றும் காலனித்துவ நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் என்றும் இவர்கள் அழைத்தனர்.

இந்த நோக்குநிலை ஐரோப்பிய மையவாத (Eurocentric) சிந்தனையின் ஒரு வெளிப்பாடாகும். இது உலக வரலாற்றை ஒத்த போக்குடைய நேர்கோட்டிற்குரிய ஒரு வரலாற்றுக் கருதி 3ம் உலக நாடுகள் முதலாம் உலக நாடுகளை நோக்கி வளரும் ஒரு முயற்சிதான் முன்னேற்றம், அதுதான் வரலாற்றின் பாதை எனக் கருதும் ஒரு போக்கு.

வரலாறுகளை தனித்தனியான மூலகங்களாக அங்கீகரிக்காது - ஐரோப்பிய மையவாத சிந்தனையை நோக்கிய வளர்ச்சிதான் வரலாறு எனக்கொண்டு பொதுமைப்பாடெய்திய வரலாற்றுப் பார்வையினை முன் வைக்கும் இந்தப் போக்கு பிரதான கருத்தாடல் (Grand Narrative) வகையினைச் சார்ந்தது.


இந்த இடத்தில்தான் லொயிடாடினது (Jean Francois Lyotard) பின் நவீனத்துவ கருத்தாக்கம் முக்கியத்துவம் பெறுகிறது. லொயிடார்டினது கருத்துப்படி பின் நவீனத்துவ வாழ்நிலையில் பிரதான கருத்தாடல்கள் (Grand Narratives) வலுவிழந்து போய்விட்டன. இவை பல சிறு கருத்தாடல்களால் (Little Narratives) மாற்றீடு செய்யப்பட்டு விட்டன.

உலக செயற்பாடுகளையோ அல்லது நிகழ்வுகளையோ பொதுமைப்படுத்தி அவற்றை ஒரு பொதுவான விளக்கமுறையில் அணுகுவது அல்லது விளக்க முயல்வது பிரதான எடுத்துரைப்புகள் அல்லது பிரதான கருத்தாடல்கள் என லொயிடார்ட் வழங்குகிறார். இதற்கு மதம், மார்க்சிசம் போன்றவையை உதாரணங்களாகக் காட்டலாம். இந்த கருத்தாக்கத்தை லொயிடார்ட் தனது Post modern condition: a report on knowledge என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார்.

பொதுமைப்பாடெய்திய பார்வையின் வீழ்ச்சி பின் நவீனத்துவத்தின் ஒரு பிரதான பண்பு. இதை லொயிடார்.. மட்டுமல்ல மற்றும் சில பின் நவீனத்துவ சிந்தனையாளர்களும் வெவ்வேறு வடிவங்களில் முன் வைத்துள்ளனர்.

கருத்தியல் மட்டத்தில் மட்டுமல்லாது செயற்பாட்டுத் தளத்திலும் பின்நவீன வடிவங்களில் இதனை நாம் காணலாம். பின்நவீன கட்டிடக்கலை இதற்கு ஒரு சிறந்த உதாரணம். நவீன கட்டிடக்கலையானது பொதுமைப்பாடெய்திய சர்வதேசப் பாணியிலான கட்டிட வடிவங்களை அறிமுகப்படுத்தியது. இதுவே நாம் அநேக தலைநகரங்களில் காணும் கண்ணாடிப் பெட்டிகளை அடுக்கி வைத்தாற்போல காணப்படும் நீண்ட கட்டிடங்கள். இந்த சர்வதேசப் பாணி பின்நவீனத்துவத்தில் செல்வாக்கு இழந்து விட்டது. இது பிரதேச தனித்துவத்தை பிரதிபலிக்கும் கட்டிட வடிவங்களால் மாற்றீடு செய்யப்பட்டுள்ளது.

இது பின்நவீனத்துவம் ஏற்படுத்தியுள்ள முக்கியமான சிந்தனை தளப்பெயர்ச்சி. காலனித்துவ நாடுகள் பின்நவீனத்துவ வாழ்நிலையை அடைந்துள்ளனவா என்ற கேள்வி ஒரு புறமிருக்க, பின்நவீனத்துவ வாழ்நிலை மேலைத்தேயவர்களிடையே காலனித்துவ நாடுகள் பற்றிய அவர்களது கணிப்பின் அடிப்படைகளைக் கேள்விக்குள்ளாக்கியிருப்பது ஒரு முக்கியமான விடயமாகும்.



காலனித்துவக் காலத்தில் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நாடுகளில் நிலவி வந்த கலை இலக்கிய முயற்சிகளை மேலைத்தேயத்தார் தமது அறிவுக்கு எட்டியபடி தமது அணுகுமுறைகளைப் பாவித்து விளங்கிக்கொள்ள முயன்றார்கள். தமது கலை இலக்கிய வடிவங்களை உச்சவடிவமாகக் கொண்டு அதன் சார்பாகவே அவர்கள் இவற்றை மதிப்பீடு செய்தார்கள். இதனால் காலனித்துவ நாடுகளின் கலை இலக்கியங்களை ஆதிகால அல்லது மரபுரீதியானவை என நாமம் சூட்டி தமது வடிவங்களை அறிமுகப்படுத்தினார்கள்.

கிரேக்க, ரோம வழித்தொடரில் வந்த கலை இலக்கிய வடிவங்களுடன் பரிச்சயமான மேலைத்தேசத்தவருக்கு அதற்குப் புறம்பான கலை இலக்கிய வளர்ச்சி நெறிகளை அணுகும் ஆற்றல் இருக்கவில்லை. இதனால் இவர்களுக்கு இந்திய ஓவியம் 'விகாரமடைந்த பயங்கர' உருவங்களாக (Ruskin) காட்சியளித்தன. இந்த விதமான நோக்குநிலைதான் சேர். ஜோர்ஜ் பேட்வுட்டை (Sir George Birdwood) புத்தருடைய சிலையை பற்றி பின் வருமாறு கூறவைத்தது.

"This senseless similitude, by its immemorial fixed pose, is nothing More than an inspired brasen image, vacuously squinting down its thumbs, knees And toes. A boiled suet pudding could serve equally well as a symbol of passionate purity and serenity of soul"

இந்தப் பார்வை பிற் காலங்களில் விரிவடைந்தாலும் கூட கீழைத்தேய கலை இலக்கியங்களை மரபுகளாகக் கருதி படைப்பாற்றலை இரண்டாம் பட்சமானதாகவே மேலைத்தேயத்தவர் கருதினர்.

கீழைத்தேயவரின் கலை இலக்கிய பண்பாட்டு அம்சங்களை மேலைத்தேயத்தவரிடத்தில் அறிமுகப்படுத்தியதில் முதன்மையானவர் ஆனந்த குமாரசாமி ஆவார்.

இவர் கூட கீழைத்தேய கலை இலக்கிய வடிவங்களை மரபு நிலைப்படுத்தி அவற்றின் தத்துவ அடித்தளங்களையும் பாரம்பரியத்தன்மையையும் பற்றிக் கூறினாரே தவிர அவற்றின் கலைத்துவ சிறப்பைக் காணத்தவறிவிட்டார்.

குமாரசாமி கீழைத்தேய கலை வடிவங்களை யதார்த்தவாத வடிவங்களாகவே காண விரும்பினார். விகாரங்களை பூரணமின்மையின் வெளிப்பாடாகவே கருதினார்.

குமாரசாமி தனது மத்திய கால சிங்கள ஓவியம் என்ற புத்தகத்தில் (Medieval sinhalese art) சிங்கள ஓவியர்களுக்கு உருவங்களை சரிவரக் கீறத்தெரியாது எனப் பல இடங்களில் கூறியுள்ளார். இது எவ்வளவு தூரம் உண்மை என்பது கேள்விக்குரியது. இது ரஸ்கின் (Ruskin) இனது கருத்திற்கு ஒப்பானது.

சிங்கள ஓவியர்கள் ஏற்படுத்திய இந்த உருவ விகாரங்களுக்கான (Distortion) அடிப்படைகள் என்ன என்பது ஒரு ஆய்விற்குரிய விடயம். ஒன்று குமாரசாமி கூறுவதைப் போல் உருவங்களை கீறத்தெரியாததால் ஏற்பட்ட விகாரமாக இருக்கலாம். அல்லது இந்த விகாரப்படுத்தல்களுக்கான அடிப்படை முற்றிலும் வேறானதாக இருக்கலாம்.

இலங்கையின் ஆதிகால ஓவியங்கள் ஓலைகளிலேயே வரையப்பட்டன. இவை பெரும்பாலும் மதச் சார்புடைய சட்டங்களுக்காக வரையப்பட்ட குறியீடுகளாகவே அமைந்தன. பிற்காலங்களில் வரையப்பட்ட விகாரை சுவரோவியங்கள், குகை ஓவியங்கள் என்பன இந்த ஓலைகளில் காணப்பட்ட குறியீடுகளையும் உருவங்களையும் அடிப்படையாகக்கொண்டே வரையப்பட்டன. ஓலைகளில் உருவங்கள் வரையப்படும் பொழுது, ஓலைகளில் காணப்படும் ரேகைகளின் தன்மையினால் உருவ விகாரம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

இதே குறியீடுகளை பிற்காலத்தில் சுவரோவியங்களில் வரையும் பொழுது உருவ ஒற்றுமையை பேணும் பொருட்டு இந்த விகாரங்கள் பேணப்பட்டிருக்கலாம். மேலும் இந்த விகாரங்கள் நவீன ஓவியத்திலுள்ள விகாரங்களைப் போல ஓவியனின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடாக இருக்கலாம்.

ஆக, யதார்த்தவாத நியமங்களைக் கொண்டு இவற்றை முற்றிலும் விளக்க முனைவது இயலாத விடயமாகும். காலனித்துவ மேலாதிக்கப் பண்பைக் கொண்டவர்களின் நோக்கில் கீழைத்தேய கலை இலக்கியங்கள் மரபுரீதியானவையாகவும், அதிகாரத்திற்குரியனவாகவும் நோக்கப்படுவதற்கு முக்கிய காரணம் அவற்றின் சிக்கற் தன்மையே.

கீழைத்தேய நாடுகளில் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் நிலவிவந்த கலை இலக்கிய சமூக ஊடாட்ட முறைகளை (Discursive Practices) மேலைத்தேய அணுகுமுறைகொண்டு விளங்கிக்கொள்ள முடியவில்லையென்பதே அடிப்படை உண்மையாகும்.

நவீன ஓவியத்திற்கு விகாரம் ஒரு புதுமையாக இருக்கலாம். இருந்தாலும் பிள்ளையாரில் உள்ள விகாரம் நவீன ஓவியம் காணாதது. கீழைத்தேய கோவிற் சிற்பங்களிலும் கீழைத்தேய சமயச்சடங்குகளிலும் காணப்படும் அரூப உத்திகளும் குறியீடுகளும் மேலைத்தேய நவீன கலைகள் காணாதது.

ஆக, மேலைத்தேசத்து நவீனவாதமும் (Modernism) காலனித்துவ ஆட்சியின் பின் நாம் கண்ட நவீனவாதமும் வேறானவை. இது ஊடாட்ட முறைமைகளின் பன்முகத்தன்மையினால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே ஒரு தனித்துவ ஊடாட்ட முறைமையினால் உருவாகும் வரலாற்று இயக்கப் போக்கினை பொதுமைப்பாடெய்திய ஒரு ஊடாட்ட முறைமையினூடாக அணுகுவது ஒரு வகையான பிரதான கருத்தாடலாகவே கொள்ளப்பட வேண்டும்.

இந்த மேலைத்தேய, கீழைத்தேய இடைவெளிக்கு குறிப்பாக அதன் காலனித்துவ பரிமாணத்திற்கு ஊடாட்ட பண்புகளின் பன்முகத்தன்மை மட்டும்தான் காரணம் என நாம் கூறி விட முடியாது. காலனித்துவ ஆட்சி ஏற்படுத்திய சமூக மாற்றமும் இதற்கு ஒரு முக்கியமான காரணமாகும்.

காலனித்துவ மேலாதிக்க நாடுகள் ஏற்படுத்திய சமூக மாற்றத்தினை நாம் இரண்டு தளங்களில் நோக்கலாம். ஒன்று, கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றம். இது ஊடாட்ட பண்பில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் சுதேசியத்தன்மைகளில் ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. அதே வேளை சுதேசிய கலை இலக்கிய சமூக ஊடாட்ட பண்பினை முக்கிய மற்றதாக்கியது. இரண்டாவது, காலனித்துவ ஆட்சி மரபுமுறையாக நிலவிவந்த சமூக அடுக்கமைவு முறைமையையும், அதிகாரப்பகிர்வு முறைமையையும் மாற்றி புதிய முறையினை அறிமுகப்படுத்தியது. இந்தப் புதிய சமூக அடுக்கமைவு முறையில் முதன்மைபெற ஒரு திறந்த முறையினை அறிமுகப்படுத்தியது. இதன்மூலம் சுதேசிய சமூகத்தின் உயர்நிலையில் இருந்தோரும் ஏனையோரும் சமநிலையில் நின்று இந்தப் புதிய அடுக்கமைவிற்கு போட்டி போட வேண்டிய நிலை உருவானது.

இந்தப் போட்டியில் தமது மேன்நிலையை பாதுகாத்துக்கொள்ள விரும்பிய சுதேச மேல்நிலையினர் மேலைத்தேசத்தவரின் முகவர்களாகத் தொழிற்பட வேண்டியதாயிற்று. இதன் வழியாக மேலைத்தேய போக்கு உயர்வின் சின்னமாக மாற்றமடைந்தது.

இந்த இரு தள சமூக மாற்றமும் சுதேச சமூகத்தில் அதுவரை காணப்படாத ஒரு வகை ஜனநாயகப்படுத்தலையும், மனிதம் பற்றிய ஒரு புதிய கணிப்பையும் உருவாக்கியது. இதுவே காலனித்துவ ஆட்சி ஏற்படுத்திய நவீனத்துவத்தின் (Modernity) அடிப்படையாக அமைந்து நிற்கிறது.

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறிந்த பனையிலிருந்து

# இந்தியர்களை எதிர்கொள்ளல்

**2.4 யுத்தத்தின் போது இந்தியர்களை எதிர்கொள்ளுதல்**

மக்கள் இந்திய அதிகாரிகளை எதிர்கொண்டபோது அதிகாரிகள் திமிருடனும் அதிகாரத் தோரணையுடனும் நடந்து கொண்டதாகவே எங்கள் அறிக்கைகள் சுட்டுகின்றன. எங்கு தவறு நடந்திருக்கிறது என்பதைக் கண்டுகொள்ள எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளப் படவில்லை. பொது மக்கள் அடிக்கடி துன்புறுத்தலுக்கும், பரிகாசத்துக்கும் உள்ளானார்கள். தங்கள் உணர்ச்சிகளை அவர்கள் தங்களுக்குள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டிருந்தனர்.

மறுபக்கத்தில் சிந்திக்கவல்ல சில இளம் அதிகாரிகள் நுண்ணறிவுடன் செயற்பட்டனர்; மரியாதையுடன் நடந்து கொண்டனர்; பொதுமக்களுடன் பேசி நிலைமையைத் தெரிந்து கொள்ள ஆவலுற்றவர்களாக இருந்தனர். இவர்களில் இளம் மேஜர் ஒருவரும் இருந்தார். பெண்களுக்கு பிரச்சினை ஏற்படுவது பற்றி அவர் தெரிந்திருந்தார். பெண்கள் தமக்கு ஏதாவது அபாயம் வரவிருப்பதாகத் தெரிந்தால் கூச்சலிடுமாறு அவர் ஆலோசனை வழங்கியிருந்தார். நாங்கள் கேள்விப்பட்ட எல்லாச் சம்பவங்களிலும் இந்த யுக்தி பயனுள்ளதாக இருந்திருப்பதாகவே தெரிகிறது. ''வெளியில் வாருங்கள். பயப்படாதீர்கள்'' போன்ற தமிழ் வார்த்தைகளை அவர் தனது நாட் குறிப்பில் குறித்து வைத்திருந்தார். இந்தியப்படையின் முன்னேற்றத்தின் போது தான் டவுனில் இருந்ததாகவும் மக்கள் தங்களால் முகாம்களுக்குச் சென்று கொள்ள முடியவில்லையென்று அவரிடம் தெரிவித்தபோது அத்தகைய சந்தர்ப்பங்களில் கதவுகளைத் தாழிட்டுக்கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்குமாறு தான் அவர்களுக்கு அறிவுறுத்தியதாகவும் அவர் எங்களிடம் கூறினார். அவரை எங்களுக்கு நன்கு தெரியுமாதலால் அவர் உண்மையைச் சொல்வதாகவே நாங்கள் நம்புகிறோம்.

ஒரு முழு அளவு யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததாகவே இந்திய அதிகாரிகள் பொதுவாக நம்பினார்கள். பெரும்பாலான அதிகாரிகள் மோதல்கள் ஆரம்பமான பிறகுதான் கொண்டுவரப்பட்டனர். தாங்கள் எதிர்கொள்ள வேண்டிய சிக்கலான சூழ்நிலைகள் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அல்லது மிகக் குறைவாகவே தெரிந்திருந்தது. யாழ்ப்பாணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருமாறு அவர்கள் பணிக்கப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டளைப்படி நடந்து கொண்டனர். மிகவும் நவீனமான ஒரு நிலையான இராணுவத்தை எதிர்கொள்வதான எண்ணத்துடனேயே அவர்கள் செயற்பட்டனர். உண்மையில் எதிரிகள் என்போர் 2000 பேர் கொண்ட இளைஞர் குழுதான். சாத்தியமான எந்த வழியையும் கையாண்டு பொதுமக்களின் உயிர்களைப்பற்றி எந்தவிதமான அக்கறையுமின்றி அவர்கள் சண்டைப்போட்டுக் கொண்டிருந்தனர். கிடைத்த தகவல்களின் படி இந்தியப்படை 20,000 ஆட்களுக்கும் மேற்பட்டதாக இருந்தது. டாங்கிகளுடனும், துப்பாக்கிப்படை வீரர்களின் பலத்துடனும் இந்தியப்படை இருந்தது. ஃப்ரண்ட் லைன் பத்திரிகையிலிருந்தும் சில தமிழ் நண்பர்களிடமிருந்தும் பெற்றிருந்த தகவல்களை மனதில் இருத்திக்கொண்டு தாங்கள் அங்கு ஒரு அவசரத்தில் வந்து சேர்ந்ததாகவே சில அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

திருநெல்வேலி அருகே நிலைகொண்டிருந்த கூர்க்கா ரெஜிமென்டைச் சேர்ந்த மேஜர் ஒருவர் பல்கலைக்கழக அலுவலர்களிடம் பின்வருமாறு விபரித்தார்:

''இந்தியப்படையில் கூர்க்கா பிரிவு மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளக்கூடியது. சென்ற இரவு (டிசம்பர் 14ம் திகதி) திருநெல்வேலி குடியிருப்பிலிருந்து துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. யாராவது தங்களை நோக்கிச் சுட்டால் ஒழிய நீங்கள் சுட வேண்டாம் என்று நான் எனது வீரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தேன். இத்தகைய மறுதாக்குதல்களின் போது பல பொது மக்கள் பலியாவார்கள் என்ற எண்ணத்துடன் விடுதலைப் புலிகள் வெறியுடன் இருந்தது எனக்குத் தெரியும்''.

விடுதலைப் புலிகளின் யுத்தத் தந்திரத்தை கூர்க்காப் படைப் பிரிவின் ஒரு மேஜராவது புரிந்து கொள்ளுமளவிற்கு புத்திக்கூர்மை வாய்ந்தவராக இருந்தார். இந்திய அமைதிப்படையைச் சலசலப்புக்குள்ளாக்கி, ஏதாவது சகஜ நிலைமை தெரிவதாகத் தோன்றுகின்ற நிலைமையைக் குழப்பிவிடுவதற்கு ஆகச் செய்ய வேண்டியதெல்லாம் சும்மா சில தடவைகள் சுட்டுவிட்டு ஓடி விடுவதுதான் என்று விடுதலைப் புலிகள் நினைத்துக்கொண்டிருப்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார். சகஜ நிலைக்கு திரும்புவதற்கான ஒரு முன் நிபந்தனை என்னவெனில், இந்திய அமைதிப்படை முதலில் தாங்கள் உண்மையிலேயே அமைதி காக்கும் படையினர்தானா அல்லது கட்டுப்பாடு இல்லாத இராணுவப் படையா என்பதை முதலில் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இந்திய இராணுவம் அமைதி காக்கும் பணியை மேற்கொண்ட போது, தன் படையினரின் உயிரிழப்பை முன்கூட்டியே எதிர்பார்த்திருக்க வேண்டும். தங்கள் படையினரில் யாராவது கொல்லப்பட்டதும் பொதுமக்கள் மீது திருப்பித்தாக்குதல் நடத்துவது என்பது வழக்கமாகி விட்டிருந்தது. டிசம்பர் 14ம்திகதி சுன்னாகத்தில் சென்னைப் பிரிவைச் சேர்ந்த இரண்டு போர் வீரர்கள் கொல்லப்பட்டபோது பொது மக்கள் மீது மறு தாக்குதல் நடவாது போனது ஒரு விதிவிலக்கான சம்பவமே. பொது மக்களை இந்திய அமைதிப்படை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை, பொது மக்கள் மீது நடத்தப்பட்ட மறுதாக்குதல்களை அது தீவிரமாகவே எடுத்துக்கொள்ளவில்லை. நிராயுதபாணியாக இருந்த பொது மக்களைக் கொன்ற எந்த இராணுவ வீரனும் இராணுவத் தண்டனைக்குள்ளானதாக நாங்கள் கேள்விப்பட்டதேயில்லை. பொது மக்களின் இறப்பு குறித்த அசட்டையான போக்கு நிச்சயம் உயர் அதிகாரிகளிடமிருந்து வந்ததுதான். பொது மக்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவது பற்றி ஒரு இராணுவ உயர் அதிகாரியிடம் கேட்டபோது அவர் சொன்னார்: ''எனது பகுதியில் நான் எந்த ஷெல் தாக்குதலையும் நடத்தவில்லை. ஆனால் சூழ்நிலை தொடர்ந்து இப்படி நீடிக்குமானால் நான் இது பற்றி யோசிக்க வேண்டித்தானிருக்கும்.''



அடுத்த இதழில் முடியும்

## 'மாற்று' தேடல்களுக்கும் மாற்றுகளுக்குமான அமைப்பு

கொழும்பைச் சூழவுள்ள இலக்கியவாதிகள், தொடர்பூடகவியலாளர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் பிற துறைகள் சார்ந்தவர்களின் கூட்டாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது 'மாற்று' அமைப்பு.

புதிய தேடல்களுக்கும், மாற்றுகளுக்குமாக தன் பணிகளை பல்வேறு துறைசார்ந்து (இலக்கியம், அறிவியல், அரசியல், பெண்ணியம், சட்டம்...) விரித்துள்ள இவ்வமைப்பில் 60களிலிருந்து பிரவேசித்தவர்கள் முதல் 90களில் அறிமுகமானவர்கள் வரை அங்கம் வகிக்கிறார்கள்.

இருபத்தைந்து ஆரம்ப அங்கத்தவர்களைக் கொண்டு செயற்படத்தொடங்கியுள்ள இவ்வமைப்பானது மாதத்தில் ஒவ்வொரு முதற்சனியும் ஒன்று கூடுகிறது. அத்துடன் ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி தினத்தன்று பல்வேறு தலைப்புகளில் பொதுக் கருத்தரங்குகளை நடாத்தி வருகிறது. இதுவரை இவ்வாறான நான்கு கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

முதலாவது, 'நாடகம்' தொடர்பாகவும், இரண்டாவது 'சட்டம்' சம்பந்தமாகவும், மூன்றாவது 'பெண்ணியம்' தொடர்பாகவும், அடுத்தது 'சூழலியல்' தொடர்பாகவும் நடத்தப்பட்டது. குறித்ததுறை சார்ந்த கல்வியாளர்கள், ஆய்வாளர்களால் ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

தொடர்ந்தும் இவ்வாறான நிகழ்வுக்களை நடாத்தத்திட்டமிட்டிருக்கும் இவ்வமைப்பு, பயிற்சிக் கருத்தரங்குகள், நூல்வெளியீடுகள், கண்காட்சிகள் என தன் பணிகளை விரிவுபடுத்தவுமுள்ளது.

இவ்வமைப்பு நடாத்தும் கருத்தரங்குகளில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், கருத்தரங்கப் பேச்சுக்களை முன்கூட்டியே பெற்று அதை எழுத்துருவில் பங்குபற்றுபவர்களுக்கு வழங்குவதாகும். இது ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கும், மறுவாசிப்பு, பிறர் வாசிப்புக்கும் உதவுவதாக உள்ளது.

அத்துடன் இவ்வமைப்புக்குள் காணப்படுகின்ற ஒரு முக்கிய குறை போதிய தொடர்பாடல்கள் இல்லாமை. இது காலப்போக்கில் தீர்க்கக்கூடிய ஒன்றுதான்.

மேலும், இவ்வமைப்பு தன் கருத்தரங்குகளுக்கு அதிக எண்ணிக்கையானவர்களை அழைத்து, பங்குபற்றி பயன்பெறுவதற்கான வாய்ப்புக்களைச் செய்ய வேண்டும்.

இவ்வமைப்பின் ஸ்தாபக அல்லது ஆரம்ப உறுப்பினர்களுள் பெண் அங்கத்தவர்கள் இல்லாததும் ஒரு குறையே. இதுவும் நிவர்த்திக்கப் படவேண்டும்.

கொழும்பு மாநகரின் அதிவேக இயந்திர வாழ்க்கைக்குள் இவ்வாறான முயற்சிகளில் இறங்குவதும், ஈடுபடுவதும் பெரிய வேலைதான். கூடிக்கலைகிறதென்றில்லாமல், ஆரோக்கியமாக இயங்கவும் தொடங்கியுள்ள இவ்வமைப்பு பாராட்டுதற்குரியதே.

இதனுடனான தொடர்புகளுக்கும், விபரங்களுக்கும் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

''மாற்று'' - 83, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில, தெஹிவளை, கொழும்பு.

## சில புதிய, நல்ல புத்தகங்கள்.

புத்தகசாலைகள் எல்லாம் கணக்கற்ற புத்தகங்களால் நிரம்பி வழிகின்றன.

எதை வாங்குவது - எதை விடுவது.. எது நல்லது... எது பயனற்றது என்பதெல்லாம் தடுமாற்றமாகி விடுகிறது. அதை விட விரும்பும் புத்தகங்களை வாங்குவது, தேடி எடுப்பது என்பது மிகுந்த சிரமத்திற்குரிய ஒன்றாக உளளது. சில புத்தகக்கடைகளில் சில ஒழுங்குகள் இருந்தாலும், அதிலும் சிரமப்படவும் வேண்டியிருக்கிறது.

எல்லோரும் 'அதிகமாய்' வாங்குகிற புத்தகங்கள் கண்ணெதிரே நிறைய அடுக்கியிருக்க 'இவன்கள்' எதைத் தேடுகிறான்கள் என்று நினைப்பார்களோ என அஞ்சவேண்டியிருக்கிறது. நாம் நேரத்தைச் செலவளிக்கும் போது...!

''பேமஸ்'' இல்லாத ஆட்கள்ற புக்ஸ்ஸ தேடுகிறீர்களாக்கும்.. சிலவேளை அவன்கள் தான் உண்மையையும் எழுதுவார்களாக இருக்கும்...'' என்றார். ஒரு புத்தகக்கடை ஊழியர் அண்மையில்.

இன்னொரு புத்தகக்கடையில் நாம் எமது பாட்டில் தேட, கடையிலுள்ளவர்கள் அவர்கள் பாட்டில் கதைத்துக்கொண்டிருக்கிறார்கள். காது கொடுக்காமல் இருக்க முடியவில்லை. அதில் சுவையானது:

அவள்:- எனக்கு டிசம்பர் 25ல் கல்யாணம் வருவீங்கள் தானே...

அவன்:- (மௌனம்)

அவள்:- எப்ப உங்கட கல்யாணம்...?

அவன்:- டிசம்பர் 25

(இருவரும் சிரிப்பு கலந்த மௌனம்.)

இவ்வாறான சுவாரஷ்யங்களுடனும், நீண்ட பிரயத்தனங்களுடனும் சில புத்தகங்களைத் தேடி எடுக்க முடிந்தது. ''**ஆபிரிக்க சினிமா**- ராஜேந்திரன்'', ''மாற்றுக்களைத் தேடி....'', ''**உடைபடும் புனிதங்கள்**'', அ. மார்க்ஸ் ''**பின் நவீனத்துவம், இலக்கியம், அரசியல்** - அ. மார்க்ஸ், ''**உரையாடல் தொடர்கிறது - பேட்டிகளும், படைப்புகளும்** - தமிழில் ரவிக்குமார், **புதைந்த காற்று** - கன்னட தலித் எழுத்துக்கள்... ''**வெள்ளைத் திமிர்** - அ. மார்க்ஸ், மிக அண்மையில் வெளி வந்தவைகளில் எமக்குக் கிடைக்கப்பெறுபவைகளில் இவை முக்கியமானவை.

இதில் அதிகமான புத்தகங்களை 'விடியல்' பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இது அண்மையில் ஈழத்துக் கவிஞர் என். ஆத்மாவினது கவிதை நூலொன்றையும், 'மரணத்துள் வாழ்வோம்' என்ற ஈழத்துக் கவிஞர்களின் கவிதைத்தொகுப்பின் இரண்டாம் பதிப்பையும் கொணர்ந்துள்ளது. இன்னும் பல நல்ல புத்தகங்களையும் வெளியிடுகிறது.

தமிழ் எழுத்துலகில் நன்கறியப்பட்ட யமுனா ராஜேந்திரனின் 'ஆபிரிக்க சினிமா' என்ற நூலை 'நிழல்' பதிப்பகம் கொணர்ந்துள்ளது. 'குழந்தைகள் சினிமா' என்ற இவரது இன்னொரு நூலும் வெளிவந்திருக்கிறது. எனினும் அது இன்னும் இலங்கையில் விற்பனைக்கில்லை. 'இலத்தீன் அமெரிக்க அரசியல் கவிதைகள்..'' எனும் இவரது இன்னொரு நூல், இவ்வாண்டின் இறுதியில் வெளிவரவுள்ளது குறிப்பிடத்தக்கது.


ஏனைய புத்தகங்களை நிறப்பிரிகைக் குழுவினரும் ஓயாது எழுதி, இயங்கிக்கொண்டிருப்பவர்களுமான அ. மார்க்ஸும், ரவிக்குமாரும் எழுதியும், மொழி பெயர்த்தும் வெளியிட்டுள்ளனர். ''தமிழகத்தின் தற்போதைய அசைவியக்கமாக இவர்கள்தான் உள்ளார்கள். இவர்களைச் சுற்றியும், இவர்களாலேயுமே வாதப் பிரதிவாதங்கள் எழுந்து ஓர் ஆரோக்கியத்திற்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது...'' என்று அண்மையில் தமிழகம் சென்று பலரைச் சந்தித்து வந்த ஓர் நண்பர் குறிப்பிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்த புத்தகம் தலித் எழுத்துக்களை உள்ளடக்கியுள்ளது. இலக்கிய உலகில் இன்று அதிகம் பேசப்படுகின்ற 'தலித்கள்' பற்றிய கதைகளும் கட்டுரைகளுமாக இம்மொழி பெயர்ப்பு நூல் உள்ளது. தமிழ்ப்படுத்தியிருப்பவர் பாவண்ணன். மேற்குறிப்பிட்ட நூற்களும், அண்மையில் வெளிவந்த இது போன்ற நூற்களும் தேர்ந்த வாசகர்களுக்கு நிச்சயம் பயனளிக்கும். பூபாலசிங்கம் புத்தக நிலையத்திலும், வசந்தம் புத்தக நிலையத்திலும் இவற்றைப் பெறலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# PRRA இவர்...



கே.எல். தர்மசேகர, பத்மநாபா, ஷெல்டன் நொனிஸ் உட்பட கலந்துரையாடுகின்றனர்

✷ 'பிரா' தலைவரின் இருப்பிடம் கண்டுபிடிப்பு!

✷ பல ஆவணங்கள் கண்டு பிடிப்பு!

✷ இப்போதைய கொலைப் பட்டியலும், பல ஆயுதங்களும் கண்டெடுப்பு!

✷ 'பிரா' தலைவர் தலைமறைவு.

✷ 'பிரா' தலைவருக்கு டக்ளஸ் தேவானந்தா புகலிடம்!

✷ 1500 கொலைகளுக்கு தானே பொறுப்பு என பிரா தலைவர் வாக்குமூலம்!

இவ்வாறான பரபரப்பூட்டும் செய்திகள் தற்போது பத்திரிகைகளில் தினம் தினம் வெளிவந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உங்களில் பெரும்பாலானோர் இந்தச் செய்திகளை ஆவலுடன் அவதானித்து வரவும் கூடும். அதே வேளை இச்செய்திகள் பலரை அல்லோல கல்லோலப் படுத்தியும் வருகின்றன. ஜே.வி.பி., ஐ.தே.க.வின் முக்கியஸ்தர்கள், இடது சாரி அமைப்புகள், தமிழ் இயக்கங்கள் உட்பட 1987-1989 பயங்கர யுகத்தின் போது காணாமல் போனவர்களின் தாய்மார், மனைவிமார்களை இச்செய்திகள் பெரிதும் ஈர்த்துள்ளன.

### ஏன் இத்தனை பரபரப்பு?

கடந்த மே 29ம் திகதியன்று பிரா என்றழைக்கப்படும் மக்கள் புரட்சிகர செஞ்சேனையின்(P.R.R.A - Peoples Revalutionary Red Army) தலைவர் சரத் டி சில்வாவின் இருப்பிடம் என்று கூறப்படும் சிலாபக் களப்பிலுள்ள ஒரு தீவொன்றில் கண்டு பிடிக்கப்பட்டதுடன் அதிலிருந்து பல ஆவணங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டது தான் இத்தனை பரபரப்புக்கும் காரணம். இதைத் தொடர்ந்து பல தகவல்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. சரத் டி சில்வாவை பொலிஸாரால் கைது செய்ய முடியவில்லை. அவர் அங்கிருந்து தப்பி விட்டார். தப்பிய கையோடு ராவய பத்திரிகையாளர் ஒருவரை சந்தித்து வாக்குமூலமொன்றையும் கொடுத்துள்ளார். அந்த வாக்குமூலத்திலே அவர் பல தகவல்களை வெளியிட்டுள்ளார். அவை கடந்த வார ராவய பத்திரிகையிலிருந்து வெளிவரத்தொடங்கியுள்ளன. கடந்த ஜே.வி.பி. கால பயங்கர யுகத்தின் போது பல இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதற்குப் பின்னணியில் இருந்த பல கொலைக்குழுக்களில் முக்கியமானது இந்த "பிரா" அமைப்பு.

இந்த அமைப்பினை தோற்றுவித்தவர்களின் நோக்கமான்து ஆரம்பத்தில் சோஷலிச இலக்கைச் சார்ந்ததாகவே தெரிகிறது. என்ற போதும் அதன் பிற்காலப் போக்கானது எங்கு வந்து முடிந்தது என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. பிராவின் தோற்றம், நோக்கம், அது இறுதியில் வந்தடைந்த நிலை என்பன வரலாற்றில் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய பாடங்களாகும். அவற்றை இங்கு மீள தொகுத்து தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### ஜே.வி.பி தடையும்-தலைமறைவும்

1983ம் ஆண்டு அப்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.க அரசாங்கத்தினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலையை மூடி மறைப்பதற்காக அக்கலவரத்துக்கான பழி முழுதையும் இடது சாரி அமைப்புகளான ஜே.வி.பி., ந.ச.ச.க, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று கட்சிகளின் மீதும் அன்றைய அரசு சுமத்தியதுடன் அம்மூன்று அமைப்புகளையும் தடை செய்தது. இச்சம்பவத்துடன் எவ்வித தொடர்புமில்லாத இவ்வமைப்புகளின் முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டு வேட்டையாடப்பட்ட போது பலர் தலைமறைவுக்கு உள்ளாக நேரிட்டது. சில காலத்தின் பின் ஏனைய கட்சிகள் மீதான தடை நீக்கப்பட்ட போதும் ஜே.வி.பி. மீதான தடை நீக்கப்படவில்லை. 1983 ஒக்டோபரில் ஜே.வி.பியின் தலைவர் விஜேவீரவினால் ஜே ஆருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் தாம் ஆயுதவழிமுறையை கைவிட்டு ஜனநாயக வழிமுறையை நாடியிருந்தவேளையில் குற்றமிழைக்காத தம்மை தடை செய்தது நியாயமற்றதென்றும் தடையை நீக்கும்படியும் கோரப்பட்டிருந்தது.

ஆனாலும் ஜே.வி.பியின் வளர்ச்சி ஐ.தே.கவுக்கு சவாலாக இருந்து வந்ததனால் இந்த் தடையின் மூலம் ஜே.வி.பி தனது பலத்தை படிப்படியாக இழந்து இல்லாமலே போய்விடும் என்று ஜே.ஆர். அரசாங்கம் நம்பியது. ஆனால் மாறாக இந்தத் தடை ஜே.வி.பியை பகிரங்க அரசியலிலிருந்து தலைமறைவு அரசியலுக்கு தள்ளியது. அவர்கள் தலைமறைவாகவே நிறுவனமயமாகினர். தலைமறைவாக இருந்து கொண்டே தடை நீக்கத்துக்கான முயற்சிகளை செய்து வந்தனர். தலைமறைவு வேலைமுறைக்காக வேண்டி தமது நிதி நிலைமையை சீர்செய்ய ஆயுத வழிமுறையின் மூலம் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடத் தொடங்கினர். இதற்கெதிரான அரசின் அடக்குமுறையும் இதே வேளை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

### சுதந்திர மாணவர் இயக்கம்

ஜே.வி.பியின் செல்வாக்குள்ள மாணவர் அமைப்புகள் பல பல்கலைக்கழகங்களில் இயங்கின. சோஷலிச மாணவர் இயக்கம் எனும் பேரிலும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எனும் பேரிலும் இந்த மாணவர் அமைப்புகள் இயங்கின.

இதே காலப்பகுதியில் ஜே.வி.பி இனப்பிரச்சினை தொடர்பாக இனவாத சார்புக் கொள்கையை தூக்கிப்பிடிக்கவும் செய்தது. விஜேவீரவால் "ஈழப் போராட்டத்துக்கு தீர்வு என்ன?" எனும் நூலும் உற்சுற்றுக்காக எழுதி வெளியிடப்பட்டிருந்தது. 250 பக்கத்துக்கும் மேற்பட்ட இந்நூலில் இனவாத போராட்டமே ஈழப்போராட்டமென்றும் அது முதலாளித்துவ ஏகாதிபத்திய நலனுக்காக நடத்தப்படும்

யுத்தமென்றும் அதனை தோல்வி...
கூறப்பட்டிருந்தது. இந்நூல் மிகப்பர...
சென்றடைந்தது. பல்கலைக்க...
விவாதங்கள் நடந்தன. கொழும்பு...
"சுதந்திர மாணவர் இயக்க"த்தி...
மாணவர்கள் பலர் அடங்கியி...
கொள்கையிலிருந்து மாறுபட்டு இ...
ஜே.வி.பியிலிருந்து மாறுபட்டிருந்...
பல்கலைக்கழகத்தில் பலம் வாய்...
இருந்தனர். இந்த போக்கு ஜே.வி.பி...

1986 செப்டம்பர் மாதமளவி...
அமைப்புகளை "தேசாபிமா...
அழைத்துக்கொண்டது. இப்பெய...
வெளியிட்டது.

### தயா பத்திர...

இப்படியிருக்க திடீரென 1986டி...
மாணவர் இயக்க"த்தின் தலைவர...
Union) செயற்பட்டு வந்த தயா...
செய்ததுடன் ஜே.வி.பியின் படுகொ...
பத்திரன அரசாங்கத்துக்கு எதிராக...
நடத்தி வந்தவர் அத்துடன் சிங்க...

வடகிழக்கு மக்கள் மீது கட்டவிழ்...
எதிரான போராட்டத்து... நிபந்த...
கோரியது. அத்துடன் பிரிந்து தனி...
சுயநிர்ணய உரிமை அவர்களு...
மேற்கொண்டவர். பல தடவைகள்...
குண்டர்களாலும் தாக்குதலுக்...
பத்திரனவுக்கு இருந்த ஆதர...
செய்யவும் அரசாங்கம் பின்வாங்...

ஜே.வி.பி இக்காலப்பகுதியி...
ஐக்கிய முன்னணி, ஸ்ரீ லங்கா சுத...
சக்திகள் சிலவற்றுடன் கூட்ட...
சுதந்திர மாணவர் அமைப்...
தொடங்கியிருந்தது.

ஆட்சியாளர்கள் தயா...
கழகத்திலிருந்து இடை நீக்கம்...
தயா பத்திரனவுடன் கலந்துரை...
சென்ற ஜே.வி.பியின் மாணவ...
பத்திரனவின் கழுத்தை வெ...
மேலாடைகள் கழற்றப்பட்ட நில...
கண்விழிகள் திறந்த... ண்டாரக...
உடல் பிறகு கண்டெடுக்கப்பட்ட...

இந்த சம்பவத்தை ஜே.வி.பி...
மாணவர்களுக்கெதிரான அரசா...
பிரச்சாரம் செய்த அதே வே...
படுகொலையை நியாயப்படுத்...
அரசாங்கத்தின் உளவுப்பிரிவெ...
மாணவர்கள் அரசாங்கத்தினால்...
சுதந்திர மாணவர் இயக்க...
வெளியிடப்பட்டது.

இந்த சம்பவமானது ஜே.வி.பி...
முரண்பட்டிருந்த பல மாணவ...
தொழிற்பட வைத்தது.

### ஜே.வி.பி. ஆயு...

1987ம் ஆண்டு மார்ச் மாத...
எடுத்தது. அத்தீர்மானத்தில் வ...
முகாம்கள் எல்லாவற்றின் நடவடி...
சகலரையும் முழுசக்தியையும்...
பெறுமாறும் கூறப்பட்டிருந்தது...
பேசப்பட்ட ஒரு உரை, ஒலிநாடா...
உலகில் சனநாயக அலையொ...
கூறப்பட்டிருந்தது. அதே மாதம்...
எனும் பேரில் ஆயுதப் பிரிவு உ...
எதிரான அரச அடக்குமுறையி...
இவ்இராணுவப்பிரிவு தொடக்க...
"தாய் நாட்டின் சகல எதிரிகளு...
படைப்பிரிவு" என்ற பெயரில் துண...
வெளியிடப்பட்டதுடன் மாற்றுக...
தேசாபிமான மக்கள் இயக்கத்தி...

சுதந்திர மாணவர் அ...
அரசாங்கத்தினால் மட்டும...
அடக்குமுறைகளுக்கு உள்ளாக...

சுதந்திர மாணவர் இயக்கமு...

இந்த நிலையில் தான் சு.மா...
வழங்கத் தொடங்கியது. ஜே.வி...

## சவால் விடும் பொடி சில்வா!



சரத் டி சில்வா



சரத் டி சில்வாவின் இருப்பிடமான ஷிம்ஸ் தீவு

பொடி சில்வா என்றழைக்கப்படும் சரத் டி சில்வாவுக்கு அரசாங்கத்தின் பிரச்சினை வரலாம் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார். கடந்த காலத்தில் காணாமல் போனோர் குறித்து தற்போது விசாரிக்கப்பட்டுவரும் ஆணைக்குழுக்களின் முன் தான் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டாலும் ஏனைய படையினரைப் போலவே பொடி சில்வாவையும் கண்டும் காணாது விடுவர் என அவர் நம்பியிருக்கக் கூடும். தற்போதைய ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தில் உள்ள முக்கியஸ்தர்கள் பலருடன் சில்வாவுக்கு ஆரம்பத்தில் தொடர்பிருந்தது. ஐக்கிய சோஷலிச முன்னணியினரில் பலர் இன்றும் அரசாங்கத்துடன் உள்ளனர். பிரா இயக்கத்துக்கும் ஐ.சோ.முவுக்கும் ஆயுதங்களை விளங்கியவர் தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பவரான லொக்கு அத்துல எனப்படும் நிமலசிறி ஜயசிங்க. இவர் 1971 ஜே.வி.பி. கிளர்ச்சி தொடர்பான வழக்கில் முக்கிய சந்தேக நபர்களில் ஒருவர்.

ஆனால் "பிரா" பிரச்சினையை கிளப்பிவிடுவதன் மூலம் ஐ.தே.க.வை சிக்கலில் மாட்டிவிடலாம் என்று கருதியதோ என்னவோ பொடி சில்வாவை தேடும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக இறங்கியுள்ளது.

கடந்த மே மாதம் 31ம் திகதி பொடி சில்வாவின் இருப்பிடத்தை சுற்றி வளைத்து தேடினர். சிலாபத்தில் வட்டக்குளிய எனும் இடத்தில் உள்ள களப்பில் இருக்கின்ற தீவொன்றே இவரது இருப்பிடம். இந்த தீவை பொடி சில்வா 60,000 ரூபாவுக்கு 1994இல் வாங்கியுள்ளார். 3 ஏக்கர் விஸ்தீரணமுள்ளது இது. இந்த தீவின் பெயர் ஷிம்ஸ் அய்லண்ட் என்பதாகும்.

இந்தத் தீவை சுற்றி வளைத்த போது அங்கு பொடி சில்வா இருக்கவில்லை. அதனை காவல் காத்து வந்த மல்லி என்பவரையே பொலிஸாரால் பிடிக்க முடிந்ததுடன் அவருக்கு உதை கொடுத்தே தகவல்களையும் பெற்றுக்கொண்டனர்.

அங்கிருந்து எஸ்.எம்.ஜி. துப்பாக்கி, மகஸீன்கள்-2, 9 எம்.எம் தோட்டாக்கள்-74, 380 வர்க்க தோட்டாக்கள் தொகை, ஜே.ஆர். வர்க்க கைக்குண்டுகள்-3, "பிரா" ரப்பர் ஸ்டாம்புக்கள், டைரிகள், ஒலி நாடாக்கள், அல்பம்கள் என்பனவற்றுடன் சேகுவரா, கார்ல் மார்க்ஸ், லெனின், விஜயகுமாரணதுங்க, ஒஸி அபே குணசேகர, ஆகியோரின் புகைப்படங்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

டைரிக் குறிப்பில் "கடத்திக் கொண்டு வந்தோம்", "அடித்தோம்", "பணத்தை எல்லோருக்கும் பகிர்ந்தோம்", கொடுக்கல் வாங்கலை தீர்த்தோம்", "5 லட்சத்தை வாங்கிக்கொண்டு விடுவித்தோம்" என்று காணப்பட்டுள்ளது.

"5000 ரூபாவுக்கு கொலை செய்தது, 50,000 ரூபாவை வாங்கிக்கொண்டு விடுதலை செய்தது என்பன எல்லாம் டைரிக் குறிப்புகளில் இருந்துள்ளதாக விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொடி சில்வாவுக்கு டக்ளஸ் தேவானந்தா புகலிடம் அளித்துள்ளதாக சிங்களப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்திருந்தன. பொலிஸாரும் ஈ.பி.டி.பி. காரியாலயத்தை சோதனையிட்டனர். ஆனால் அங்கு சில்வா கிடைக்கவில்லை. புகலிடம் அளிக்கப்பட்டதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க சில்வாவுக்கு புகலிடம் அளித்ததாக சிங்களப் பத்திரிகைகளின் செய்தியிடலில் இனவாதமே மிஞ்சியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. டக்ளசும் வேகமாக "அவருக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை. பிராவுக்கு பயிற்சியளித்தது ஈ.பி.ஆர்.எல்.எவ். தான் என்று அறிக்கை வெளியிட வேண்டி வந்துள்ளது.

இதற்கிடையில் ஜே.வி.பி. வெளியிட்டுள்ள இது குறித்த அறிக்கையில் "ஐ.தே.க. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைக்கு பயன்படுத்திய கூலிப்படையினரை அம்பலப்படுத்த கிடைத்திருக்கின்ற சாட்சிகளை சரியான முறையில் விசாரிக்க வேண்டுமென்று கோரியுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்ய வேண்டுமென்றும்
அதன் உறுப்பினர்களை
களில் இது குறித்து பல
லைக்கழகத்தில்இயங்கிய
ரச எதிர்ப்பு முற்போக்கு
போதும் ஜே.வி.பியின்
னர். கொள்கை ரீதியாக
த தரப்பினரே கொழும்பு
ாணவர் அமைப்பாகவும்
பெரும்சவாலாக இருந்தது.

ஜே.வி.பி தனது மாணவர்
ணவர் இயக்கம்" என
ல துண்டுப்பிரசுரங்களை

ாலை

15ம்திகதியன்று "சுதந்திர
SU-Independent Students
திரனவைப் படுகொலை
கள் ஆரம்பமாயின. தயா
ாணவர் போராட்டங்களை
வாத அரசாங்கத்தினால்

டிருந்த அடக்குமுறைக்கு
ஆதரவைவழங்குமாறு
மக்கக்கூடிய வகையிலான
உண்டென பிரச்சாரமும்
ாங்கத்தின்படையினராலும்
ட்ள்ளாகி வந்தவர். தயா
ரணமாக அவரை கைது

வாத கட்சிகளான மக்கள்
க் கட்சி உட்பட இனவாத
மைத்திருந்தது. இக்கூட்டு
எதிராக செயற்படத்

திரனவை பல்கலைக்
திருந்ததைப் பயன்படுத்தி
வதற்கென்று அழைத்துச்
மைப்பைச் சேர்ந்தவர்கள்
க்கொன்று போட்டனர்.
ல், கழுத்து வெட்டப்பட்ட
ான்றினருகில் அவரது

பேற்கவில்லை. இச்சம்பவம்
தின் நடவடிக்கையே என
ா தயா பத்திரனவின்
ம் செய்தனர். ஐ.தே.க.
ஈழம்வாதிகளென்றும் பல
ட்பட காரணமானவர்களே
றும் துண்டுப்பிரசுரம்

ரலவே கொள்கைரீதியாக
ா ஜே.வி.பிக்கு எதிராக

ணியாதல்
வி.பி ஒரு தீர்மானத்தை
கள், விரிவுரைகள், கல்வி
களையும் நிறுத்தும்படியும்,
பபடுத்தி ஆயுதப்பயிற்சி
ல் மாதம் விஜேவீரவால்
ளியிடப்பட்டிருந்தது. அதில்
உருவாகி வருவதாகவும்
பிமான மக்கள் இயக்கம்"
கப்பட்டது. ஜே.வி.பிக்கு
து தற்காத்துக்கொள்வே
என்று கூறப்பட்ட போதும்
ம் தண்டனை அளிக்கும்
ரசுரங்கள் சுவரொட்டிகள்
ந்துக்களையுடைய பலர்
கொல்லப்பட்டனர்.

மைபச் சேர்ந்தவர்கள்
ல் ஜே.வி.பியினாலும்
டது.

னமடைந்தது.

த ஈ.பி.ஆர்.எல்.எப் அதரவு
ர்பு தரப்பினர் பலர் ஓரணி




# ...ள் யார்? என்ன செய்தார்கள்?

திரண்டனர். அவர்களில் முக்கியமானவர்கள் 1985ம் ஆண்டு அரச கவிழ்ப்புச் சதி செய்தார்கள் என்ற குற்றஞ்சாட்டப்பட்டு தடுப்புக்காகவலில் வைக்கப்பட்டு விடுதலையானவர்கள்.

## 1985 சதி முயற்சி

1985ஆம் ஆண்டு அரச கவிழ்ப்புச் சதி முயற்சி செய்த குற்றச்சாட்டின் பேரில் 20க்கும் மேற்பட்ட இடதுசாரித்தலைவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இவர்கள் அதுவரை காலம் :மாற்று குழு" (விகல்ப கந்தாயம) எனும் பெயரில் செயல்பட்டு வந்தனர். இவர்களில் ஜோ.செனவிரத்ன, தயான் ஜயதிலக்க (இவர்கள் இருவரும் பின்னர் வடகிழக்கு மாகாணசபையில் ஈ.பி.ஆர்.எல்.எப் மந்திரி சபையில் அங்கம் வகித்தனர்.) ராம் மாணிக்கலிங்கம், பத்மநாபா, குமாரசிங்க, தயாபால திராணகம (ராஜினியின் கணவர்) உட்பட தற்போது தேடப்பட்டுவரும் சரத்டி சில்வாவும் அடங்குவர். தயான் ஜயதிலக்க இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். 1987 இந்து-


தயா பத்திரன கொல்லப்பட்ட நிலையில்...

லங்கா ஒப்பந்தத்துடன் பல அரசியல் கைதிகள் விடுதலையான போது மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கைதாகியிருந்தவர்களும் 1988 தொடக்கத்தில் விடுதலையானார்கள்.

இந்த இடைக்காலத்தில் நாட்டில் பல அரசியற் தலைவர்கள் அரசாங்கத்தின் கூலிப்படையினரால் (உத்தியோக பூர்வமற்ற இராணுவம்) கொலை செய்யப்பட்டிருந்தனர். ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் தலைவர் விஜய குமாரணதுங்கவும் 1988 பெப்ரவரி 16இல் கொலை செய்யப்பட்டிருந்தார். (5வது நாள் நடந்த இறுதிச் சடங்கில் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி, லங்கா சம சமாஜக் கட்சி ஆகிய கட்சிகள் விஜயகுமாரணதுங்கவின் மனைவியும் இன்றைய ஜனாதிபதியுமான சந்திரிகாவோடு சேர்ந்து ஐக்கிய சோஷலிச முன்னணியை அமைக்க உறுதி பூண்டனர்.) இந்த கொலையையும் ஜே.வி.பியே செய்தது என பிரச்சாரம் செய்து மக்களை நம்பவைப்பதில் அரசாங்கத்துக்கு சிரமமாக இருக்கவில்லை. உண்மையில் அந்த கொலைக்கு பின்னணியில் இருந்த ஐ.தே.க. தலைவர்கள் குறித்து ஆணைக்குழு விசாரணைகளில் இப்போது அம்பலமாகியுள்ள தகவல்களே உண்மையை விளக்குகின்றன.

விஜய குமாரணதுங்கவையும் கூட ஜே.வி.பியே கொலை செய்தது என "அரச கவிழ்ப்பு சதி"யில் கைதாகி விடுதலையாகியிருந்தவர்களும் சு.மா.இ.வினரும் கூட நம்பியிருந்தனர். அரசாங்கத்துக்கு எதிராக தொழிற்பட இருந்த இந்த தரப்பினர் ஜே.வி.பியினரை உடனடி எதிரிகளாக கொள்ளத் தொடங்கியதுடன் ஜே.வி.பிக்கு எதிராக நடவடிக்கைகளில் ஈடுபடவும் தீர்மானித்தனர்.

## உடனடி எதிரிகள் ஜே.வி.பீ?

இவர்கள் சு.மா.இ.வின் அன்றைய தலைவராக இருந்த கே.எல்தர்மசிறி குழுவினருடன்சேர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினர் இப்பேச்சுவார்த்தையில் 15 பேர் கலந்து கொண்டனர். "ராம் மாணிக்கலிங்கம் தான் தமிழரென்பதால் அதில் கலந்து கொள்ள முடியாதென்பதை தெரிவித்திருந்தார். ஜோ செனவிரத்ன ஜே.வி.பியை தாக்குவது முடியாத காரியம் என்றார். ஆனால் நாங்கள் ஜே.வி.பியை தாக்கவேண்டும் என்ற முடிவில் இருந்தோம். நாங்கள் "மக்கள் புரட்சிகர செம்படை" எனும் அமைப்பை உருவாக்கிக் கொண்டோம் அதற்கான கொள்கைகளையும் பிரகடனப்படுத்தினோம் எங்களுக்கான ஆயதங்களை ஐ.சோ.மு தலைவராகவிருந்த ஒஸி அபேகுணசேகர தந்தர்..." என சரத்டி சில்வா ராவய பத்திரிகைக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார்.

உண்மைதான் ஜே.வி.பியிடமிருந்து இடதுசாரிகளைத் தற்காக்கவென ஐ.சோ.முவினருக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றை ஐ.சோ.முவினர் பயன்படுத்தத் தொடங்கவில்லை. ஜோர்ஜ்ரத்னாயக்க எனும் இடதுசாரி ஒருவர் தனது பாதுகாப்புக்கென வைத்திருந்த பிஸ்டலை வேறாகவும் தோட்டக்களை வேறாகவும் வைத்திருந்தபடியால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டபோது எதுவும் செய்யமுடியாதவராகவிருந்தார்.

"பிரா"வினர் தமது பிரச்சாரத்துக்கென "ஜனசதிய" எனும் பத்திரிகையை வெளியிட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் "எத்த" பத்திரிகையும் பிரா இயக்கத்துக்கு ஆதரவாக கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டது. மாகாணசபை உறுப்பினர்கள் பலரது அலுவலகங்கள் பிராவின் அலுவலகங்களாக பயன்படுத்தப்பட்டன. எனவே ஜே.வி.பி எதிர்ப்புணர்வுடைய பலர் வந்து பிராவுடன் இணைய கடினமாக இருக்கவில்லை.

## படுகொலையை நிறுத்த படுகொலை

ஜே.வி.பியினரை அழிக்க இவர்கள் கையாண்ட வழிமுறை சுவரொட்டி ஒட்டவென கீழ்மட்ட உறுப்பினர்கள் வந்தால் அவர்களை கொலை செய்வதன் மூலம் மேல் உள்ளவர்கள் கீழ் மட்ட பணிகளையும் செய்ய வெளியே வருவார்கள். அதனை பயன்படுத்தி நசுக்கிவிடலாம் என கருதினர். "நாய்க்கு உதைத்தால் அதன் சொந்தக்காரர் தேடித்தேடி வருவார்" என்பதே அவர்களின் வாய்ப்பாடு.

பிராவின் கொள்கை விளக்கத்தில் "கொலைகார ஜே.வி.பியின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் ஜனநாயகத்தை காப்பதற்காகவே ஆயதத்தை ஏந்த வேண்டியுள்ளது. இன்றைய ஐ.சோ.மு.வையும் ஏனைய தொழிற்சங்கங்களையும் பாதுகாப்பதற்காகவே ஆயுத இயக்கத்தை தொடக்க வேண்டியுள்ளது..." என்றுள்ளது.

## அரசின் கைக்கூலிகளாகிப் போன "பிரா"

ஆரம்பத்தில் உடனடி எதிரி ஜே.வி.பி என்றும் அரசு அதற்கடுத்த எதிரி என்றும் கூறிய "பிரா", அரசு பிராவினரை கைது செய்த வேளை அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லலித்துடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்றது. சரத் சில்வாவும், கே.எல்.தர்மசிறியும் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதுடன் சமரசமும் செய்து கொண்டனர். "உங்களது நடவடிக்கைகளை கண்டு கொள்ளமாட்டோம்" என லலித்தினால் உறுதி கூறப்பட்டது. பிரா இயக்கத்தினர் படையினரால் கைது செய்யப்படும்போதெல்லாம் "பிரா" என கூறினால் விடுவித்து விடுவர் பின்னர் அரசாங்கமே ஆயதங்களையும் வழங்கியது. போகப்போக அவர்களுக்கான வாகனங்கள் பணம் என்பனவும் வழங்கப்பட்டதுடன் மொத்த அரச கூலிப்படைகளாக மாறியது. வெறுமனே ஜே.வி.பியினரை மாத்திரமன்றி ஐ.தே.க. அரசியல்வாதிகள் பலரின் தனிப்பட்ட விரோதிகளை தீர்த்துக்கட்டும் பணிகளையும் இவர்கள் செய்து வந்தனர். ஈ.பி.ஆா.எல்.எப். ஆரம்பத்தில் இவர்களுக்கான ஆயுதப் பயிற்சியையும் வழங்கியது. பிராவுடன் இருந்த பலர் ஈ.பி.ஆர்.எல்.எப்பினராகவே மாறினர். இதே வேளை ஜே.வி.பிக்கு புளொட் இயக்கத்தினர் ஆயதப்பயிற்சி வழங்கியதுடன் ஆயுதங்களையும் வழங்கினர். சில அயுதங்களை உற்பத்தி செய்யும் பயிற்சியையும் புளொட் அளித்தது. கண்ணி வெடிகள் செய்யும் பயிற்சியும் அளித்ததன் பின் தென்னிலங்கையில் பொலிஸாருக்கு எதிராக பல கண்ணிவெடிகள் பயன்படுத்தப்பட்டன.

படையினரால் கைது செய்யப்படும் ஜே.வி.பியினரை விசாரணை செய்யும் அதிகாரமும் அவர்களைத் தண்டிக்கும் அதிகாரமும் பிராவிடம் இருந்தது. ஜே.வி.பியினர் மாத்திரமல்ல அவர்களை அறிந்த நன்பர்கள் கூட தேடித்தேடி வேட்டையாடப்பட்டனர். தலையை துண்டித்தும், டயருக்கு இரையாக்கியும், சுட்டு ஆற்றில் எறிந்தும் ஈவிரக்கமின்றி கொலைகளைப் புரிந்தனர்.

## ஈழப்போருக்கும் பொருந்தும்

பிரேமதாச ஆட்சிக்கு வந்தவுடன் ஒட்டுமொத்தமாகவே பிரேமதாசவின் கைக்கூலிகளாக மாறினர். ஈ.பி.ஆர்.எல்.எப். மந்திரி சபையில் சுகாதார அமைச்சராகவும் பிராவின் முக்கிய தலைவர்களில் ஒருவராகவுமிருந்த தயான் ஜயதிலக்க பிரேமதாசவின் தனிப்பட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டதுடன் ஜே.வி.பி அழிப்புக்கான முழுத்திட்டமிடலும் அவரின் பொறுப்பிலேயே நடத்தப்பட்டது. பிரேமதாசவுக்கு ஒரு 'மாக்கியவெல்லி' என தயான் ஜயதிலக்கவை விமர்சகர்கள் குறிப்பிடுவது வழக்கம்.

ஜே.வி.பி இயக்கத்தின் தலைமை அணியினரை அழித்த பின் அது மிகப்பலவீனமடைந்தது. இதன்பின் "பிரா"வினருக்கு அவ்வளவாக வேலை இருக்கவில்லை. அதில் பலர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டனர். சிலர் இன்றும் ஒழிந்து ஒழிந்து திரிகின்றனர். (தயான் உட்பட) அவர்களில் ஒருவர் தான் தற்போது கைது செய்யப்பட்டுள்ள பொடி சில்வா என்றழைக்கப்படும் சரத்டி சில்வா.

ஒடுக்குமுறை அரசை பிரதான எதிரியாக கருதி செயற்பட ஆரம்பித்த சக்திகள் தமக்குள்ளேயே முரண்பட்டு ஒன்றையொன்று அழிக்கும் முயற்சியில், ஒரு தரப்பை அரசே பயன்படுத்த விளைவதும் , பின்னர் அரசின் ஒட்டுமொத்த கைக்கூலிகளாக மாறி தமது பிரதான இலக்குக்கே எதிரிகளாகவும் துரோகிகளாகவும் மாறிய அனுபவங்கள் தென்னிலங்கைக்கு மாத்திரமல்ல ஈழப்போராட்டத்துக்கும் பொருந்தும்.

– ஆனந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 32

# சஞ்சலங்கள் தோன்றும் விதங்கள்





டொக்டர்.ஜெயிம் ஜி ஜினோல்ட்
தமிழில்.அருண்

### பெற்றோர்கட்கிடையே எழும் சச்சரவுகளினால் ஏற்படும் சஞ்சலம்

பெற்றோர்கள்தம்முள் சண்டையிடும் போதும் குழந்தைகள் சஞ்சலம் அடைகிறார்கள். ஒரு வகை குற்ற உணர்வின் பாற்பட்ட சஞ்சலம் இது. தமது குடும்பத்தின் சமுக நிலை பாதிக்கப்படுவதினாலும், இச்சண்டையின் போது தமது உண்மையான அல்லது கற்பனா ரீதியான பாத்திரம் என்ன என்பது தொடர்பாக எழும் குற்ற உணர்வினாலும் இச்சச்சரவு ஏற்படுகிறது. நியாயமானதோ, இல்லையோ குழந்தைகள் இம்மாதிரியான சண்டைகட்கு தாமே காரணம் என்று நினைக்கிறார்கள்.

குடும்பத்தில் நடைபெறும் 'சிவில் யுத்தத்தின்' போது குழந்தைகள் பக்கச்சார்பற்று இருப்பதில்லை. அவர்கள் ஒன்றில் தகப்பனாருடனோ, அல்லது தாயுடனோ தமது சார்பு நிலையைக் காட்டிக்கொள்கிறார்கள். இதன் விளைவு என்னவென்றால், அவர்களது மனோ ரீதியான வளர்ச்சியும், இயல்பு அல்லது நடத்தை வளர்ச்சியும் பாதிக்கப்படுவதுதான். ஒரு குழந்தை தாயையோ அல்லது தகப்பனையோ நிராகரிக்கும்போது குழந்தைகள் ஒரு மாதிரி அடையாளத்தை காணமுடியாதவர்களாகவே இருந்து விடுகின்றனர். நிராகரிப்பு என்பது சிறப்புகளை அடையாளம் காண்பதன் மூலமாக வரும் வெறுப்பின் காரணமாக வெளிப்படுகிறது. அல்லது விழுமியங்களையும் பின்பற்றுவதனாலும் நடத்தைகளை அப்படியே பிரதியீடு செய்வதன் காரணமாகவும் ஏற்படலாம். சில மிகவும் மோசமான சந்தர்ப்பங்களில் அது ஒருவகை குழம்பிய பாலியல் சார்ந்த அடையாளம் காணலாலும் ஒருவர் இல்லாமல் வாழமுடியாத இயலாமை காரணமாகவும் எழலாம். ஒரு ஆண் குழந்தை தாயையும் பெண்குழந்தை தந்தையையும் நிராகரிக்கும்போது அந்தக்குழந்தை எதிர்ப்பால் குறித்த சந்தேகங்கள் நிறைந்த ஒன்றாக வளரக்கூடும்.

பெற்றோர்கள், தமது குழந்தையின் அன்பைப்பெறுவதற்காகப்போட்டியிடும்போது, அவர்கள் அடிப்படைக் கற்பித்தல் நெறிமுறைக்கு விரோதமான முறையில் அதைச் செய்கிறார்கள். லஞ்சம் கொடுத்தல், முகஸ்துதி செய்தல், பொய் சொல்லுதல் போன்றவை இவற்றுள் அடங்கும். இதனால் குழந்தைகள் மாறுபட்ட கீழ்ப்பணிவுடன் வளர்வதுடன், ஒரு விடயம் குறித்து இரு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் தம்மை உருவாக்கிக் கொள்கின்றனர். ஒரு பெற்றோரை மற்றவரிடம் இருந்து பாதுகாக்கும் தேவையும் ஒரு பெற்றோரை மற்றவருக்கு எதிராகப் பயன்படுத்தும் வாய்ப்பும் குழந்தையின் இயல்பில் ஒரு நிரந்தர வடுவை ஏற்படுத்தி விடுகிறது. சிறு பராயத்திலிருந்தே. அவர்கள், பெற்றோர்களிடையிலான போட்டியில் தாம் ஒரு முக்கியமான ஆள் என்பதை அளவுக்கதிகமாக உணரத்தொடங்குவதுடன், தம்மைக்குறித்து மிகப்பெரிய முக்கியத்துவத்தையும் கொடுக்கத்தொடங்குகிறார்கள். அவர்கள்சாதுரியமாக செயல்களை உருவாக்கவும் (Manipulate), இரகசியங்களை வெளிப்படுத்தப் போவதாக மிரட்டவும் (Blackmail) வேவு பார்க்கவும், அரட்டை அடிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் இணைந்து வாழ்வது என்பது ஒரு வகை (அவசியமற்ற) கடப்பாடு எனவும், நேர்மை என்பது ஒரு தடை எனவும் உணர்கின்ற உலகத்தில் வாழப் பழகிக்கொள்கிறார்கள். இந்த உலகம் பைத்தியமாகக்கூடிய நடத்தைகளை ஊக்குவிப்பதும் வளர்த்துவிடுவதுமான ஒரு உலகமாகும்.

### உடல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஏற்படும் இடையூறுகளால் வரும் சஞ்சலம்

பெரும்பாலான நவீன வீடுகளில் குழந்தைகள் ஓடிவிளையாட இடமின்மை காரணமாக விரக்தியுறுகிறார்கள். சிறிய தொடர் மாடி வீடுகளும், விலையுயர்ந்த தளபாடங்களும் அவர்களுக்கு இயல்பாகவே எழுகின்ற ஏறுதல், குதித்தல், ஓடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கான ஆர்வத்தைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த கட்டுப்பாடுகள் குழந்தைகளின் மிக இளம் வயதிலேயே தொடங்கி விடுகின்றன. சிறு குழந்தை தனது வண்டியில் ஏற அனுமதிக்கப்படுவதில்லை; தத்தி நடக்கும் குழந்தைக்கு படிகளில் ஏற அனுமதி கிடைப்பதில்லை. நடக்கும் குழந்தைக்கு வசிப்பறைக்குள் (Living Room) ஓடித்திரிய அனுமதி கிடையாது!

இவ்வாறு விரக்திக்குள்ளாகும் குழந்தைகளின் மனதில் அழுத்தம் வலுக்கிறது. இது சஞ்சலத்துக்கு ஏதுவாகிறது. இதற்கான தீர்வு, இப்பிரச்சினையை சொல்லும் போதே தெளிவாகிவிடுகிறது. இளம் பிள்ளைகட்கு தமது மன அழுத்தத்தைக் குறைக்க உடல் சார்ந்த நடவடிக்கைகள் அவசியமாகும். ஓடித்திரிய போதியளவு இடமும், விளையாட போதிய பொருட்களும் அவர்களுக்கு அவசியம். அவர்களுக்கு ஒரு அறையோ அல்லது விளையாடக்கூடிய நிலப்பரப்போ, அவர்களது உளரீதியான பாதுகாப்பை வழங்க அவசியமாகும்.

### மரணம் காரணமான சஞ்சலம்

பெரியவர்களைப் பொறுத்தவரை இறப்பின் காரணமான துயரம் மரணத்தின் மீளப்பெறமுடியாத தன்மையிலிருந்து எழுகிறது. மரணம் எல்லா நம்பிக்கைகளினதும் முடிவு. அது இறுதியானதும், சாசுவதமானதும் கூட. இதன் காரணமாக மரணம் தனிப்பட்ட முறையில் ஒருவரால் நினைக்கப்படக்கூடியதாகவோ தன்து முடிவு தனது உடலின் அழிவு என்பன குறித்து ஒருவரால் கற்பனை செய்தல் சாத்தியமானதாகவோ இருப்பதில்லை. நாம் ஒவ்வொருவரும் கடந்த காலம், எதிர்காலம் என்பவை குறித்த நினைவுகளையும்நம்பிக்கைகளையும் கொண்டவர்கள். எதிர்காலம் பற்றிய எண்ணங்கள் அற்றவர்களாக எம்மால் இருக்க முடியாது. இந்த எல்லைக்குள் தான் எமது நம்பிக்கைகள் காரணமான ஆறுதலை நாம் பெறுகிறோம். எமது இந்தத் தெளிவு எமக்கு ஒரு எதிர்காலத்தை தருகிறது. நாம் அமைதியாக வாழ்ந்து மடிகிறோம்.

பெரியவர்களையே மரணம் திகைப்படையவைக்கக்கூடிய ஒன்றென்றால், குழந்தைகள் எம்மாத்திரம்? அது அவர்களுக்கு மர்மங்கள் நிறைந்த ஒரு புதிராகவே இருக்கிறது. மரணம் என்பது நிரந்தரமானது; தனது பெற்றார்களாலோ, தனது வழிபாடுகள் மூலமாகவோ இழந்தவரை பெற முடியாது என்பதை அவர்களால் விளங்கிக் கொள்ள முடிவதில்லை. அவர்களது மந்திரவித்தைக்கொப்பான விருப்பங்களின் மரணத்தின் முன் பயனற்றவையாகப்போவது அவர்களுக்கு மிகவும் பெரிய தாக்கத்தைக் கொடுக்கிறது. கெட்டித்தனமாக நடப்பதன் மூலமாக எதையும் செய்யக்கூடிய சக்தி தன்னிடம் உள்ளது என்ற குழந்தையின் நம்பிக்கை இங்கே சிதறுகிறது. இது அதனை பலவீனத்துக்கும் சஞ்சலத்துக்குள் உள்ளாக்குகிறது. குழந்தை, தனது அழுகை, தனது எதிர்ப்பு நடவடிக்கைகள் எல்லாவற்றையும் மீறி தனக்கு விருப்பமான ஒரு பிராணியோ, ஒரு மனிதரோ இனித் தன்னுடன் இல்லையென்பதை அது கண்கூடாக காண்கிறது. இதன் காரணமாக குழந்தை தான் கைவிடப்பட்ட ஒன்றாக, விரும்பப்படாத ஒன்றாக தன்னை நினைத்துக்கொள்கிறது. குழந்தைகளின் இத்தகைய உணர்வு அவர்கள் பெற்றோரிடம் அடிக்கடி கேட்கும் இது போன்ற கேள்விகளில் வெளிப்படும்:

''நீங்கள் செத்தாப்பிறகும் என்னை விரும்புவீர்களா?''

சில பெற்றோர்கள் குழந்தை பெரிதும் விரும்பிய ஒருவரின் அல்லது ஒன்றின் மறைவைக் குறித்து துயரத்தை அது அனுபவிக்கக்கூடாது என்று அதைப்பாதுகாக்க முயல்கின்றனர். குழந்தையின் வளர்ப்பு மீனோ அல்லது ஆமையோ இறந்தால் அதை உடனடியாக வேறொன்றினை கொண்டு வந்து வைப்பதன் மூலம் மறைக்கப் பார்க்கிறார்கள். குழந்தை இதைக் கவனிக்க மாட்டாது என்ற நம்பிக்கையுடன் அதன் பூனையோ நாயோ இறந்தால் உடனடியாக அதைவிட அழகான விலையுயர்ந்த ஒன்றைக் குழந்தைக்கு வழங்குகிறார்கள்.

இத்தகைய திடீர் இழப்புகளும் உடனடிப் பதில் மாற்றீடுகளும் குழந்தையின் மனதில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன?

தன் விருப்பத்துக்குரியதாக இருந்த ஒன்று மறைந்தது ஒன்றும் பெரிய விடயமல்ல; அன்பு இலகுவாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்படக்கூடியது தான் என்பதே குழந்தை இதன் மூலம் அறிந்து கொள்ளும் பாடமாகும்.

உண்மையில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் கவலைப்படுவதற்கும், துக்கத்தை அனுஸ்டிப்பதற்குமான அதன் உரிமை மறுக்கப்படக்கூடாது. அது இழந்து போன தனது அன்பிற்குரியவர் குறித்துக் கவலைப்பட அனுமதிக்கப்பட வேண்டும். இதன் மூலமாக குழந்தையின் மனிதாபிமானம் வளர்கிறது. அதன் நடத்தை பண்புடையதாக அமைகிறது. அடிப்படையான விடயம் என்னவென்றால் குடும்பத்தின் சந்தோஷங்களிலும் துக்கங்களிலும் இருந்து குழந்தைகள் வெளியொதுக்கப்படக்கூடாது என்பதுதான். ஒரு இறப்பு நடக்கும்போது, அவ் இறப்புக் குறித்து குழந்தைக்கு தெரியப்படுத்தாது போனால், அது தனக்குள்ளேயே இனந்தெரியாத சஞ்சலங்களை வளர்த்துக்கொள்கிறது. அல்லது மிகப்பயங்கரமானதும் குழப்பகரமானதுமான தனது சொந்த விளக்கங்களை அது உருவாக்கிக்கொள்கிறது. அது தானே இந்த இறப்புக்குக் காரணம் என்று நினைப்பதுடன், இறந்தவரிடமிருந்து மட்டுமல்லாமல் இருப்பவர்களிடமிருந்தும் கூட தன்னை ஒதுக்கிக்கொள்ளக்கூடும். இழப்புக்களை எதிர்கொள்வதற்கு குழந்தைகட்கு நாம் உதவ வேண்டும். இதற்கான முதற்படி அவ்விழப்பு குறித்த அதன் உணர்வுகளை, பயத்தை, கலவரத்தை பூரணமாக வெளிப்படுத்த அனுமதிக்க வேண்டும். ஆறுதலும், அமைதியும், அதன் உணர்வுகளை ஆறுதலாக கேட்டுப் பகிர்ந்து கொள்ளும் ஒருவராலேயே வழங்க முடியும். குழந்தை தனது உணர்வுகளை வெளிப்படுத்த தடுமாறும் வேளைகளில் பெற்றோர்கள் சில வார்த்தைகளை அதற்காக சொல்ல முடியும். தனது அன்புக்குரிய பாட்டி இறந்த பின் வருந்தும் ஒரு குழந்தைக்கு பெற்றோர் இப்படிக் கூறலாம்.

''உங்களுக்கு பாட்டி இல்லாதது தவிப்பாக இருக்கிறது என்ன?''

''நீங்கள் அவவை நிறைய தேவைபோல இருக்கிறது''

''நீங்கள் அவவை நல்லா விரும்பினீங்கள்...''

''அவவும் உங்களில் சரியான விருப்பமா இருந்தா''

'அவ எங்களோடை இருந்தா நல்லா இருக்கும் எண்டு நினைக்கிறீங்கள்...''

''இப்பவும் அவ உயிரோடு இருந்தால் எவ்வளவு நல்லது எண்டு இருக்கு என்ன?''

''அவ செத்தண்டு நம்பவே முடியவில்லை''

''அவ இப்ப எங்களோடை இல்லை எண்டு நம்பவே முடியவில்லை''

''அவவை உங்களுக்கு நல்லா ஞாபகமிருக்கும்...''

இத்தகைய வார்த்தைகள் குழந்தைக்கு தனது உணர்வுகள் குறித்து தனது பெற்றோர்கள் அக்கறையாக இருக்கிறார்கள் என்று உணர வைக்கும். இது குழந்தைக்கு தனது உணர்வுகளை, பயத்தை, கலவரத்தை பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள உதவும். அது மரணம் குறித்த சில கேள்விகளை கேட்கக்கூடும். மரணம் நோவை ஏற்படுத்துமா என்று அது கேட்கலாம். செத்தவர் திரும்பி வருவாரா? நான் எனது அப்பா அம்மா எல்லோரும் கூட சாவோமா? என்று கேட்கக் கூடும். பதில்கள் சுருக்கமாகவும் உண்மையாகவும் அமைய வேண்டும்: சாகும் போது ஒருவரது உடலுக்கு நோவு ஏற்படுவதில்லை; செத்தவர் ஒரு போதும் திரும்பி வரமாட்டார்; வயது கிழப்பருவம் அடைந்த பின் ஒருவர் சாவது இயற்கை தான்.

சாவு பற்றி குழந்தைகளுடன் பேசும் போது, ஒழித்துமறைத்துப் பேசுவதை தவிர்க்க வேண்டும். அத்துடன் இடக்க ஏடக்க சொற்களைத் தவிர்த்து நேரடி சொற்களைப் பாவிப்பது சிறப்பானது. உதாரணமாக இறந்து போன பாட்டனார் தனது இரவு 'நித்திய உறக்க நிலைக்குப் போய் விட்டார்' என்று ஒரு நாலு வயதுக் குழந்தைக்கு கூறுவது பயனற்றது. அது சில வேளை அவர் தனது உடுப்பையும் போர்வையையும் எடுத்துப் போனாரா என்று கேட்கவும் கூடும். அது மட்டுமல்ல பாட்டனார் தன்னுடன் கோபமாக இருந்தால் தனக்கு இரவு வணக்கம் கூறி முத்தமிட்டுவிட்டு தூங்கப் போகவில்லை என்றும் நினைக்கக்கூடும். பாட்டி சொர்க்கத்திற்குப் போய் 'தேவதையாக மாறிவிட்டார்' என்று ஒரு ஐந்து வயதுக் குழந்தைக்கு சொன்னால், தாம் எல்லோரும் உடனேயே இறந்து சொர்க்கத்திற்கு போக வேண்டும் என்று அது பிரார்த்திக்கவும் கூடும்.

ஒரு குழந்தை, அன்பான அணைப்புடனும் பார்வையுடனும் நேர்மையாக உண்மையை எளிமையான வார்த்தைகளில் சொல்லும் போது அதை ஏற்றுக்கொள்கிறது. வாழ்க்கை பற்றிய இறப்புப்பற்றிய யதார்த்தங்களை புரிந்து கொண்ட பெற்றோர் இவ்வாறு நடந்து கொள்வதே சிறப்பானதாகும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயம் என்னவென்றால், வார்த்தைகளை விட எமது நடவடிக்கையும் மனப்பாங்கும் அதிகம் பேசுகின்றன என்பதேயாகும்.


அடுத்த இதழில்: பாலியல் கல்வி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முஸ்லிம் ஊர்காவற் படை: முழு முஸ்லிம் சமூகமே குற்றவாளியல்ல!



சென்ற இதழின் தொடர்ச்சி...

இவ்வகையான தீர்க்கதரிசனமான போராட்டச் சிந்தனைகளையும் தமிழ் - முஸ்லிம் உறவுகளையும் சிதறடிக்க வேண்டிய அவசியமும் அவசரமும் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

இதற்காகவே குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் தீவிரவாத இயக்கங்களின் போராட்ட கொள்கைகளினூடு உருவான முஸ்லிம் உறவுகளையும், இராணுவப் பயிற்சிகளில் சேர்ந்து கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் தடுப்பதற்காக மட்டுமல்லாது; தமிழ் தீவிரவாதிகளைக் காட்டிக்கொடுக்கவும் முஸ்லிம் இளைஞர்களை அரசு பயன்படுத்தியது; ஊர்காவற் படையை உருவாக்கியது.

இத்தகைய காட்டிக்கொடுப்புகட்கு 1990 ஜூன் 25ம் திகதி நடந்த அக்கரைப்பற்று சம்பவம் ஒரு உதாரணமாக காட்டப்படலாம். அன்றைய தினம் தமிழ் அரசாங்க ஊழியர்கள், குடும்பஸ்தர்கள். பொறியியல் பீடத்துக்கு தேர்வான மாணவர்கள் உட்பட 37 இளைஞர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு கடத்திச் செல்லப்பட்டார்கள். இவர்கள் பற்றிய தகவல்கள் இன்றுவரை இல்லை. கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்பதே பொதுவான நம்பிக்கையாக உள்ளது.

இராணுவம் ஜூன் 25ம்திகதிய சுற்றிவளைப்பொன்றின்போது, முஸ்லிம் சகபாடிகளின் உதவியுடன் 37 பேரை கைது செய்தது. இவர்களில் பெரும்பாலானோர் அரச ஊழியர்கள், கிராம சேவை வேடிக்கைக்குரிய தொன்றாகும் புலிகள் போன்ற ஒரு பாஸிச சக்தியின் பலம் பலவீனம் என்ன என்பதைப் பகுத்தறிய முடியாது கையேந்த விழையும் அப்பாவித்தனமானதாகும். ஒட்டுமொத்தமாகவே இந்த யுத்தம் என்பது அர்த்தத்திற்குரியதா என்பதே நாட்டு மக்களினதும் அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கியதொரு பிரச்சினை. குறிப்பிட்டதொரு சமூகங்களினதும் நியாயமானதொரு நெடுநாள் கேள்வி. இந்த யுத்தம் என்பது இலங்கை வாழ் அனைத்து சமூகத்தை மாத்திரம் தாக்கக்கூடாது என கேட்பது பொருத்தமானதும் அல்ல. நடைமுறை சாத்திய மற்றதும் கூட.

அடுத்ததாக முஸ்லிம் ஊர்காவற் படையினரை தாக்கக்கூடாது என்ற புலிகளிடமிருந்தான உத்தரவாதத்திற்கான எதிர்பார்ப்பு.

சாதாரண நிராயுதபாணிகளையே தமது நலன்களுக்காக தாக்கும் புலிகளிடமிருந்து ஆயுத பாணிகளான ஊர்காவற்படையை தாக்கக்கூடாது என்ற நம்பிக்கையை கோருவது கேலிக்குரியதே.

அத்துடன், ஊர்காவற்படை என்பது சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டதொரு அரசின் படைப்பிரிவாகும். அரசினால் பயிற்சியளிக்கப்பட்டு, ஆயுதம் வழங்கப்பட்டு தக்க ஊதியமும் வழங்கப்படும் கிராம ரீதியான இராணுவ கடையணிப் பிரிவாகும்.

இதில் சிங்கள ஊர்காவற்படை, முஸ்லிம் ஊர்காவற் படை எனப் பகுத்துப் பார்ப்பது எவ்வகையிலும் பொருத்தமானதல்ல. ஊர்காவற் படையினர் என்பவர்கள் வெறும் நிராயுதபாணிகள் அல்ல. கெரில்லாத் தாக்குதல் பயங்கரவாதிகளின் எதிர் நடவடிக்கைகள் தொடர்பாக பயிற்றுவிக்கப்பட்டவர்களே.

இவர்கள் தமக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் தமது கிராமத்து மக்களைக் காப்பாற்றுவதற்கும், தம்மையும் தமது கிராமத்து மக்களையும் தாக்கவரும் பயங்கரவாதிகளைத் திருப்பித்தாக்கவும், அவர்கள் மீதான எதிர்நடவடிக்கைகளுக்கும் அவர்களைத் தேடி அழிப்பதற்கும் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லையே. அப்படிப்பட்ட செயலை பிழையென விவாதிக்கவில்லையே.

இவ்விடயங்களுக்கும் புறம்பாக முஸ்லிம் ஊர்காவற் படையினரைத் தாக்கக்கூடாது எனக் கூறவிழைவது என்பது; ஏனைய படைப்பிரிவுகள் அல்லது பொலிசில் உள்ள முஸ்லிம் வீரர்களைத் தாக்கக்கூடாது என விழிப்பது போன்றதொரு வேடிக்கைக்குரிய எண்ணப்பாடே.

மேலும் இக்கட்டுரையின் சாராம் சமாக,

''ஆகவே, விடுதலைப்புலிகள் முஸ்லிம்கள் தொடர்பான நியாயமான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கிய பின்னும் கூட, தொடர்ந்தும் முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவற் படையில் இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படின் அது நிச்சயம் தவறானதும், விரோதமானதும் என்பதே பெரும்பான்மை முஸ்லிம்களின் கருத்தாகும்'' என கட்டுரையாளர் கூறும்போது,

விடுதலைப்புலிகளானவர்கள் முஸ்லிம்கள் தொடர்பான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்காது போனால், முஸ்லிம் இளைஞர்கள் ஊர்காவற் படையில் இருந்து கொண்டு தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுவது என்பது சரியானது, தவிர்க்க முடியாதது என்பதே தொக்கி நிற்கிறது. அத்துடன் ஊர்காவற் படையினரின் உண்மையான ''பலம்'' என்பது இதுதான் என்பதும் மறைபொருளாகத் துல்லியமாகத் தெளிவாகிறது.

இது விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஊர்காவற் படையினரையோ, முஸ்லிம் மக்களையோ தாக்கினால், தமிழ் மக்கள் மீதான முஸ்லிம் ஊர்காவற் படையினரின் கட்டவிழ்ப்பை அங்கீகரிக்க வேண்டும் அல்லது தவிர்க்க முடியாதது என்ற நியாயத்துக்குப் புறம்பான ஆதங்கமாகவே வெளிப்படுகிறது. இது சரிநிகர் சமமான நடுநிலைக்கும், தீர்க்கதரிசனமான அரசியல் சிந்தனைக்கும் எதிர்கால மெய்யான இன ஐக்கியத்துக்கும் ஆரோக்கியம் இல்லாததாகும்.

மறுதலையாக, 1990களில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தனித்தும், ஆமி, 'கொளக்கொட்டி' யுடன் சேர்ந்தும் முஸ்லிம் கிராமங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த தமிழ்க் கிராமங்களை அடிமுடி இல்லாது பூண்டோடு ஒழிப்பதற்குரிய பிரயத்தனங்கள் ஒரு சில முஸ்லிம் சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டன.

1. சம்மாந்துறை செயலகப் பிரிவிலுள்ள மாணிக்கமடு கிராமம், அட்டாளைச்சேனை செயலக பிரிவிலுள்ள திராய்கேணி, மீனோடக்கட்டு போன்ற பழந்தமிழ்க் கிராமங்கள் இதில் அடங்கும்.

முற்றுமுழுதாக அகதிகளாக விரட்டப்பட்டு, வீடு வாசல் கொள்ளையடிக்கப்பட்டு, நீண்டகால மரங்கள் கூட வெட்டியெடுக்கப்பட்டு வீட்டு அத்திவாரக் கல்லுகள் கூட தோண்டியெடுக்கப்பட்ட மாணிக்க மடு தமிழ்க் கிராமத்தில்; புனர்வாழ்வு நடவடிக்கைகள் வெறும் பூச்சியமான நிலையில் அம்மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னும் அக்கிராமத்திலிருந்து தமிழ்ப் பாடசாலை முஸ்லிம் பாடசாலையாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இன்னும் அப்படியே இயங்கி வருவது வரலாற்று சாட்சி.

2. 06.08.1990 ஒரு மணிநேரம் குத்தகை பேரத்தில் கூட்டிவரப்பட்டு ஆமியின் உதவியுடன் சுற்றிவளைக்கப்பட்ட திராய்கேணி கிராமத்தில் ஆண், பெண், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட 68பேர்கள் அங்குள்ள ஆலயங்களுக்குள் வைத்தே கையில் கிடைத்த அரிவாள் மனை போன்றவற்றால் கொலை செய்யப்பட்டார்கள். ஒரு மணி நேரமுடிவில் சம்பந்தப்பட்ட முஸ்லிம் சக்திகளை இதில் சம்பந்தப்பட்ட படையினரே சுட்டுக் கலைத்துவிட்டு தமது மேலுத்தரவு கடமையை முடித்து வைத்து சென்றனர். எஞ்சியவர்களை காரைதீவு அதிரடிப்படையினர் அகதிகளாக கொண்டு வந்து சேர்த்தனர். இச்சமயத்தில் 50 பேர் அளவில் காணாமலும் போயிருந்தனர். 248 குடும்பங்கள் வசித்த இத்தமிழ்க் கிராமத்தில் தற்போது 130 குடும்பங்கள் அளவிலேயே வசிக்கின்றனர்.

3. 07.08.1990 இதன் தொடர்ச்சியாக ஆலயடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அளிக்கம்பை கிராமத்தில் வசித்து வந்த குறவர்கள் மீது முஸ்லிம் சக்திகளினால் கட்டவிழ்க்கப்பட்ட காடைத்தனத்தில் 12 குறவர்கள் கொலை செய்யப்பட்டார்கள். 18 பேர் படுகாயமுற்றார்கள். அன்று தமது சொந்தபந்த பூமியைத் துறந்த அம்மக்களில் சுமார் 400 குடும்பங்கள் இன்னும் கடந்த 7 வருடங்களாக திருக்கோவில் பிரதேசப்பிரிவிலுள்ள கன்னியந்தீவு என்னுமிடத்தில் காலத்தால் அள்ளுண்ட அகதிகளாக காலந்தள்ளுகின்றனர்.

4. சம்மாந்துறை செயலகப் பிரிவு. வீரமுனை சிந்தயாத்திரைப் பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந்த தமிழர்கள் 62 பேர் சில முஸ்லிம் சக்திகளினால் படுகொலை செய்யப்பட்டார்கள். இதில் 40க்கு மேற்பட்டவர்கள் காணாமலும் போனார்கள்.

***(வீரகேசரி - 12.08.1990 )***

இச்சம்பவங்களினால் படுகாயமுற்று சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பத்து தமிழர்கள் ஆஸ்பத்திரியில் வைத்தே வெட்டிக்கொலை செய்யப்பட்டார்கள். (இச்சம்பவம் பற்றி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரன் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருந்தார்) அதே செயலகப் பிரிவு 15ம் கிராமத்தில் 15 தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்கள்.

***(வீரகேசரி 11.08.1990)***

5. இன்னும் நிந்தவூர் பிரதேசப் பிரிவு அட்டப்பளம் எல்லையில் அமைந்திருந்த முருகன் ஆலயம், கல்முனையில் அமைந்திருந்த தரவைப்பிள்ளையார் ஆலயம் என்பனவும் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டன. இக்கால கட்டத்தின்போது காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயமும் இனவாதக் கும்பல்களுக்கு கைநழுவிப்போகவில்லை. ஏலவே, திராய்கேணி, மாணிக்கமடு போன்ற கிராமங்களின் சுவடுகள் துடைத்தெறியப்பட முற்படுகையில் அங்குள்ள ஆலயங்கள்தான் முதலில் இனவாத இலக்குகளாகியிருந்தன.

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மீனோடக்கட்டு என்பது ஒரு பழந்தமிழ்க் கிராமம். அக்கிராமத்திலிருந்த தமிழ் குடும்பங்கள் எங்கு போனார்கள் என்றே தெரியவில்லை. அவர்களது நூற்றுக்கணக்கான செல்வம் கொழிக்கும் நெற்காணிகள் சூறையாடப்பட்டும், அபகரிக்கப்பட்டும், சுண்டக்காய் விலைக்கு விற்கப்பட்டும் காணாமல் போனது. இங்கு வைரத்தூண்களாய் விழுதுகள் பரம்பி காற்றோடு சமரிடும். ஆலவிருட்சத்தின் கீழ் அருள்பாலித்திருந்த ''மீனாட்சி அம்மன் ஆலயம்'' சிதைக்கப்பட்டுச் சின்னாபின்னமாய்ப்போன நிலையில் இன்னும் சாகா வரலாற்றுக்கு சாட்சியாய் காணலாம்.

6. 24.06.1990, ஆலயடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவு அம்பாறை வீதி கத்தோலிக்க ஆலயத்திலும் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் ஒரு பொழுதுள் அகதிகளாக்கப்பட்ட தமிழ் இளைஞர்களில் 38 பேர் முக்காடு போட்ட முகமூடிகளின் உதவியுடன் ''கொளக் கொட்டி'' கொண்டு சென்றதில் இளம்பெண்கள் விதவைகளாகினர்.

இங்கு தமிழ் - முஸ்லிம் எல்லையில் அமைந்திருந்த இருபெரும் ஆலயங்கள் மருதயடி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம் இவை ஒரு விடியலுக்குள் தரைமட்டமாக்கப்பட்டது. (இதில் பிள்ளையார் ஆலயம் மக்களால் புனரமைக்கப்பட்டு வருகிறது. அம்மன் ஆலயம் பாழ் கொண்டு விட்டது)

25.10.1990 வீரகேசரி பத்திரிகை செய்தியொன்று அம்பாறை மாவட்டத்தில் அகதிமுகாம்கள்: 22, அகதி குடும்பங்கள் 6655, அகதிகள்: 24,124 என அரசு அறிக்கைகளை மேற்கோள்காட்டியது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தை தவிர பத்திரிகை செய்திகளின்படி:

திருமலை மூதூரில் 14 தமிழர்கள் வெட்டிக்கொலை

***(வீரகேசரி 14.08.1990)***

மட்டக்களப்பு செங்கலடியில் 85 தமிழர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்கள்

***(வீரகேசரி 16.08.1990)***

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு சென்ற பஸ்ஸிலிருந்து 35 தமிழர்கள் கடத்தப்பட்டார்கள்

***(வீரகேசரி 24.08.1990)***

புதுக்குடியிருப்பில் 19 தமிழர்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

***(21.09.90 - முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரனின் உரையிலிருந்து)***

25.10.1990 வீரகேசரி பத்திரிகை செய்தியொன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதி முகாம்கள்: 58,

→

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அகதி குடும்பங்கள் 14,689, அகதிகள்: 63, 869 என அரசு அறிக்கைகளை ஆதாரம் காட்டியது)

இன ஒழிப்பு நடவடிக்கைகள் மாத்திரமன்றி குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலப்பிரதேசங்களையும் திட்டமிட்டரீதியில் சூறையாடும் நடவடிக்கைகள் கூட சில முஸ்லிம் சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

திராய்கேணி கிராம தமிழர் காணிகள் அடாத்தாக அபகரிப்பு

***(வீரகேசரி 18.07.1990)***

திராய்கேணியில் திட்டமிட்ட ஊடுருவலைத் தடுக்கவும்.

***(வீரகேசரி 18.07.1990)***

திராய்கேணி காணிகளை அபகரிக்க முயற்சிப்பதாகப் புகார்.

***(வீரகேசரி 18.07.1990)***

அம்பாறை மாவட்டத்திராய்கேணி அத்துமீறல் குடியேற்றங்களை நிறுத்தும்படி ஜனாதிபதியிடம் வேண்டுகோள்.

***(தினகரன் -17.07.1996)***

205 ஏக்கராக இருந்த திராய்கேணி 180 ஏக்கராக குறைந்துள்ளது.

***(வீரகேசரி - 08.10.1996)***

சலவைத்தொழிலாளர்கள் குடியிருப்புக்களை அழித்து, அணைக்கட்டு நிர்மாணிப்பு

***(வீரகேசரி 27.08.1996)***

யாளர்கள், ஆசிரியர்கள், ஓர் உடற்பயிற்சி உத்தியோகத்தர், தபால் அதிபர் ஆகியோர்.

***(ம.உ.யா. ப.ஆ. - அதே அறிக்கை)***

சுருக்கமாகச் சொல்வதானால், ஈழ விடுதலைப்போராட்டத்தின் வெற்றி என்பது கிழக்கு மாகாணத்தையும் பொறுத்தது என்பதையும்; கிழக்கைப் பொறுத்தவரை இதன் சாத்தியப்பாடு தமிழ் - முஸ்லிம் உறவிலுள்ளது என்பதையும் மிக நுணுக்கமாக கண்டு கொண்ட அரசு; கிழக்கிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலும்; தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கவும், முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் இயக்கங்களில் இணைவதைத் தடுக்கவும் தமிழ் தீவிரவாத இளைஞர்களைக் காட்டிக்கொடுக்கவும்; முஸ்லிம் இளைஞர்களைப் பயன்படுத்தத் தொடங்கியது.

இதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கக்கூடிய உறுதுணைக்கு இன, மத, உணர்வுகள் உகப்பிலித் தக்க வகைக்கு பக்கபலமாய் புனித யுத்தம் எனும் பொருளடக்கமாக 'ஜிகாத்' அமைப்பையும் அன்றைய அரசு உருவாக்கியது. முஸ்லிம் ஊர்காவற் படைக்கு ஊட்டம் கொடுத்து தோற்றுவித்தது என்பதே உண்மை. இளைஞர்களுக்கு இயல்பாகவே இருக்கக்கூடிய ஆயுதக் கவர்ச்சியும் இதன் மூலம் சமப்படுத்தப்பட்டது.

இனி, முஸ்லிம் ஊர்காவல் படையின் தோற்றம் பற்றிய வரலாற்றுடன் தொடசலாக கூறப்பட்ட விடயங்களுடன் முதலாவது கருத்தைப் பார்ப்போமானால் இக்கட்டுரையில் முஸ்லிம் ஊர் காவற்படை என்பது ஒட்டு மொத்தமான முஸ்லிம் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகவே காட்டப்பட்டுள்ளது. அப்படியானால், வட - கிழக்கில் வாழும் சகல முஸ்லிம் சமூகமும் முஸ்லிம் ஊர்காவற் படை பயங்கரவாத நடவடிக்கைகளால் உருவாகும் சகல அச்சுறுத்தல்களில் இருந்தும் தம்மைப் பாதுகாக்கும் என்று நம்புகிறதா? அதற்குரிய சகல வல்லமையும் பொருந்தியுள்ள ஒன்று அது என எண்ணுகிறதா? அது, தமது சமூகத்தின் விமோசனத்தைப் பெற்றுத்தரும் என்று விசுவாசிக்கின்றதா?

முஸ்லிம் ஊர்காவற்படையில் தம்மை இணைத்துக்கொண்ட எந்தவொரு முஸ்லிம் இளைஞனும் முற்றுமுழுதாக தமது சமூக விடுதலைக்காகத் தான் தன்னை இணைத்துக்கொண்டான் என்று முடியுமா? அவர்கள் தொழில் ரீதியாக, வேலைவாய்ப்புக்காக சேரவில்லை என்று சொல்லலாமா? 1984, 85க்குப் பிற்பாடு வேறு, தமிழ் ஆயுதக்குழுக்களில் எந்தவொரு முஸ்லிம் இளைஞனும் இணைந்து கொள்ளவேயில்லையா? உண்மையில் இவற்றுக்கான பதில் எதிர் மறையாகவே இருக்கிறது.

***(27.04.1997 தினகரன் செய்தி: 5 இளைஞர்கள் ஈ.பி.டி.பி.இல் இணைந்தனர்)***

இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்தால் ஊர்காவற்படை அங்கீகரிக்கப்பட்ட ஒன்று என்று எப்படிக் கூற முடியும்?

இரண்டாவதாக, முஸ்லிம் சமூகத்தை அல்லது முஸ்லிம் ஊர்காவற் படையினரை மக்கள் விடுதலைப் புலிகள் தாக்கக்கூடாது என்ற உத்தரவாதத்திற்கான எதிர்பார்ப்பு பற்றிப்பார்ப்போம்.

இன்னுமொருவகையாகப் பார்ப்போமானால், தமிழ் சமூகத் திடமிருந்து உத்தரவாத எதிர்பார்ப்பு அல்லது தமிழ் சமூகத்தைக் குறை கூறும் நடவடிக்கை என்பது ஒட்டு மொத்தமாக தமிழ் சமூகத்தையே புலிகளாகவோ ஆயுதக்குழுக்களாகவோ பார்ப்பதற்கு ஒப்பாகும். அல்லது விடுதலைப் புலிகள் தமிழ் ஆயுதக்குழுக்கள் என்பன ஏகபோக தமிழ்ச் சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளாக காட்ட முனைவதாகும். இவ்விடயமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றல்ல.

ஏனெனில் தமிழ் ஆயுதக்குழுக்களால், விடுதலைப் புலிகளினால், முஸ்லிம் சமூகம் மாத்திரமல்ல தமிழ் சமூகமும் கூட வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

தேசிய இராணுவத்துக்கு பலவந்தமாக இளைஞர்கள் பிடிக்கப்பட்டது முதல், இன்றைய வரி வசூலிப்புக்கள் வரை தமிழ் சமூகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இன்றுவரை முடிவில்லாத அகதி வாழ்வு, கல்வி, பொருளாதாரம், தொழில் சமூக மேம்பாடு அத்தனையும் தடம்புரண்டு போயுள்ளன. ஒருவகையில் நடுநிலைப் பார்வையில் ஆயுதக்குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளினால் ஒப்பீட்டு ரீதியில் தமிழ் சமூகமே வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தொழில்ரீதியாக பொலிசில்வேலை செய்த தமிழ் பொலிசார்கள் கூட புலிகளின் அச்சுறுத்தல்கள், கொலைப் பயமுறுத்தல்கள் காரணமாக தமது வேலைகளை விட்டொதுங்கி கூலிவேலை செய்து தமது குடும்பத்தை காப்பாற்றும் நிகழ்வுகள் கூட எம்முன் உள்ளன.

அடுத்ததாக முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு புலிகளிடமிருந்து உத்தரவாதம் தரப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு உண்மையில் இது சலவைத்தொழிலாளர்கள் வெளியேற்றம்.

***(வீரகேசரி 30.08.1996)***

(ஆலையடிவேம்பு பிரதேசப் பிரிவிலுள்ள மேற்படி தமிழ் மக்களுக்கு சொந்தமான பலநூறு ஏக்கர் காணி பறிபோதல் தமிழ் அரசியல் கட்சிகளின் துரித தலையீட்டினால் தடுக்கப்பட்டது)

குழப்பத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களை இடம்பெயரச் செய்வதற்காக பொலிசிலும், ஊர்காவற் படையிலும் உள்ள தீய சக்திகள் திட்டமிட்ட தமிழ் மக்களின் குடியிருப்புக்களை நோக்கி அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படுவதாகவும் தமிழர்களின் கடைகள் மீது திட்டமிட்டு குண்டுகள் வீசப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

***(வீரகேசரி -03.07.1996, தினகரன் - 04.07.1996)***

இறக்காமம் நுரைச்சோலைக் கண்டத்தில் பத்து தமிழர்களுக்குச் சொந்தமான பெறுமதிமிக்க முப்பது ஏக்கர் காணி சில முஸ்லிம் மக்களினால் அபகரிக்கப்படுவதற்கான பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டு அது பலத்த சிரமத்துக்கு மத்தியில் முறியடிக்கப்பட்டது.

(நுரைச்சோலை D207 இலக்க காணி அத்துமீறல்கள் தொடர்பான பிணக்கு அம்பாறை மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் 11.11.1996இல் தீர்த்து வைக்கப்பட்டது)

ஆகவே, கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக தனியான ''முஸ்லிம் அலகு'' கோரப்படும் அம்பாறை மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு முஸ்லிம் சக்திகளினால் போதியளவு பாதுகாப்பு உண்டா என்ற கேள்விகளுக்கு அப்பால்,

கடந்த காலங்களில் முஸ்லிம் தீய சக்திகள் தனித்துவம், தவித்த முயல் அடிக்கும் பாணியில் ஆமி, 'கொளக்கொட்டி' என்பவற்றுடன் சேர்ந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும், நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயும், கோடிக் காணக்கான சொத்துடைமைகள் சூறையாடப்பட்டும், நாசமாக்கப்பட்டும், கல்முனை முதல் அக்கரைப்பற்றுவரை இந்துக்களின் பூர்வீக ஆலயங்கள் இடித்து தரைமட்ட மாக்கப்பட்டும், ஆறு ஏழு வருடங்களாக இன்று வரை அதிக வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர். (மருதமுனை ஒட்டமாவடி, சம்பவங்களில் நிரந்தமற்ற முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாலும் இங்கு ஓர் கேள்வி நம்முன் ஊஞ்சலாடுகிறது)

உண்மையில், இத்தனைக்கும் காரணம் ஒட்டு மொத்தமான முஸ்லிம் சமூகமா? அல்லது ஒரு சில பிற்போக்கு சக்திகளா? இதற்கான விடை மிகவும் வெளிப்படையானது.

ஒட்டுமொத்தமான முஸ்லிம் சமூகத்தை இதற்குரிய குற்றவாளியாக யாரும் நினைக்க முடியாது.

எனவேதான், தமிழ் - முஸ்லிம் எதிர்காலம் குறித்த **உண்மையான ஐக்கியத்தை வலியுறுத்திய போதும்,** முஸ்லிம் ஊர்காவல் படையினர் யதார்த்த பூர்வமான தோற்றப்பாடு தொடர்பாக - தவறானதொரு வரலாற்றுத் தடம்பதிக்க கட்டுரையாளர் முயன்றது அதற்கு எதிரானதாகி விடுகின்றது.

முஸ்லிம் ஊர்காவற்படையின் இருப்பு தவிர்க்கமுடியாத அவசியம் என்றும் அதை முஸ்லிம் சமூகத்தின் ஓர் பலம்மிக்க அரண் என்றும் சித்தரித்து அதன் நடவடிக்கைகளுக்குத் தூபமிட முனைவது ஐக்கியத்துக்கு ஆரோக்கியமான ஒன்றல்ல.

அத்துடன், முஸ்லிம் ஊர்காவற் படை தொடர்பாக விடுதலைப் புலிகளின் உத்தரவாதத்துக்கான எதிர்பார்ப்பு என்பது வெறும் சிறுபிள்ளைத்தனமானது என்பதுடன்,

தமிழ் ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகளை தமிழ் மக்களின் எண்ணப்பாடுகளாக, செயல்களாக வெளிப்படுத்த விழைந்தமை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியவைகளாகும்.

**நெற்றிக்கண்ணன்.**

## நெடு நிலத்தின் இரு பயணிகள்

97.03.26

எனது பரிதாபமும்
உனது அவஸ்த்தையும்
மீன்வெட்டி செதில் வீசத்துளிரும்
நெடிய வாசத்துள்
ஊன்றப்பட்டன.

பசியின் விரல்
சௌந்தர்ய யுகத்தை
காயமாய் எழுதிப் போன பிறகு -
இமைத் தொடுவைகளில் ஆடி
பனிப் பூவின் நான்காம் மடலாக
அருவி நிறத்துள் நீளமாய் கரைய
நான் ஆசைப்படுவது
நிச்சயமற்றதே.

நீயும்
என் மடிப்புகளை உரித்து
பழைய காதலின்
புதிய வரிகளை
எங்ஙனம் பாடலாக்க முடியும்!

நாம்
சோக மா! வாழ்வு பெற்றோம்
நமது கதை
வர்ணங்களற்ற பெருவெளியில்
தொடருவதுமாயிற்று

கூனற் பிறையின்
சிறு ஒளியையேனும்
உனக்குள் விழுந்தி - நகர,
ஆற்றாமலே
நானின்றில் அழுதெரிய
நிஜமென்றான உனதுள்
தருவதற்கான சந்தோசமில்லை
இந் இழி நிலத்தில்.


இதோ! நதியின் இரு சிறகுகள்,
மேகத்தின் நெஞ்சில்
இரு வேறு திசைகளை கடந்து செல்கின்றன.

இரவுகள் கடந்தன.
பகல்கள் வந்து போயின
ஆயினுமே
ஆகாயத்தின் நீல ஒயிலை நிராகரித்து
செந்தணலின் போர்வையாய்
அவைகள் கடந்தன:
பூமரங்களை
வசந்தகாலப் பறவையின் மேலுதட்டை
நிலவுறையும்
தொலை தூரத்துப் புல்வெளிகளை
இன்னும் பலதை.

அன்பே காதலி,
புகை நமது வாசல்களை திரையிட்டது
இசையின் நெடுவர்ணத் தூரிகையும்
ஓசைகள் தருவதாயில்லை.
புல்லோரங்கள் சலசலக்கின்றன;
மென்மையான புன்னகையில்
நாம்
ஒருவரை ஒருவர்
கடந்து செல்வோம்.

அந்தப் புன்னகையில் -
இன்னுமே பசி இருக்கிறது
இன்னுமே போர் இருக்கிறது
காதலாய், பாடலாய் நுரைய
நெஞ்சிருக்கிறது!
பிறகும் நீ வா!!

அஸ்வகோஷ்



www.tamilarangam.net



ராதிகாவுக்கு பதில்!

# பெண் விடுதலைப் புலிகள்: எந்த விடுதலை இலக்கு!?

விடுதலைப் புலிகள் மகளிர் அணிபற்றியும் அது சமூகத்தில் புரிந்த தாக்கம்பற்றியும் ராதிகா குமாரசுவாமியினால் ஆற்றப்பெற்ற உரை சரிநிகரில் வெளியானது. அதனைத் தொடர்ந்து அதற்கான எதிர்வினைகளும் வெளியாகின. பின்னர் எதிர்வினையை எதிர்த்து ராதிகா குமாரசுவாமி எழுதியதும் வெளியாகியது. இருந்தும்வாதத்தில் முற்றுப்புள்ளி ஏற்படவில்லை. ராதிகா குமாரசுவாமியின் மையக் கருத்தை எடுத்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ராதிகா குமாரசுவாமி பல்வேறு கோணங்களில் கீழ்க்காணும் முடிவுகளை மையமாகக்கொண்டே தனது கருத்தை வலியுறுத்த எண்ணுகிறார் என்பது பிரசுரிக்கப்பட்ட அவரின் கட்டுரையில் இருந்து விளங்க முடிகின்றது.

1. தேசியம் குறுகிய மனப்பான்மை கொண்டது, பிற்போக்கானது.
2. எதை அடைவதற்கும் வன்முறை ஊடகம் அல்ல.
3. பெண்கள் ஆயுதம் தாங்குவதென்பது சமூகத்தை இராணுவ மயமாக்குகின்றது.
4. பெண்களின் நடைமுறை பெண்களை பெண்மையை இழக்கச் செய்கின்றது, ஆண் நோக்கிய நிலைக்கு இட்டுச் செல்கின்றது.
5. வாழ்வைப் பேணிக்காக்கிறவளாக பெண்கள் இருந்தலே முன்னைய பெண்ணை ''சக்தியாக்கியது''. புலிகளோ வாழ்வை முடிக்கப்போகிற மரணப்பெண் சக்தியாக உள்ளாள்.
6. விடுதலைப்புலிகளால் காணப்பெற்ற முன்னேற்றகரமான சமூக மாற்றமும் மீண்டும் பழைய நிலைமையை வந்தடையும்.

விடுதலைப்புலிகளின் அமைப்பில் பெண்கள் அணி இருப்பது பெண் விடுதலையையே இலக்காகக் கொண்டு போராடுவதற்காக அல்ல. அது ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தையே இலக்காகக் கொண்டது. தேசியம் என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோசங்களை அடிநாதமாகக்கொள்வதுடன், பிறிதொரு தேசியத்தை தனக்கு சமதையாக எண்ணிப்போற்றுவது. இந்த உயரிய ஜனநாயக கோட்பாட்டில் சகல விதமான அடிமைத் தனங்களும் பிற்போக்குத் தனங்களும் களையப்படுகிறது. (இதில் பெண்ணடிமைத்தனமும் உள்ளடக்கம்) புதிய வீச்சுடன் புதுமை படைக்க நினைக்கின்றது தேசியம். அவ்வாறாயின் தேசியத்தைப்பற்றி இப்படிச் சொல்லலாம். பழைய சிறப்புக்கள் - புதிய பொருத்தப்பாடுகள் = தேசியம்.

தேசியம் ஒரு குறுகிய மனப்பான்மைக்கொண்டது என்று கூறும் ராதிகா குமாரசுவாமி ஒரு வரலாற்று உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மக்கள் கூட்டம் ஒடுக்கப்படும் போது, அடிமைப்படுத்தப்படும் போது, நசுக்கப்படும் போது, ஒடுக்கு முறையாளர்களிடமிருந்து தமது தனித்துவத்தை அடையாளம் காணுவர். இந்நிலையில் மக்களின் உணர்வே தேசியக் குணாம்சத்தைத் தோற்றுவிக்கின்றது. கூட்டு வாழ்க்கையிலிருந்து தனி மனித வாழ்க்கையை பிரித்துப் பார்க்க முடியாத உலகில் குடும்பம் ஒரு குறுகிய கூட்டு வாழ்வு எனில், தேசியம் பரந்த கூட்டு வாழ்வு ஆகும்.

தேசிய வாழ்வையே அனுபவிக்க முடியாத நிலையிலிருக்கும் மக்களிடம் சர்வ தேசியத்தைப் பற்றிக் கதைப்பதென்பது அடிமரத்தில் ஏறாமல் நுனி மரத்தில் ஏறு என்று கேட்பதைப் போன்றது.

எதை அடைவதற்கும் வன்முறை ஊடகம் அல்ல என்ற கருத்தைக் கொண்டிருக்கும் ராதிகா குமாரசுவாமி ''தமிழினத்தின் அரசியற் தலைவர்கள் வெறுமனே தாங்கள் ஒரு அடக்குமுறை வரலாற்றை அனுபவித்தவர்கள் என்ற காரணத்துக்காக, தாம் மனித உரிமை மீறல் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது'' என்று கூறுகிறார்.

தமிழினம் அடக்கு முறை வரலாற்றைக்கொண்டது என்பதை ஒப்புக் கொள்ளும் ராதிகா குமாரசுவாமி அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்ட மக்களை பாதுகாக்க அல்லது மீட்க என்ன செயற்திட்டத்தை வைத்திருக்கின்றார்? அல்லது எப்படியான வழிவகைகளை கையாள வேண்டும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும். சரி அடக்கு முறைக்கு உள்ளாகியவர்கள் மீது எந்த வகையில் நடவடிக்கை எடுத்துள்ளார். அல்லது எந்த வகையில் நடவடிக்கை எடுக்க முடியும்.



யாழ்ப்பாண குடாநாட்டை விடுதலைப்புலிகளிடமிருந்து சிறிலங்கா இராணுவம் மீளக்கைப்பற்றி விட்ட பின்னர், 1995ம் ஆண்டின் பிற்பகுதிக்கும் 1996 முற்பகுதிக்கும் இடைப்பட்ட ஒரு வருட காலத்தில் காணாமல் போயிருப்பவர்களின் எண்ணிக்கை 648 ஆகும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கிறது.

இந்நிலையில் மரணத்தை நோக்கி நிற்கும் மக்களின் வாழ்வியல் இருப்பின் பாதுகாப்பு பற்றிய ராதிகா குமாரசுவாமியின் நிலைப்பாடு என்ன? அடக்கு முறை வரலாற்றைக்கொண்ட மக்கள், தமது பாதுகாப்பிற்காக, இருப்பின் உத்தரவாதத்திற்காக, தம் தலைவிதியை தாமே தீர்மானித்தல்' என்ற நிலைக்குத் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததே. இதன் வெளிப்பாடே தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையாக அமைந்த சுயநிர்ணய கோரிக்கை, சுயநிர்ணயத்திற்கான இந்த உரிமை ஐ.நா சாசனத்திலுள்ள சர்வதேச உடன்பாடு சுயநிர்ணய கொள்கையை பின்வருமாறு விதந்துரைக்கிறது. ''எல்லா மக்களுக்கும் சுயநிர்ணயத்திற்கான உரிமை உண்டு. அந்த உரிமையின் பயனைக்கொண்டு அவர்கள் தமது அரசியல் அந்தஸ்தை சுயமாகத் தீர்மானிப்பதுடன் தமது பொருளாதார சமூக பண்பாட்டு அபிவிருத்தியை சுயமாகப் பின்பற்றுகின்றனர். தமிழினம் தனித்துவமான தேசிய அடையாளங்களைக் கொண்டிருப்பதால் சுயநிர்ணய உரிமையை பிரயோகிப்பதற்கு தகுதியுடையவர்களே, அன்னிய தேசியத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளாகும் போது தமது வாழ்வியல் உரிமையை வென்றெடுக்க ஆயுதமேந்திப் போராடுவதென்பது சட்டபூர்வமானதே. சுரேஸ் மாணிக்கவாசகர் என்பவருக்கு எதிராக கனடிய குடிவரவுத்திணைக்களம் தொடுத்த வழக்கின்போது நிபுணத்துவ சாட்சியளித்த அமெரிக்காவின் போஸ்ரன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் 'ஜெர்ஸ்ரன்'. (இவர் சர்வதேச சட்டமும் போர்விதிகளும் என்ற தலைப்பில் பென்ரகனில் இராணுவ அதிகாரிகளுக்கு விரிவுரைகளை நிகழ்த்தியவராவார்) ''சிறிலங்காவில் நடக்கும் ஆயுதப்போராட்டம் ஜெனிவா ஒப்பந்த நடை முறைகளுக்கு அமையவே உள்ளது'' என்று கூறியமை குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் கூட விடுதலைப் புலிகள் ஒடுக்குமுறை வரலாற்றின் அகிம்சை வழிப் போராட்டத்திற்கு நடந்தவற்றைக் கற்பிதம் செய்து கொண்டே ஆயுதப்போராட்டத்தில் குதித்தனர். குறிப்பாகச் சொல்லக்கூடிய 56இலும் 61இலும் தமிழர் நடாத்திய அகிம்சைப்போர் கேலிக்கு உள்ளாக்கப்பட்டு, நகைப்புக்கிடமாக்கப்பட்டு, களங்கப்படுத்தப்பட்டு இனவாத அரசால் ஆயுதத்தைக் கொண்டு ஒடுக்கப்பட்டது. இத்தருணத்தில் அகிம்சையை அறிமுகப்படுத்திய காந்தியின் சிந்தனையில் எழுந்த கருத்தொன்றைக் கவனித்தல் நல்லது. ''கோழைத் தனத்துக்கும் வன்முறைக்கும் மத்தியில் ஒருதெளிவு இருக்குமானால், நான் வன்முறையையே ஆதரிப்பேன். ஓர் இனம் முற்றாக நசுக்கப்படுவதை பார்த்துக் கொண்டிருப்பதை விட நான் ஆயிரம் தடவைகள் வன்முறையையே விரும்புவேன். அவமானத்தின் இழிவான சாட்சியாக இருப்பதை விட கௌரவத்தைக் காப்பாற்ற நான் ஆயுதம் ஏந்தவும் தயார்'' இதை ராதிகா குமாரசுவாமி போன்ற மனித உரிமைவாதிகள் கருத்திலெடுத்தல் நலம் பயக்கும்.

''பெண்கள் ஆயுதமேந்துவதென்பது சமூகத்தை இராணுவ மயமாக்குகிறது'' தமிழின ஒடுக்குமுறையில் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும், இனவாத வக்கிரத்திற்கும் பலியானவர்களில் கணிசமான பகுதி பெண்களாவர்.'' கிழக்கு மாகாணத்தில் பத்தாயிரம் விதவைகள் உள்ளர் என்ற அரசின் புள்ளி விபரம் இந்த அப்பட்டமான உண்மைக்கு கட்டியம் கூறி நிற்கிறது. இந்த வகையில் அபாரமான அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுபவர்கள் தம்பாதுகாப்பிற்கு ஆயுதம் தூக்குவது சமூகத்தை இராணுவ மயப்படுத்துகிறது - என்றும் ''வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்காக குரல் கொடுக்கும் நான், பெண்ணே வன்முறையாளர்களாவதை எப்படி ஏற்றுக் கொள்வது, என்று வாதம் புரியும் ராதிகா குமாரசுவாமி ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமது வாழ்வியல் தற்காப்பிற்காக ஆயுதமேந்தும் பெண்கள் அதைக்கைவிடுமிடத்து அவலவாழ்வும் மரணமும் தான் அவர்களுக்கு எஞ்சியிருக்கும். இப்போது இவளின் கருத்தை நோக்கினால் இந்நிலைக்கு தமிழ்ப் பெண்களைத் தள்ளவே ராதிகா குமாரசுவாமி வற்புறுத்துகிறார் என்றே பொருள் கொள்ள வேண்டும். அப்படியாயின் கருத்தியல் அர்த்தத்தில் ராதிகா குமாரசுவாமியின் இச்செயற்பாடு வன்முறையானதே.

''பெண் புலிகளின் நடைமுறை பெண்களை இழக்கச் செய்து ஆண்நோக்கிய நிலைக்கு இட்டுச் செல்கின்றது'' இக்கருத்தை கட்டுரையாளர் பல்வேறு கோணங்களிலிருந்து பல்வேறு உதாரணங்கள் மூலம் வலியுறுத்துகிறார்.

தேவையே வாழ்வின் மாற்றத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. பெண்புலிகளின் நடைமுறையென்பது பாரம்பரியத்தை படுகொலை செய்வதென்பதல்ல (ஆபரணம் தவிர்த்தல், ஜீன்ஸ் சேட் அணிதல், தலைமயிர் வெட்டுதல்) இது தேவையின்பாற்பட்டது. இது பெண்மையை இழக்கச்செய்து ஆண்ணோக்கிய நிலைக்கு இட்டுச் செல்கிறது என்பதல்ல அர்த்தம். இது இலக்கை நோக்கிய இலட்சியவாதியான போராளியின் வசதியை படைத்திருக்கிறது என்பது அர்த்தம்.

''வாழ்வைப் பேணிக்காக்கிறவளாக பெண் இருந்ததாலே முன்னைய பெண்ணை சக்தியாக்கியது புலிகளோ வாழ்வை முடிக்கப்போகின்ற மரணப்பெண்ணே சக்தியாக கொள்ளப்படுகிறாள் என்ற ராதிகா குமாரசுவாமியின் கருத்து நகைப்புக்குள்ளாகிறது. ஏனெனில் தன் உயிருக்கு, வாழ்வின் இருப்பிற்கு, அச்சுறுத்தல் ஏற்பட்டபொழுது அதனைப் பேணிப்பாதுகாப்பதற்காக நடைமுறையில் செயல்வடிவம் கொடுக்கும் சக்தியாக பெண்புலிகள் உள்ளனர். உண்மையில் மரணம் பற்றிய அஞ்சாமை கொண்ட வீரப் பெண்ணாகவும், மற்றவரது வாழ்விற்காகவும் தன்னுயிர் கொடுக்கத் தயாராக இருக்கும் தியாகப் பெண்ணாகவும் இருக்கும் இவள் ஒரு உண்மையான சக்தி அல்லவா?

இறுதியாக விடுதலைப் புலிகளால் காணப்பெற்ற முன்னேற்றகரமான சமூகமாற்றமும் மீண்டும் பழைய நிலைமையை வந்தடையும் என்ற ராதிகா குமாரசுவாமியின் கண்டுபிடிப்புப் பற்றிப் பார்த்தால் உண்மையில் விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய இச்சமூகமாற்றமென்பது இப்போது ஆராயப்பட முடியாததே. ஏனெனில் சமூகமாற்றமென்பது வாழ்வின் அசைவியக்கத்திற்கேற்ப பலதலைமுறைகளுக்கூடாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்வாகும். சாதாரணமாக ஒரு தலைமுறையென்பது 60 வருடம் எனக்கொண்டால் விடுதலைப் புலிகளின் காலமென்பது 1983ல் இருந்து இன்று வரையுள்ள காலமே. இதிலும் மக்கள் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்த காலம் தொடர்ச்சியாக இல்லை. ஓரளவுக்கு பார்ப்பதெனில் 1990 - 1995க்கு இடையிலான ஐந்து வருடத்தையே பார்க்கலாம். இந்த ஐந்து வருட காலத்தில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது. விடுதலைப் புலிகளின் காலமென்று பார்த்தாலும் அரைத் தலைமுறைக்குரிய காலத்தைக்கூட அது எட்டவில்லை. இந் நிலையில் உடனடி சமூகமாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. மாற்றத்தை அவதானிக்கவும் முடியாது என்பது ஒரு சமூக ஆய்வாளனுக்கு விளங்குகின்ற அப்பட்டமான உண்மையே. ஆனால் ராதிகா குமாரசுவாமியினால் விளங்க முடியாது போயிற்று. ஆனாலும் பெண்ணியம் தொடர்பாக சமூகத்தில் முன்னேற்றகரமான ஏறுமுகத்தை விடுதலைப் புலிகள் காட்டியுள்ளனர் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

மேற்கூறியவற்றிலிருந்து முடிவாக வரக்கூடியது என்னவென்றால், தேசிய ஒடுக்குமுறை நிலவும் போது ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படுபவர்கள் அனைவரும்தான். அதாவது ஆண்களும், பெண்களும் தான். பால்வேறுபாடற்ற நிலையில் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் போது பால்வேறுபாடற்ற நிலையில் அதை எதிர்கொள்வதே பெண்ணின் சமத்துவத்தையும், ஆற்றல்களையும் ஆளுமைகளையும் பெண்ணின் சக்தியையும் உணரச் செய்யும். இதை விடுதலைப் புலிகள் இயக்கம் செம்மையாகச் செய்திருக்கின்றது என்றே நான் கருதுகின்றேன். தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள் தேசியத்திற்கே உரித்தான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் பெண் விடுதலையையும் முன்னெடுத்துச் செல்கின்றனர். இதில் காலத்துக்குப் பொருத்தப்பாடற்ற பாரம்பரியத்தின் பிற்போக்குத் தனங்களைக் களைந்தும், களைகின்ற வெற்றிடத்திற்கு தேவையான புதிய பொருத்தப்பாடுகளை இனைத்தும் ஆரோக்கியமான புதிய வீச்சுக் கொண்ட புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்ப புலிகள் நினைக்கின்றனர் என்பதே என் வாதமாகும்.

*எழினி குணரத்தினம்*
*மாங்குளம்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஷைலோ

'யமால் எனிகொவ்' நகரத்தின் புறநகர் பகுதியில்வசித்து வந்த ஒருசிறுவன். சூரியனின் பொற்கிரணங்களை பிடிக்கவும் நழுவி வரும் சந்திரனின் வெள்ளி பிரபை அம்புகளை பிடிக்கவும் ஓயாது முயலும் சிறுவன். தேனருந்தும் பூச்சிகளையும் வண்ணாத்தி களையும் மணிக்கணக்காக துரத்தி திரிந்தபின் அப்பாவின் ரோசா மலர் தோட்டத்தில் இருந்து மலர்களைக்கொய்து கொத்துக்களாக்கிக் கொண்டு திரும்பி வருவான்.

திரும்பி வந்து தன் அப்பாவிடம் கேட்பான் ''அப்பா என்னுடன் வந்து விளையா டுங்களேன்''

''ஐயோ! மகனே!! நானோ ஒய்வற்று இருக்கிறேன் - என்னை நீ மன்னிப்பாய் பிறகொரு தடவை பார்த்துக்கொள்ளலாம்'' என்பார் அப்பா.

ஆர்வமடங்கிச் சோர்ந்து போகும் அவன்,



அம்மாவைக் கண்டதும் கைகளைத் தட்டியபடி மகிழ்ச்சி பொங்க; ''அம்மா நீயாவது என்னுடன் விளையாட வாயேன்'' என்பான்.

அம்மாவோ, மாற்றம் எதுவும் இன்றி ''இப்பொழுது இல்லை மகனே. வேலைகள் எவ்வளவு உள்ளது என்று உனக்கு தெரியும் தானே. விளையாடவெல்லாம் எனக்கு நேர மில்லை. நீ ஓடிப்போய் தோட்டத்தில் விளையாடு'' என்பாள்.

அவனோ மனம் சோர்ந்து போய் வீட்டின் தன் அறையின் மூலை ஒன்றில் ஒடுங்கிப்போவான். அக்குடும்பத்தின் தனித்த பிள்ளையான அவன் தன் விளையாட்டுச் சாமான்களுடன் மூழ்கிப் போவான். தனக்கென நண்பர்களைத் தேடிக்கொள்ள மனிதர்கள் இல்லாமல் போன அவன் உலகத்தில், அவன் தன் மனதுக்குள் ளேயே நண்பனை தேடிக்கொள்ள வேண்டியி ருந்தது. தனது நிழல் ஒன்றை அவன் தன்னுள் கண்டு கொண்டான். தனக்கொரு நட்பை அவன் தனக்குள்ளேயே தேடிக் கொண்டான். அவனுக்கு ஷைலோ எனப் பெயரிட்டான்.

வேறெவரும் பார்க்காத போதும் வேறெவரும் அவதானிக்காத போதும் அவன் தன் ஷைலோவை மென்மையாக அழைத்துக் கொள்வான்.

''ஷைலோ நீ எங்கே இருக்கிறாய்! வா!! என்னோடு வந்து விளையாடு நீ எனக்கு வேண்டும்''

ஷைலோ ஒரு போதும் வரத்தவறுவதில்லை. அவனுடன் சேர்ந்து சூரியனின் பொன்னிறமான கதிர்களை எட்டிப்பிடிக்கவும், நழுவி வரும் சந்திரனின் ஒளியை அள்ளிக்கொள்ளவும், தேனீக்களையும் வண்ணாத்திகளையும் நாளெல்லாம் துரத்தித்திரியவும், நறுமணம் நிரம்பிய சிவப்பு வெள்ளை ரோஜா மலர்களில் வளையங்களை கட்டவும் அவர்கள் தவறுவதே இல்லை. ரோஜா மலர்கள் நிரம்பிய அந்த மந்திர உலகத்தில், விளையாட நண்பர்கள் அற்றுப் போனபின் தான் வெளியே துரத்தப்பட்டதாய் உணர்ந்த பழைய காலங்களை யமால் ஷைலோவுடன் சேர்ந்து மறந்து போனான்.

யாமாலுக்கு தேவைப்பட்ட பொழுதெல்லாம் ஷைலோ அவனுடன் இருந்தான். யமால் தன் இரகசியங்களை எல்லாம் ஷைலோவிடம் பகிர்ந்து கொண்டான். ஏன்! அவன் தன் இதயத்தையே ஷைலோவுக்கு திறந்து காட்டினான்.

ஒவ்வொரு நாளும் இரவில் நித்திரையாகும் முன்னர் பேசும் கடைசி வார்த்தையும் மறுநாள் காலை படுக்கையில் விழிக்கையில் பேசும் முதல் வார்த்தையும் ஷைலோவுக்குத்தான்.

யமாலின் அம்மாவும் அப்பாவும் முதலில் இவற்றை அவதானிக்கவில்லை. அவன் தன் கட்புலனாகா நண்பனுடன் வாழ்வதை அவர்கள் கவனிக்கவும் இல்லை. அறிந்து கொள்ளவும் இல்லை.

ஆயினும் யமாலின் அம்மா தந்தையிடம் கூறினாள்.

''யமால் ஏன் இப்படி ஒதுங்கிக்கொள்கிறான். மற்றப்பிள்ளைகளுடன் விளையாடுவதும் இல்லை. அவன் அசாதாரணமாக இருப்பதை நீங்கள் அவதானிக்கவில்லையா?

முட்டாள் தனமாக பயம் கொள்ளாதே! அவனுக்கு அதிகம் நண்பர்கள் தேவை என்றால் பிள்ளைகள் பெற்றுக்கொள்வோம் அல்லது அவனை பாடசாலைக்கு அனுப்பு!

ஆண்டவரே! இன்னும் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதா! என் உடம்பு என்னத்துக்காகும். பார்க்கும் தொழில்களும் என்னவாகும். அவனைப் பள்ளியில் சேர்ப்பதுதான் நடைமுறைச் சாத்தியமானது!'' அம்மா முணுமுணுத்துக்கொண்டாள்.

இப்பொழுது யமாலை பாடசாலையில் சேர்த்தாயிற்று.

அவன் பாடசாலைக்கு போகத் தொடங்கினான். ஆயினும் அவனுக்கு ஏனோ வகுப்புப் பிள்ளைகளுடன் அர்த்தமுள்ள உறவை உருவாக்க கடினமாகவே இருந்தது. என்றாலும் அவனொத்த வயதுச் சிறுவர்களுக்கு அவன் அறியப்பட்டதே நல்ல சகுனம்.

காலம் செல்ல செல்ல பாடசாலை நேரத்தில் யமாலுக்கு ஷைலோவுடன் உரையாடிக்கொள்ள வாய்க்காமல் போயிற்று.

என்றாலும் வீடு வந்ததும் சாப்பிட்டு விட்டு மீண்டும் தன் மனமூலையில் ஷைலோவை தேடத் தொடங்குவான்.

ஷைலோ, நீ எங்கு இருக்கிறாய்! வாயேன். நாங்கள் விளையாடுவோம் என முணுமுணுப்பான்.

ஷைலோ அவனிடம் வந்து சேர நேரத்தை வீணடிப்பதில்லை. இருவரும் ஓர் இதயமென சிரித்து விளையாடுவார்கள்.

பாடசாலையில் தந்த கணக்குகளைச் செய்வதில் ஷைலோ உதவிசெய்வதை அவன் அனுமதிப்பான். கூட்டல்கள்... கழித்தல்கள்.. பெருக்கல்கள்.. வகுத்தல்கள்.. ஏன் இலக்கணப் பயிற்சிகள் கூட இருவரும் சேர்ந்தே செய்வார்கள்.

அவனைப்பற்றி சிந்திக்கவே நேரமற்றுத் திரிகிற பெற்றோர் எப்பொழுதாவது அவன் என்ன செய்கிறான் என்றறிய அவனது அறைப்பக்கம் எட்டிப் பார்ப்பார்கள். அவர்களின் நீண்ட நிழல் அவன் அறை வாசலை இருளடையச் செய்கையில் ஷைலோ மறைந்து விடுவான். யமாலின் பெற்றோர் போகும் வரை ஷைலோ யமாலின் மனமூலையில் மூச்சு திணறியபடி இருப்பான்.

யமாலோ சிரித்தபடி சொல்வான் .''என் ஷைலோ நீ ஏன் இப்படிப் பயம் கொள்கிறாய்!''

ஆயினும் யமாலும் ஷைலோவும் தங்கள் நட்பு இன்னும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்தே இருந்தார்கள்.

துரதிருஸ்டவசமாக யமால் இன்னும் வளர்ந் தான். அவனுக்குள் வேறு பல ஆர்வங்களும் வளர்ந்தன. பல மனிதர்களையும், பல நண்பர்களையும் அவன் கண்டு கொள்ளத் தொடங்கினான். இப்பொழுது யமால் முன்பு போல தனித்த பொழுதுகளில் ஒதுங்கி இருந்து தன் நண்பன் ஷைலோவுக்காக ஏங்குவதும் முணுமுணுப்பதுவும் வெகு அருமையாகிப் போயின. இடையறாத தேடல்கள் பலவற்றின் பின் அவன் தனக்கொரு நண்பியை தேடிக் கொண்டான். யமால் காதலின் வசப்பட்டான்.

ஷைலோவுக்கான இடத்தை அவன் அவளுக்கு தந்து விட்டான். ஷைலோவுடன் பகிர்ந்து கொண்ட அத்தனையையும் அவளுக்கு தந்து விட்டான். தந்தபின் அவன் அவளிடம் தன் ஆத்மாவின் ரகசியமான ஷைலோவைப்பற்றி கூறினான். தனித்து விடப்பட்ட ஓர் ஆத்மா தனக்குள்ளேயே ஓர் நட்பைத் தேடிக்கொண் டதும் அந்த நட்பே எல்லாமுகமாக வாழ்ந்ததுமான தன் இதயத்து மூலையை தன் மனைவிக்கு திறந்து காட்டியபின் அவன் அவளிடம் கேட்டான்.


''உனக்கு புரிந்து கொள்ள முடிகிறதா? புரிந்து கொண்டாய் என்றால் சத்தியம் செய்! என் காதலின் இரகசியத்தை விசுவாசிக்கிறேன். என்று!''

அவளோ, விழிகள் விரிய, புன்னகை தவழ பரபரப்புற்று நம்பமுடியாதவளாக இருந்த போதும்,

''புரிந்து கொண்டேன்'' என்று கூறினாள்.

'ஆண்டவரே இப்பொழுது என்னால் பறக்க முடியுமே! என் கைகளை பற்றிக் கொள்கிறாயா'' என யமால் குதூகலித்தான்.

உண்மையிலும் அவன் பறக்கப்போவதில்லை



என்றறிவான் ஆயினும் அவளுக்கான அவனின் காதலின் உத்வேகத்தில் நிறைவேற்ற முடியாதனவெல்லாற்றையும்நிறைவேற்ற ஆசை கொண்டான். உதவுவாளோ அவள்?

அவள் அவன் மனதை புரிந்து கொண்ட ஒருத்தி சொல்வது போல,

''உண்மையிலும் உன்னால் பறக்க முடியும்! என் கைகளை எடுத்துக்கொள். உன்னுடன் எனக்கு இடம் கொடு'' என்றாள்.

காலங்கள் போயின.

புயலும் இருளுமான ஓர் நாள் அவள் அவனின் அருகில் வருகிறாள். அவன் கலவரப்படத் தொடங்கினான். அவள் முகத்தில் பரவியிருப்பது என்னஉணர்வு?

''உன் வேடிக்கை வினோதங்களால் நான் களைத்துப்போனேன்.''

நம்பிக்கைத் துரோகமே அவள் முகமெங்கும் பரவியுள்ளதென்பதை அவன் உணரத் தலைப்படுகையில் அவள் இன்னும் கூறுகிறாள்.

''உன்னுடன் இருப்பதற்கு இனியும் எனக்கு முடியாது. நீ வேறு ஒருத்தியை பார்த்துக்கொள்''

அவன் இதயம் உடைந்து நொருங்கி உதிரத் தொடங்குவதை உணர்ந்தான். கைவிடப் படுதலை, நிராதரவின் கசப்பை அவன் தன் வாயில் உணர்ந்தான். நாட்கணக்காக வாடி இரவுகளில் உறக்கமற்று தவித்தான். உணவு இறங்கவில்லை. உலகம் வெறும் மாய்மாலமாகத் தெரிந்தது. வெறுப்புணர்வு அவனைச் சூழ்ந்தது. கண்ணைக் கருவளையம் சூழ்ந்து கொள்ள ஆழ்ந்த மன அழுத்தத்தின் அரசாட்சிக்குள் தன்னை அவன் மூழ்கடித்துக்கொண்டான்.

அவனை அழுத்திய வெறுமைக்குள் இருந்து மீண்டுவர நம்பிக்கை தருவதற்கு ஏதேனும் உண்டா?

எனிகொவ் புறநகர் பகுதியில் தன் பெற்றோரின் ரோசா மலர்த்தோட்டம் அவனுக்கு ஞாபகம் வந்தது.

பிரகாசமான மாலைப் பொழுதொன்றில் அவன் தன் பெற்றோரிடம் திரும்பிப்போனான். சூரியனின் பொன் ஒளியின் கீழே எங்கே அவன் இளமைக்காலம் திரும்பியதோ அந்த மந்திர நிலத்திற்கு அவன் போனான். அங்கே அவன் தன் உண்மையான நண்பனை நினைவு கூரத்தொடங்கினான். தானும் ஷைலோவும் வாழ்க்கையை பகிர்ந்து கொண்ட விதத்தை நினைவு கூரத்தொடங்கினான்.

ஷைலோ அவனை ஒரு போதுமே கைவிட்ட தில்லை. நம்பிக்கைத் துரோகம் செய்ததில்லை. யமால் தான் தன் கட்புலனாகா நண்பனான ஷைலோவை கைவிட்டிருந்தான்.

இப்பொழுது அந்த மலர்த்தோட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் யமால் தன் நண்பனை தேடத் தொடங்கினான். சிறுவனாயிருக்கையில் செய்தது போலவே, தேடத்தொடங்கினான். யாருமற்ற பொழுதுகளில் அவன் தன் இதயத்துக்குள்ளேயே கண்டுபிடித்த நண்பன் ஷைலோ எங்கே!

ஓய்ந்து போய் மரம் ஒன்றின் கீழ் இருந்து நம்பிக்கையற்ற குரலில் ஏக்கமுடன் ''ஷைலோ நீ எங்கே இருக்கிறாய்! நான் உண்மையாக உனக்காகத் தவிக்கிறேன். தயவு செய்து என்னிடம் வாயேன்.'' என அழைத்தான்.

யமாலின் இதயத்தின் மிக ஆழமான பகுதியில் இருந்து ''நண்பனே நான் இங்கே இருக்கிறேன்! நீ எங்கே இவ்வளவு காலமும் எங்கே போயிருந்தாய். என்றென்றைக்குமாக நீ என்னை மறந்து போனாயோ என்றிருந்தேன். ஆனாலும் எனக்குத் தெரியும். நாம் இருவரும் நட்பாயிருந்த காலங்களை நீ ஒரு கால் நினைவு கூறுவாயென!

உனக்குத்தேவைப்படும் பொழுது எல்லாம் நான் உன்னருகில் இருக்கிறேன். என்றறிய மாட்டாயோ?''

நீண்ட நாட்களின் பின் யமால் மகிழ்ச்சியின் இனிமையான சூரிய அமிர்த்தத்தை சுவைத்தான். தான் இனியொரு பொழுதும் தன் நண்பனை இழக்கப்போவதில்லை. என்றும் உணர்ந்தான்.

**மூலம்: றூத் அன்டர்சன் (Ruth Andersan)**
**மொழி பெயர்ப்பு: மாஷா.**
**நன்றி: பலஸ்தீன் ரைம்ஸ் செப்டம்பர் 1996**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஸ்ஸாமிலிருந்து ஓர் அழகிய பெண்ணியப் படம்

அவர் பெயர் ஸந்த்வானா பர்தோலோய் (Sautwana Bardoloi). மொங்கோலியச் சாயல் படிந்த வட இந்தியப் பொன்னிறச் சருமம் அவருக்கு. குட்டையான, மெல்லிய உருவம். சாந்தமான முகம். அறிவொளி வீசும் கண்கள். அழகிய ஆங்கில உச்சரிப்பு. இனிமையும், மரியாதையும் கலந்த இங்கிதமான பேச்சு. தன்னடக்கம் அரசோச்சும் ஆளுமை. அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணியக் கலா விற்பன்னர். தொழிலால் ஒரு வைத்தியர். கணவரும் அதே தொழில். இனிய குடும்பம்.

இந்திய மீமா நகரங்களில் நடக்கும் வருடாந்த அனைத்துலகத் திரைப் படவிழாக்களில் இவரை நான் அடிக்கடி சந்திப்பதுண்டு. ஆயினும், இவர் இன்னார் என்று இனங்கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன்.

கடந்த ஜனவரியிலே, திருவனந்தபுரத்தில் இவர் நெறிப்படுத்திய முதலாவது திரைப்படமான அதஜ்யா (Adajya) காண்பிக்கப்பட்ட போது, வியப்பினால் ஆழ்ந்து போனேன். பறத்தல் என்ற பொருள் படும் இந்தப்படம் பற்றிய திறனாய்வுக்குறிப்புக்களைத் தருமுன்னாஇந் நெறியாளர் பற்றிய மேலும் சில விபரங்களைப் பார்ப்போம்.

இவர் ஒரு தலைசிறந்த மேடை நாடக நடிகையென அறிகிறோம். பல விருதுகளைப் பெற்றிருக்கிறார். ஹென்றிக் இப்ஸன் என்ற நோர்வேதேசத்து நாடகாசிரியன் எழுதிய ''காட்டு வாத்து'' (Wild Duck) என்ற நாடகம் அஸாமிய மொழியில் பாடசாலை நாடகமாக மேடை யேற்றப்பட்டபொழுது, இவர் ஒரு நடிகையாக அரங்கேறினார்.

ஹென்றிக் இப்ஸனின் ''பொம்மை வீடு'' (Doll's House) தமிழிலும், 60களில், யாழ்ப்பாணத்தில் மேடையேறியதை பழைய பரம்பரையினர் அறிவர். யாழ்ப்பாணம் தேவன் எழுதிய இந்தத் தமிழாக்கத்தை நெறிப்படுத்தியவர், வேர்னன் அபேசேகர என்ற ஆங்கில நாடகத் துறை விற்பன்னரும், முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருமாவார்.

1973லே, புதுடில்லியில், அகில பாரத நாடகவிழா இடம்பெற்றது. அங்கு மேடையேறிய நாடகங்களில் ஒன்று, ஜோர்ஜ் பேர்னாட் ஷோ எழுதிய ''பிக்மலியன்'' (Pygmalion). இதில் நடித்து, மிகச் சிறந்த நடிகைக்கான விருதைத் தட்டிச் சென்றார் வைத்திய கலாநிதி ஸந்த்வானா குழந்தை நோய் மருத்துவரான இந்தத் திறனாற்றல் மிகுந்த கலைஞருக்கு இப்பொழுது வயது 48.

முதலிலே, 'ஆரண்யக்'' என்ற குறுந்தொலைத் திரைப்படத்தை (Telefilm) தூர்தர்ஷனுக்காக இவர் நெறிப்படுத்தினார். இதனைத் தொடர்ந்து ''மத்தியவர்த்தனி'', 'அவக்ஹ்யாய்'' ஆகிய தொலைப் படங்களையும் நெறிப்படுத்திய அனுபவம் பெற்ற ஸந்த்வானா, முதற்தடவையாக, ''அதஜ்யா'' என்ற முழுநீளக் கதைப் படத்தை நெறிப்படுத்தி வெற்றிகண்டுள்ளார். கலாநிதி இந்திரா கொஸ்வாமி என்ற பிரபல, அஸாமிய பெண் எழுத்தாளர் எழுதிய கதையைத் தழுவி இந்தப்படம் எடுக்கப்பட்டுள்ளது. திரைநாடகத்தையும் (Screenplay) நெறியாள்கையையும் மேற்கொண்ட ஸந்த்வானா பர்தோலோய்க்குப் பக்கத் துணையாகப் படத் தொகுப்பாளர் ஏ. ஸ்ரீதர் பிரஸாத் நல்ல பணி செய்திருக்கிறார்.

டொம் ஒல்டர் (Tom Alter) என்ற வெள்ளையர்; ட்ரிஷா சைக்கியா (Trisha Saikia) மற்றும் பல அஸாமிய நடிக நடிகையர் இப்படத்தில் நடிக்கின்றனர். மிர்னால் காந்திதாஸின் வண்ணப்படப்பிடிப்பு, ஒளியும் நிழலும் சேரும் கவிதையாக, கண்ணை உறுத்தாமல் களிப்பூட்டுகிறது. ஷேர் சௌத்ரியின் இசை ரம்மியமாய், படத்தின் காட்சிப் புலத்துக்கு உகந்ததாய் ஒலிக்கிறது. சரி, படம் என்ன கூறுகிறது? கதைப்போக்கினூடாக அதனைப் பார்ப்போம்.



ஸந்த்வானா பர்தோலோய்

கே.எஸ்.சிவகுமாரன்

அஸாம் மாநிலத்தின் ஒரு பகுதி. அங்கு பிராமணியரின் அக்ரஹாரம். கதை நிகழும் காலம்: 1940கள் பிராமணியக் கைம்பெண்கள் அவல வாழ்வு வாழவேண்டிய சூழ்நிலை. பிராமணியர்களில் ஒரு பிரிவினர், தாமோதரதேவ் என அழைக்கப் படுகின்றனர். அவர்களுடைய சத்ரத்தின் தலைவர் குடும்பத்தில் மூன்று கைம்பெண்கள். அவர்களுடைய கதையை மமோனி ரோய்சொம் கொஸ்வாமி நாவலாய் எழுதினார். அந்நாவலின் ஒரு பகுதியே திரைவடிவில் வந்துள்ளது. இக்கதையின் வீட்டுத் தலைவரின் இளைய சகோதரி துர்கா. அவள் மருமகன் அவளை அவ்வீட்டுக்குக் கொண்டு வருகிறான். அக்காலக் கைம்பெண்கள் அனுபவித்த சொல்லொண்ணாத் துயர்களை துர்கா அனுபவித்தாலும், இறந்து போன தனது கணவனுக்கு இறுதிக் கிரியைகளைக் காசிக்குச் சென்று நிறைவேற்றலாம் எனக் காத்திருக்கிறாள். இதற்காகத் தனது நகை நட்டுக்களை விற்றுவிடவும் அவள் தயாராக இருக்கிறாள்.

சத்ராதிகார் (சத்ரத்தின் தலைவர்) தம்பியின் கைம்பெண், நம்பிக்கைக்குப் பொறுப்பான ஒரு வேலையாள் மூலம், தனது நிலபுலன்களையும், குடியிருப்பாளர்களையும் கவனித்துக்கொள்கிறாள்.

துர்காவின் விலையுயர்ந்த நகைகள் களவு போகின்றன. மனிதர்கள் மீது வைத்திருந்த அவள் நம்பிக்கை தவிடுபொடியாகிறது.

இக்கதையில் வரும் மூன்றாவது இளம் விதவையினூடாகத் தான் பெண்ணியக் கருத்தோட்டங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவள் பெயர் கிரிபாலா. இவள் வீட்டுத் தலைவனின் இளைய மகள். படத்தில் ஆரம்பத்திலேயே இவளை ஓர் இளம் விதவையாக அறிமுகப் படுத்துகின்றார் நெறியாளர். அவள் சிந்தனையும், போக்கும் வேறுபட்டவை. ஏனைய உயிருள்ளவர்கள் போலவே, கைம்பெண்களும், தாம் எங்கு, எவ்வாறு வாழ →

# தலித்தியக் குறிப்புகள்



மிக அண்மைக் காலமாக இலங்கையிலும் "தலித்தியம்" ஒரு பேசுபொருளாக ஆகியிருக்கிறது. குறிப்பாக மலையகத்தில் கடந்த காலங்களில் பல மேல்சாதியினர் தத்தமக்கென அமைப்புகளை உருவாக்கிய காலம் போய் தற்போது ஒடுக்கப்பட்ட சாதியினரும் நிறுவனப்பட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் இவ்வாறான ஒடுக்கப்பட்ட சாதியினரின் அமைப்புகள் இருந்து வந்துள்ள போதும் குறிப்பிட்ட சில காலமாக அவைபற்றி எந்தவிதப் பேச்சுமே இருக்கவில்லை. மேலும் தனித்தனியாக சாதி அமைப்புகள் இருந்தன. ஆனால் இன்று "தலித்தியம்" என்கின்ற ரீதியில் ஒடுக்கப்பட்ட சாதியினரின் அணி திரள்வு புதிய போக்கை எடுத்துக் காட்டுகிறது.

கடந்த காலங்களில் இருந்து வந்த சாதி அமைப்புகளில் பெரும்பாலானவை "சாதிப்பெருமிதம்" பேசிவந்தனவாகவே இருந்து வந்துள்ளன. ஆனால், இன்றைய அணிதிரள்வுகள் ஓரளவு அரசியல் முன்னெடுப்புகளை தாங்கியிருப்பதாகவே படுகிறது.

இவ்வாறு ஒடுக்கப்படும் சமூகத்தினர் தமக்கான அமைப்புகளை சேர்ந்தும் தனித்தனியாகவும் ஆரம்பித்து வருவதை பலர் கொச்சையாகவே நோக்குகின்ற போக்கும் இல்லாமலில்லை.

"இன்று தமிழ் நாட்டில் "தலித்தியம்" பேசுவதற்காக இலங்கையிலும் அது பற்றி பேச வேண்டுமா?" என்ற கேள்வி தற்போது, எழுப்பப்படுகிறது. இதில் ஒரு உண்மையுமுண்டு. தமிழ் நாட்டுச் சூழலை நிச்சயமாக இலங்கைச் சூழலோடு பொருத்தி விடவோ, அதே தலித்தியப் பார்வையில் இலங்கையின் சாதியத்தை நோக்குவதும் கூட பிழையான அணுகுமுறையே. அதற்காக இன்று சாதியப் பிரச்சினைகள் குறித்து பேசாமல் விடுவதோ ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிகளில் கவனம் செலுத்தாமலிருப்பதோ சமூக மாற்றத்துக்கான முன்னெடுப்புகளுக்கு உகந்ததல்ல. அதே வேளை தமிழ் நாட்டில் தலித்திய விவாதங்கள், எழுச்சிகள் என்பவை நிச்சயமாக இலங்கையில் அதை பேசுபொருளாவதற்கு தைரியத்தையும் உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளதுடன் முன்னுதாரணமாகவும் பயனளிப்பதாகவும் உள்ளன.

இலங்கையில் கூட தமிழ்ச் சமூகத்தினுள் நிலவி வரும் சாதியத்துக்கும் சிங்கள சமூகத்தில் நிலவுகின்ற சாதியத்துக்குமிடையில் கூட வேறுபாடுகள் பல உள்ளன. இலங்கையில் தமிழ்ச் சமூகத்திலும் கூட வடகிழக்கில் நிலவுகின்ற சாதியத்துக்கும் இந்திய வம்சாவழித் தமிழர்கள் மத்தியில் நிலவுகின்ற சாதியத்துக்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் உண்டு.

இலங்கையில் தற்போதைய சாதியமைப்பில் தமிழ் தேசப் போராட்டத்தின் காரணமாக ஏற்பட்ட யுத்தச்சூழல், புலப்பெயர்வுகள், இழப்புகள், இன்னோரன்ன அவலங்களினாலும், திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாகவும் கணிசமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் அம்மாற்றங்கள் சாதியத்தின் அகப் பண்புகளிலும், அதன் கருத்தியலிலும் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த வில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இத்தகைய சூழலில் தான் ஒடுக்கப்பட்ட மக்களின் சாதிய விழிப்புணர்வுகளையும், வெளிப்பாடுகளையும், அவர்களின் எழுச்சிகளையும் நட்புடன் அணுக-ஆதரவளிக்க வேண்டிய (முடிந்தால் தலைமை கொடுக்கவும்) கடமை சகல சமூக மாற்று சக்திகளுக்கு உள்ளது.

இன்று இலங்கையில் வர்க்க, பால், சாதிய போராட்டங்களை பின் தள்ளிவிட்டு இனத்துவ தேசப் போராட்டம் முன்னிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சில வேளை இனத்துவ தேசப்போராட்ட முன்னெடுப்புக்கான தேவையே இருந்திராவிட்டால் அல்லது தேசப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டால் சாதியப் போராட்டம் முதன்மைக்கு வரக்கூடிய சாத்தியங்களும் இல்லாமலில்லை எனவே தான் பொருளாதார குறுக்கல்வாதத்துக்குள் மாக்சீயம் பேசுபவர்களாலோ அல்லது இனத்துவ தேசியவாதத்தில் மாத்திரம் மொத்த கவனத்தையும் செலுத்துபவர்களாலோ சமூகமாற்றத்தை நோக்கி முறையாக நகரவே முடிவதில்லை. சமூக உருவாக்கத்தினையும் அதன் அடித்தளம் மேற்கட்டுமானங்களையும் இனங்கண்டு நகர்தலே சமூக மாற்றத்தில் அக்கறை கொள்வோருக்கு உகந்த வழிமுறையாக இருக்க முடியும்.


அண்மையில் ஒரு கூட்டமொன்றில் அருந்ததிய சமூகத்தின் அமைப்பொன்றைக் குறிப்பிட்டு, சாதிப் பெயர்களில் அமைப்புகள் தொடங்கப்படுவதை சாடினார் ஒருவர். இவர் பழைய திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். அவருக்கு பதில் சொல்லுமுகமாக ஒரு இளைஞர் அக் கூட்டத்தில் பேசும்போது "இன்று பல உயர் சாதியினர் தத்தமக்கென சாதி அமைப்புகளை உருவாக்கியுள்ளபோது ஏன் அருந்ததியர் போன்ற ஒடுக்கப்படும் சாதியினர் தமக்கென ஒரு அமைப்பை நிறுவக்கூடாது. உயர்சாதியினர் தமக்கான ஒரு அமைப்பை உருவாக்குவதற்கும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தமக்கான ஒரு அமைப்பை நிறுவுவதற்குமிடையில் நேரெதிரான காரணங்கள் உள்ளன. முன்னையது ஒடுக்குகின்ற சாதி, பின்னையது ஒடுக்கப்படுகின்ற சாதி. உயர் சாதியினர் தமது வர்க்க, மற்றும் ஒடுக்கும் நலன்களுக்காக தம்மை நிறுவனப்படுத்திக்கொள்கின்றன. ஒடுக்கப்பட்ட சாதியினரோ தம்மீதான ஒடுக்குமுறையிலிருந்து தம்மை பாதுகாப்பதற்காகவும், அதிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் தம்மை நிறுவனப் படுத்திக் கொள்கின்றன. எனவே இரண்டினதும் தோற்றத்துக்கான காரணங்களையும் ஒன்றாக நோக்குவது ஒடுக்குமுறைக்கு துணைபோகும் போக்கே தவிர வேறில்லை" என்றார்.

- அருந்ததியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பேராசிரியர் கணபதிப்பிள்ளை
### கா.சிவத்தம்பி
### வெளியீடு:கொழும்பு தமிழ்ச்சங்கம்

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களால் எழுதப்பட்டு அண்மையில் வெளிவந்திருக்கும் நூல் ''பேராசிரியர் கணபதிப்பிள்ளை'' என்பதாகும். இந்நூல் ''அவரது புலமைப்பாரம்பரியம் பற்றிய ஓர் அறிமுக ஆய்வு'' என உப மகுடம் இடப்பட்டிருப்பதற்கேற்ப காலஞ் சென்ற பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பன்முகப் பங்களிப்புகளை ஆய்வு செய்வதாக அமைந்துள்ளது. இத்தகைய நூலொன்றை எழுதுவதென்பது இலகுவான, எல்லோராலும் முடியக்கூடிய காரியமன்று. பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றவர்களை ஆய்வுக்கெடுப்பதென்பது அவர் போன்ற அறிவார்ந்த (Intellectual) வழிநடத்தலில் வந்தவர்களாலேயே முடியக்கூடிய ஒன்றாகும்.

இன்று, சிவத்தம்பி அவர்கள் கூறும் பல்கலைக்கழக வழிவந்த புலமைப் பாரம்பரியத்தோடு சம்பந்தமுடைய பல்துறை அறிவுமிக்க ஆய்வறிவாளர்களைக் காண்பது அரிதே. இன்று புத்திஜீவி எனச்சொல்லப் படுபவர்கள் தம் அறிவையும் திறனையும் வியாபாரப் பொருட்களாக, தம் சுய நலத்தேட்டத்திற்கும் தம் மேலோங்கலுக்கும் பாவிப்பவர்களாகவும், ஆய்வறிவுத்துறையில் புதிய கருத்துக்கள் முன்வைக்கப் படும் போது அதன் தகுதி கண்டு பாராட்டும் அறிவு நேர்மை அற்றவர்களாகவும் வெறும் வித்துவக் காய்ச்சல் உடையவர்களாகவுமே உள்ளனர்.

இச்சூழலில்தான் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் ஆளுமை துலக்கமுறுகிறது. இந்நூல் இவரால் எழுதப்பட்டதென்பது ஒரு சந்தர்ப்ப விபத்தன்று. தவிர்க்க முடியாத கால ஓட்டத்தின் பணிப்பு தக்க ஓர் ஆளைத் தேர்ந்தெடுத்து தன்னை வெளிக்காட்டுகிறது எனலாம். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மாணவரும் அவரின் புலமைப் பாரம்பரியத்திலிருந்து சுடரேற்றப் பட்டு இன்றுவரை அத்தகைய ஒரு பரந்துபட்ட புலமைப்பாரம்பரியம் நீடிக்கவும் மேலும் வளரவும் ஒரு தனி ஸ்தாபனமாக விளங்கும் சிவத்தம்பி அவர்கள், இக்கால ஓட்டத்தின் தேர்வுப் பணிப்புக்கு இலக்கானதில் வியப்பில்லை.

அதனால் இந்நூல் சிறியதாய் இருந்த போதும், அதில் போடப்பட்டுள்ள அடித்தளமும் பரப்பும் விஸ்தாரமாக இருப்பதால் பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றிய மேலும் பல ஆய்வுகளுக்கும் அவ்வழி ஆக்கங்களுக்கும் உதவுவதாய் இது அமையலாம். முகப்புரை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை பற்றிய எழுத்துக்கள், கல்விப்பின்புலம், சேவைக் காலமும் பிரசுரங்களும், ஆய்வுப் பங்களிப்பு, துறைத்தலைமை, இலக்கியப் படைப்புகள், நாடகம், ஆளுமையும் கருத்துநிலையும், முகப்புரை என பத்துப்பிரிவுகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ஓர் கருத்தியலை அல்லது கருத்து நிலையை நோக்கிய வெவ்வேறு பரிமாணங்கள் நம் முன் கொணர்ந்து நிறுத்தப்படுகிறது.

ஒரு கருத்தியலை நோக்கிய வெவ்வேறு பரிமாணங்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இந்நூலின் கனதி இதனாலேயே பெறப்படுகிறது. அதாவது பேராசிரியர் கணபதிப்பிள்ளை தனது ஆய்வுப் பங்களிப்புகள் அனைத்தையும் ஓர் கருத்தியலை நோக்கியே (Convergent) குவிமையப்படுத்தினார். பல்துறை ஆய்வுகளை ஓர் கருத்தியலை நோக்கி குவிமையப் படுத்துபவனே மேதமைக்குரியவன் (Genius) என உளவியலாளர் கூறுவர். அத்தகைய மேதமைக்குரிய கீற்றுக்களுடனேயே கணபதிப்பிள்ளை இயங்கினார் என்பதை இந்நூலைப் படிப்பவர் தெரிந்து கொள்வர்.

கணபதிப்பிள்ளை ஆற்றிய ஆய்வுத் துறைப் பங்களிப்புகள் பின்வருமாறு:

1. 1936 முதல் 1965வரை 29வருட காலம் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவராக இயங்கிய இவர், இலங்கைப்பல்கலைக்கழகத்தின் தமிழ்க் கற்கை முறையைப் பெரிதும் நிர்ணயித்தார். அதாவது ''பல்கலைக் கழகத்து தமிழ்க் கல்வி மத, பிரதேச வரையறைகளுக்கு அப்பாலானதாய் பொதுமைப் பண்புடைய ஒரு தமிழ்ப் பயில்வினை வழங்கியமைக்கு'' இவர் பங்களிப்பு பெரிதும் உண்டு. பேராசிரியர் பதவி கிடைத்த போது (1947) இவர் ஆற்றிய 'தமிழ் மொழி இலக்கியத்திற்கு இலங்கையின் பங்களிப்பு'' என்ற சொற்பொழிவு இதற்கு நல்ல உதாரணம். இதுபற்றி இந்நூலாசிரியர் குறிப்பிடுகையில் ''அவர் சமய வேறுபாடின்றி மொழி வளர்ச்சிப் பங்களிப்புகளை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது'' என்கிறார்.
2. அடுத்து பேராசிரியரின் முக்கிய ஆய்வுத்துறையாக அமைந்தது ஈழத்தமிழர் வாழ்வியல், வரலாறு, இலக்கியம பற்றியவையாகும்.

இங்கே இவர் ஆய்வில் முக்கியமாக முனைப்புறுவது, சமூகத்தின் உயர் மட்டங்களிலே நிலவிய பழக்க வழக்கங்கள் மாத்திரமல்லாது உண்மையில் அவற்றிலும் பார்க்க அடிநிலை மக்களின் பாரம்பரியங்களையே பதிவு செய்தமையாகும். இது இந்நூலாசிரியர் கூறுவது போல் ஆறுமுகநாவலர் போன்றோரின் 'தூய்மை'வாதப் போக்கிற்கு எதிராக, ஆறுமுக நாவலரால் புறக்கணிக்கப்பட்ட தமிழ்ச் சமூகமனைத்தினதும் போக்குகளை ஆய்வுக்கெடுத்துப் பலப்படுத்தியமையாகும்.

3. பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பிரதான ஆய்வுத்துறை சாசனவியல் ஆகும். ''இந்த ஆய்வின் மூலம் பல முக்கிய தமிழ் நிலைப்பட்ட வரலாற்றுநிலைத் தகவல்கள் வெளிவந்தன'' என்று கூறப்படுவது உண்மையே. இக்காலத்தில்தான் பேராசிரியர் பரணவிதான போன்றோர் இலங்கைத் தமிழர் வரலாற்றை பின்னுக்கு தள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர். அத்தகைய ஒரு போக்குக்கு எதிரான இவரது இத்துறை ஆய்வுகளும் இத்தகைய விசமத்தங்களைக் கருத்திற்கொண்டு இவர் இத்துறையில் மாணவர்களை ஆற்றுப்படுத்தியமையும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியன.
4. இவற்றுக்கு அடுத்து வருவது இறுதியானதும் முக்கியமானது மாகும். மேற்காட்டிய மூன்று ஆய்வுநிலைகளும் குவிமையமுறும் கோட்பாடு (கருத்தியல்) பற்றியதே இது. அதாவது இவர் சாதித்த ஆய்வுப் பங்களிப்புகள் யாவும் ''தமிழருக்கான அரசியல்தளம் ஒன்றை நிறுவும் கருத்துநிலை'' கொண்டதே மிக முக்கியமானதாகும். இது பற்றி இந் நூலாசிரியர் குறிப்பிடுகையில் ''இத்துறையில் மிக முக்கியமாக அமைவது, 'சங்கிலி' நாடகத்துக்கு முன்னுரையாக அவர் எழுதிய ''இலங்கை வாழ் தமிழர் வரலாறு'' எனும் தலைப்புடைய யாழ்ப்பாணத்து வரலாறு ஆகும். அந்த நீண்ட ஆய்வுக்கட்டுரையின் (54 பக்கங்கள்) இறுதியில் ''இதுகாறும் ஒருவாறு யாழ்ப்பாணத் தமிழரின் வரலாற்றைக் கூறினோம். இன்னும் திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி, மலைநாடு முதலிய இடங்களில் வாழும் தமிழர் வரலாற்றையும் இவ்வாறு ஆராய்ந்து வருகின்றோம். இவை யாவற்றையும் இறுதியில் ஒன்று சேர்த்து இலங்கைத் தமிழர் வரலாறு என்னும் பெருநூலாக வெளியிடுதல் எமது நோக்கம்'' என்று பேராசிரியர் கணபதிப்பிள்ளை குறிப்பிடுவதை மேற்கோள்காட்டி உறுதிப் படுத்துகிறார்.


இதிலிருந்து பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ஆளுமை தெட்டத் தெளிவாகிறது. இக்கட்டுரை சிங்களம் மட்டும் (1956) கோஷத்தின் பின்புலத்திலேயே கருக்கொள்ளப் பட்டது என்று சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து அதன் முக்கியத்துவம் பெறப்படுகிறது.


இனத்துவப் பிரச்சினை கூர்மையடைந்துள்ள இன்று, பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ஆய்வுப் பணிகள் அவரின் மிகுந்த தீர்க்க தரிசனத் தன்மையைக் காட்டுவனவாய் உள்ளன. ஆறுமுகநாவலர் ஆதரித்த பொன்னம்பலம் இராமநாதனிலிருந்து இன்று வரை தலைகாட்டும் தமிழ்க் கட்சி அரசியல் வாதிகள் அனைவரும் ஈழத் தமிழர் பற்றி எந்தவித அக்கறையுமற்ற, ஆரோக்கியமான சிந்தனையுமற்ற, கணபதிப்பிள்ளை அவர்கள் தன் நாடகங்களில் கூறும் ''ஐந்தாம் படையின''ராகவும் ''துரோகிகள்''ஆகவுமே இயங்கிவந்துள்ளனர். இவர்களிடமிருந்து விடுபட்டு தமிழ் பேசும் இனம் பலமுறும் வழிகளையே கணபதிப்பிள்ளை அவர்கள் தன் ஆய்வுப்பணிகளில் காட்டிச் சென்றுள்ளார்.

இத்தகைய தகைமை வாய்க்கப் பெற்ற கணபதிப்பிள்ளை பற்றி இன்றைய இளந்தலைமுறையினருக்கு எதுவுமே தெரியாதென்றே கூற வேண்டும். பண்டிதமணி கணபதிப்பிள்ளையைத் தெரிந்தளவு கூட இவரைத் தெரிந்து வைத்திருப்போர் குறைவே. இதற்குக் காரணம் நான் ஆரம்பத்தில் கூறியது போல் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தனது அறிவை வியாபாரப் பொருளாகவோ தன்னைக்கட்டியெழுப்பவோ பாவிக்கவில்லை. அதனால்தான் அவரது அனேகமான எழுத்துக்கள் இன்னும் அச்சுவாகனம் ஏறாமல் கிடக்கின்றன என்பதை இந்நூல் மூலம் அறிகிறோம். கூடவே அவர் பழமைபேண் கட்டுப்பெட்டிகளோடும் செல்வாக்குடைய மேல்மட்டத்தினரோடும் ஒத்தோட மறுத்தவர். இதனால் அவர்களின் காழ்ப்புணர்வுக்கு இலக்கானவர். அதனால் அவர் இறந்து முப்பது வருடங்களாகியும், அவர் பற்றி ஒரு காத்திரமான நூல் எழவில்லை. 'கலையருவி - கணபதிப்பிள்ளை - சில நினைவுகள்' (1974) என்று த. சண்முகசுந்தரம் அவர்கள் எழுதிய நூலைத்தவிர வேறு எதுவும் வரவில்லை என்றால் நிலைமையை நாம் யூகித்துக்கொள்ளலாம்.

ஆனால் இந்த மௌனம் கலைக்கப் படுகிறது.

ஈழத்தமிழர் வரலாறு பண்பாடு கருத்து நிலைகள் யாவும் இன்று மீள்பரிசீலனைக்குள்ளாக்கப்பட்டு மறு உருவாக்கம் செய்யப்பட வேண்டிய, கட்டமைக்கப்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம். இந்நிலையில் பேராசிரியரின் புலமைச் சிதறல் குறித்து நாம் கவனம் செலுத்துவது வரலாற்றியல் தேவையாக உள்ளது. இத்தகையதோர் சிந்தனைப் பரப்பை, தேடலை காலங்கடந்தாவது எம்முன் கொண்டுவந்துள்ள பேராசிரியர் சிவத்தம்பியின் முயற்சி கவனத்திற்கும் முக்கியத்துவத்திற்கும் உரியதே. ஈழத்தமிழரின் புலமைப்பாரம்பரியம் குறித்த ஒருவரின் முறையான சிந்தனைக்கும் தேடலுக்கும் இது வழி சமைத்துச் செல்கிறது.





மெல்லச் சாகும் வாலிபம்.
*(சிறுகதைத் தொகுதி)*
*நற்பிட்டிமுனை பளீல்*
*கல்முனை, இலங்கை.*
*விலை 55/= ரூபா.*

80களில் இலக்கிய உலகுள் பிரவேசித்த நற்பிட்டிமுனை பளீலின் சிறுகதைகள் 'மெல்லச் சாகும் வாலிபம்' என்ற பெயரில் தொகுப்பாகியுள்ளன.

ஏலவே இவரது கவிதைகள் 'மடிக்குள் விழுந்த வெள்ளிகள்' என்ற பெயரில் தொகுதிப்பாய் வெளிவந்திருந்தன.

இதயத்தை அறுக்கும் இடைவெளி, (சிந்தாமணி -1986), மறக்கத் தெரியாத மனசு (1989), மறுபடியும் மறுபடியும் (முனைப்பு - 1989), எது எது எப்படியோ அது அது அப்படித்தான் (மல்லிகை - 1989), அவர்களுக்கும் இதயம் ஒன்றுதான் (வீரசேகரி - 1989), ஜயவேவா (சரிநிகர் - 1994), 16 மாடிகளும் 17 வருடங்களும் (சரிநிகர் - 1995) ஆகிய ஏழு கதைகள் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் 16 மாடிகளும், 17 வருடங்களும் என்ற சரிநிகரில் வெளியான இவருடைய கதை, இவரை பலத்த எதிர்ப்புகளை எதிர் கொள்ள வைத்த சிறுகதையாகும்.

பிரமிக்க வைக்கும் அளவிற்கு நேர்த்தியாகவும், அழகாகவும் நூற்களென்றும், சஞ்சிகைகள் என்றும் வெளிவந்துகொண்டிருக்கும் இன்றைய ஈழத்துச் சூழலோடு பொருத்திப்பார்க்கும் போது, வடிவமைப்பில் இன்னும் கவனம் எடுத்திருக்கலாம் போலுள்ளது.

தொகுப்பு வெளிவந்த திகதி பற்றியோ, வெளியீட்டகம் பற்றியோ எதுவித தகவலுமில்லை.

தொகுப்பிற்கான முன்னுரையில், இக்கதைகளை அந்தந்தக்காலப் பகுதிகளைக் கருத்திற்கொண்டு படிக்குமாறு பளீல் கேட்டுக்கொண்டாலும், ஈழத்தில் ரஞ்சகுமார் **(மோகவாசல் முதற்பதிப்பு 1989 - ஆடி)** போன்றோர், 1980 காலப் பகுதியில் அற்புதமான சிறுகதைகளை தமிழுக்கு தந்திருப்பதையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

***ராசாத்தி***




**எண்பதுகளில் மல்லிகை**
**விமர்சனங்கள்**
*ம. தேவகௌரி*
*வெளியீடு:- மல்லிகைப்பந்தல்*
*234 - B காங்கேசன் துறை வீதி,*
*யாழ்ப்பாணம்*

ஈழத்து இலக்கியப் பரப்பில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் மல்லிகையின் எண்பதுகளின் விமர்சனங்கள் பற்றியதோர் மல்லிகைப்பந்தலின் வெளியீடே இந்நூல்.

ஈழத்து இலக்கியத்தில் ஒரு சிற்றிலக்கிய சஞ்சிகையில் வெளிவந்த படைப்புகளின் விமர்சனங்கள் ஆய்வு ரீதியான ஓர் கட்டுரைத் தொகுதியாக வெளிவந்திருப்பது ஒரு புதுமையான முன் முயற்சியே. ஈழத்துப் படைப்பிலக்கியங்களின் புதிய வருகையும், அதன் வளர்ச்சிப் போக்கில் பல்வேறு பரிமாணங்களையும் தோற்றுவித்ததில் மல்லிகையின் பங்கு மகத்தானது என்பது உண்மையே.

யாழ் பல்கலைக்கழக தமிழ் சிறப்புக்கலைமாணி (1992) இறுதி வருடத்தேர்வுக்காக ம. தேவகௌரி அவர்களால் எழுதப்பட்ட இலக்கிய விமர்சனங்கள் தான், எண்பதுகளில், மல்லிகை விமர்சனங்கள் என இன்று நூலுருவில் எம்முன் வந்திருக்கிறது. இது ஒரு புதுமையான முயற்சி.

***பி. ரவிவர்மன்***



**நிலவின் இரத்தம்**
**(கவிதைத் தொகுப்பு)**
*கருங்கொடியூர் கவிராயர்*
*வெளியீடு:-*
*கமு/ ஆயிஷா பாலிகா*
*மகா வித்தியாலயம்,*
*அக்கரைப்பற்று,*
*இலங்கை.*

எமது அன்றாட வாழ்வின் அவல நிகழ்வுகளையும் வாழ்வின் துயரங்களையும் கொடூரங்களையும் அச்சம் மிகு ஒவ்வொரு கணங்களையும் கருங்கொடியூர் கவிராயரின் ''நிலவின் இரத்தம்'' கவிதைத் தொகுப்பின் வருகை எம்முன் நிறுத்துகிறது.

இயற்கை விதிக்கமையவும், வரலாற்றுப் பெறுபேறுகளின் வாயிலாகவும் எதிர்க்குரல்களுக்கும் மானிடத்தின் மீதான தீவிர நேசிப்பிற்கும் உழைப்பிற்கும் எப்போதுமே பாரிய விளைவுகளை வேண்டி, மாற்றத்தை வேண்டி எழுதுவதே நம்பிக்கை தருவதாகும் என்ற எம். பௌசரின் அறிமுகக் குறிப்பு ஈழத்து இலக்கியம் பற்றிய ஒரு நம்பிக்கையை எம்முன் தருகிறது.


இருப்பினும் கருங்கொடியூர் கவிராயரின் கவிதைகள் தற்கால ஈழத்துக்கவிதைகளுடன் ஒப்பிடுகையில் எங்கோ இருப்பதையும் உணரமுடியாமலில்லை.

***பி.ரவிவர்மன்***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## நிதி மோசடி உண்மையே!

05.06.97ம் திகதிய பத்திரிகையின் 2ம் பக்கத்தில் ''தரமுயர்த்தப்பட்ட செயலகத்தின் தரங்கெட்ட சேவை'' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பான மறுப்பு.

1) 1996ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மட்டக்களப்பு கணக்காய்வு அத்தியட்சகரால் பத்தாயிரம் ரூபா கணக்கு மோசடி பிடிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. இது உண்மையாக கண்டு பிடிக்கப்பட்டது, 19.09.1996ல்தான். இந்த மோசடியில் எனக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது. இந்த மோசடியில் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக உரிய அதிகாரிகளால் உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது சம்பந்தமாக மட்டக்களப்பு கணக்காய்வு திணைக்களமும் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை நீங்கள் மட்டக்களப்பு கணக்காய்வு திணைக்களத்திடமே கேட்டு அறிந்து கொள்ளலாம்.

2) அடுத்து, நீங்கள், நான் ஒழுக்காற்று நடவடிக்கையின் நிமித்தம் மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்திற்கு மாற்றப்பட்டதாக கூறியிருக்கின்றீர்கள். நான் எந்த வித குற்றமும் செய்யாமல் என்மீது எவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது. நான் ஒழுக்காற்று நடவடிக்கையினால் இடமாற்றம் செய்யப்படவில்லை. எனது சுயவிருப்பத்தின் பேரில்தான் நான் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளேன். அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கையில் இடமாற்றம் வழங்கப்படுவதாக இருந்தால், எனக்கு கஷ்டப்பிரதேசத்திற்கல்லவா இடமாற்றம் கிடைத்திருக்கும். ஆனால், எனக்கு கிடைத்திருப்பதோ மட்டக்களப்பு நகருக்கு. இதில் இருந்து இந்த உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்ளலாம்.

3) அடுத்ததாக நிதி உதவியாளர் செயலக திறப்பு விழாவிற்கு இரண்டு தடவைகளில் இருபதாயிரம் ரூபாவை முற்பணமாக பெற்றதாகவும், இது திணைக்களத் தலைவரால் அங்கீகரிக்கப்படவில்லை எனவும் முற்பணப்பதிவேட்டில் பதியப்படவில்லையெனவும், குறிப்பிட்ட செலவு போக மீதியை கையாடிவிட்டதாகவும் அச்செய்தி கூறுகின்றது. எப்போதும் அரசாங்கப் பணத்தில் இருந்து முற்பணம் பெற்றால், அதற்குரிய முழுச்செலவும் காட்டப்பட வேண்டும். திணைக்களத் தலைவரது அனுமதி இல்லாமல் அதனை எடுக்கவும் முடியாது. என்னால் அம்முற்பணம் உரிய செலவுக்கு என எடுக்கப்பட்டு உரிய வகையில் கணக்கு தீர்க்கப்பட்டுள்ளது. அதற்குரிய அத்தாட்சி ஆவணங்கள் கணக்காய்வு அத்தியட்சகருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு பிழை செய்திருந்தால், எனக்கு எதிராக இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

4) அடுத்து புனர்வாழ்வுகொடுப்பனவுகளை கிராம அதிகாரிகளோடு சேர்ந்து கையாடியதாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இக்கொடுப்பனவுகள் கணக்காளர் தலைமையில் நான் உட்பட குறிப்பிட்ட இரு கிளைகளிலும் உள்ள எழுதுநர்கள், குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தரோடு பொது மக்கள் முன்னிலையில் வைத்துக்கொடுக்கப்படும். இதில் எதுவித மோசடியும் செய்ய முடியாது. முடிவில் கிராம உத்தியோகத்தரால் கொடுப்பனவு உறுதிப்படுத்தப்பட்டு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்படும். இந்த விடயத்தில் நான் எந்த விதத்திலும் சம்பந்தப்பட முடியாது.

5) மற்றும் மோட்டர் வாகன சாரதி உத்தரவுப் பத்திரம் வழங்கலில் எழுதுநரோடு சேர்ந்து நான் 100 சாரதிகளுக்கு தற்காலிக உத்தரவுப் பத்திரம் வழங்கியுள்ளதாக சொல்லப்படுகின்றது. இந்த விடயம் நேரடியாக கணக்காளராலும், பிரதேச செயலாளராலும் கையாளப்படுவது. இதில் எனக்கு எந்த வித சம்பந்தமும் கிடையாது.

***வே. கணேமூர்த்தி***
***மட்டக்களப்பு***

## தாண்டிக்குளம் - கிளியரன்ஸ்!

தாண்டிக்குளம் இராணுவ முகாம் மீது புலிகள் மேற்கொண்ட பாரிய அதிரடி நடவடிக்கையை காரணமாகப் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு பதைபதைத்து ஓடிச் சென்ற பொதுமக்கள் இராணுவத்தின் ''கிளியரன்ஸ்'' நடவடிக்கைகளினால் மேலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தாண்டிக்குளம் இராணுவத்தினரைத் தேடி இராணுவ முன்னணி பாதுகாப்புக் காவலரண்களை மிகவும் லாவண்யமாகவும், நாசுக்காவும் ஊடறுத்து உட்புகுந்து வந்த விடுதலைப் புலிகள் தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை இராணுவ முகாம் பகுதிகளில் பேரழிவுகளை ஏற்படுத்திய பின்பே அரசபடைகளினால், அப்பகுதியிலிருந்து புலிகளை அகற்ற முடிந்தது.

இவ்வாறு புலிகளை அகற்றி அப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்த படையினர், புலிகள் எச்சங்களாக விட்டுச் சென்றிருந்த பேரழிவுகளையும் அவற்றின் சின்னங்களையும் அகற்றித் துப்புரவு (கிளியரன்ஸ்) செய்வதில் துரிதமாக ஈடுபட்டார்கள்.

இதன்காரணமாக தாண்டிக்குளம் பகுதியில் சண்டை நடைபெற்ற போதிலும், சண்டை முடிந்த பல மணித்தியாலயங்கள் கழிந்த பின்பும் பீதியில் உறைந்த நிலையில் உடுத்த உடையோடு உடைமைகள், அத்தியாவசியமான ஆவணங்கள் என்பவற்றை அப்படி அப்படியே விட்டுவிட்டு ஓடிச்சென்ற பொது மக்கள் அவர்களது வீடுகள் உடைமைகளைச் சென்று பார்வையிட அனுமதிக்கப்படவில்லை.

தாண்டிக்குளம் மீதான தாக்குதல் நடைபெற்று ஒருவாரகாலம் முடிந்த நிலையிலும் தாண்டிக்குளம் பாடசாலை, புகையிரத நிலையப் பகுதி போன்ற இடங்களைச் சூழ்ந்த வீடுகளுக்கு உரிமையாளர்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இப்பகுதிகளை அண்டிய இடங்களில் உள்ள வீடுகள் பலவற்றிலும் இருந்த உடைமைகள் பொருட்கள் தளபாடங்கள் என்பன மாயமாக மறைந்து விட்டதாக அப்பகுதிகளுக்கு மேற்குப் பிரதேசப் பகுதிவழியாகச் சென்று வந்த கிராமவாசிகள் பலரும் தெரிவித்துள்ளார்கள்.

புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிகளையும் ஒரு பிரதேசத்தை இராணுவத்திடமிருந்து புலிகள் கைப்பற்றினால் மீண்டும் அதனை மீட்ட பின்பும், இராணுவத்தினர் கிளியரன்ஸ் நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மோதல்களில் உயிரிழந்தவர்களது பழுதடைந்த சடலங்கள், அழிவுக்கு உள்ளாகிய போர்த்தளபாடங்கள், அழிவுக்கு உள்ளாகிய வாகனங்கள், சேதமடைந்த கட்டிடங்கள் முகாம்கள் என்பவற்றோடு பொதுமக்களின் வீடுகளில் உள்ள உடைமைகளும் சுத்தம் செய்யப்படுகின்றன.

கடந்த மாதம் ஓமந்தையைக் கைப்பற்றிய இராணுவத்தினர் பொலிசாரிடம் பாதுகாப்பு பொறுப்பை ஒப்படைத்தும் இவ்வாறான சுத்தப்படுத்தும் கைங்கரியம் இடம்பெற்றது. அதே நிலைமை தாண்டிக்குளம் பகுதிக்கும் இப்போது ஏற்பட்டுள்ளது.

இதனை யாரிடம் சென்று முறையிட்டுப் பரிகாரம் தேடுவது என்று பாதிக்கப்பட்ட பொது மக்கள் ஆதங்கத்தோடு வினவுகின்றார்கள்.

## தீர்ப்பு!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அரசியல் செல்வாக்கின்றி ஒரு திறமையான ஒருவர் கூட மேலுக்கு வருவது என்பது குதிரைக் கொம்பு என்பது அறிந்ததே மதியழகனுக்கு தமிழ்தேசியச் சேவை பணிப்பாளர் பதவி ஒப்படைக்கப்பட்டமை தவறு என்று அப்பதவிக்கான சகல தகைமைகளைக் கொண்டிருப்பதாக கூறப்படும் அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் அவர்களால் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்குக்கான தீர்ப்பு கடந்த ııம் திகதி வழங்கப்பட்டுள்ளது. அத்தீர்ப்பின் படி உடனடியாக மதியழகன் கட்டுப்பாட்டாளர் பதவியை மட்டுமே வகிக்க முடியும் என்றும் தமிழ் தேசிய சேவை பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடம் ı மாதத்துக்குள் விளம்பரப்படுத்தப்பட்டு தகுதி வாய்ந்த ஒருவருக்கு அப்பதவி வழங்க வேண்டுமென்றும் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது அரசியல் செல்வாக்குடனேயே மதியழகன் நியமிக்கப்பட்டார் என பேசப்பட்டு வருவது அறிந்ததே

## பகிரங்கப்படுத்துக!

கடந்த பயங்கர கால கட்டத்தில் காணாமற் போனவர்கள்; கடத்திச் செல்லப்பட்ட வர்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் மூன்றினது அறிக்கைகளைப் பகிரங்கப்படுத்துமாறு காணாமற் போனவர்களின் பெற்றோர்; பிள்ளைகளின் அமைப்பு அரசைக் கோரியுள்ளது. இவ் ஆணைக்குழுக்கள் மூன்றும் கடந்த மே மாதம் 31ஆந் திகதியுடன் தமது விசாரணையை நிறுத்திக் கொண்டன. அவற்றின் இறுதி அறிக்கைகள் இப்போது தயாரிக்கப்பட்டு வருவதாக அறியக் கிடைக்கிறது.

காணாமற் போனவர்கள் அல்லது கடத்திச் செல்லபட்டவர்கள் காரணமாக நிர்க்கதியாகியுள்ள அக் குடும்பங்களுக்கு நீதியையும்; நியாயத்தையும் நிலை நாட்ட அவ் ஆணைக்குழுக்களினால் தெரிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? உண்மையிலேயே இச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் யார்? அவர்கள் எத்தனை பேர்? இதுவரை ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியாது போன காணாமற் போன அல்லது கடத்திச் செல்லப்பட்டவர்கள் பற்றி விசாரிக்க எடுக்கும் நடவடிக்கைகள் எவை? ஆகிய விடயங்களுக்கு ஆணைக்குழு அறிக்கையில் பதிலளிக்கையில் பதிலளிக்குமாறு அவ்வமைப்பு கோரியுள்ளது.

## செய் அல்லது செத்துமடி!

''செய் அல்லது செத்து மடி'' (Do or Die) எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் பெயரிடப்பட்ட அதிரடித் தாக்குதல் நடத்தியதற்கான காரணங்கள் இரண்டு என அறியப்படுகிறது.

முதலாவது காரணம் இலங்கைக்கு நிதியுதவி அளிக்கும் நாடுகளின் குழுக் கூட்டம் நடைபெறவுள்ள நேரதத்தில். இலங்கை அரசு வட-கிழக்கு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்கன்றி யுத்தத்துக்காகவே நிதியைச் செலவு செய்வதாகவும்; அதனை இவ்வாறான தாக்குதல்கள் காரணமாகத் தோல்வியடையச் செய்வதனூடாக அந் நாடுகளுக்குச் சுட்டிக் காட்டி நிதியுதவிகளை நிறுத்துவதே இத் தாக்குதலின் நோக்கமாகவுள்ளது.

இரண்டாவது காரணம் அரச படைகளினால் நடத்தப்படும் ''ஜய சிக்குறு'' நடவடிக்கையினால் பாரிய சேதங்கள் ஏற்படுமானால் அத்தாக்குதலுக்கு எதிராகக் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தும் நோக்கத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் விஷேட பிரிவான சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு திருகோணமலை மாவட்டக் காட்டுப் பிரதேசங்களில் நிலை நிறுத்தப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது. ''செய் அல்லது செத்து மடி'' நடவடிக்கையில் பாதுகாப்பு வேலிகளை மேற்குப் புறத்திலிருந்தும் கிழக்குத் திசையிலிருந்தும் உடைத்தெறிந்து உட்புகுந்த முதல் படையணியும் இப் படைப் பிரிவேயாகும் எனவும் தெரியவருகிறது.

## அஸாமில்...

வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமைபெற வேண்டுமென வாதிடுகிறாள்.

இதற்கிடையிலே, அவள் பிராமணியக் குடும்பப் பிரிவினரின் மூதாதையர் பற்றி ஓர் இளம் ஆங்கிலேயன், ஆய்வு மேற்கொண்டு வருகிறான். அவன் அக்ரஹாரத்துக்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் போது, இளம் விதவையான கிரிபாலா, உள்ளத்தாலும், உடலாலும் வேட்கையடைகிறாள். பிராமணிய, இந்து, விதவைகள் நடந்து கொள்ள வேண்டிய, பழைய சம்பிரதாயங்களை, அவள், உதறித் தள்ளுகிறாள். அவள் பெண்ணும் ஒரு மனிதப் பிறவியே என்று நம்பி, சுயாதீனமாக நடந்து கொள்கிறாள். எதிர்பார்த்தவாறே எதிர்ப்பு ஏற்படுகிறது.

எங்கு, வாழவேண்டும் என்று தானே தீர்மானிக்க முடியாவிட்டாலும், எங்கு எப்படித் தான் மரணித்தல் வேண்டும் என்பதைத் தன்னால் தீர்மானிக்க முடியும் என்று செயலில் இறங்குகிறாள் கிரிபாலா. இது, அரை நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சூழலில் பெரும் புரட்சி வாய்ந்த செயலாகும். பெண்ணியக் கருத்துகளின் தோற்றுவாயை இப்படத்தில் காண முடியும் என ஒரு வகையில் நாம் துணிவு கொள்ளலாம்.

நெருக்குவாரங்களுக்கு மத்தியில், மனித நடத்தைகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதையும் இப்படம் மூலம் நாம் அவதானிக்கலாம்.

ஸந்த்வானாவுடன் உரையாடிய பொழுது, அவர் கூறினார்: ''பெண்களே பெண்களின் தீவிரமான எதிரிகள். பெண் திரைப்பட நெறியாளர்களைக் காத்திரமான படைப்பாளிகளாகக் கருதுவோர் குறைவு. இது வருந்தத்தக்கது. மனிதரை மனிதராகப் பார்க்காமல், ஆண், என்றும், பெண் என்றும் பார்ப்பது பேதமை. ஐம்பது வருடங்கள் கழிந்த பின்னரும், இந்தியாவில், கைம்பெண்கள் நடத்தப்படும் விதம் மாறவில்லை.''

''உடனிகழ்காலக் கதையொன்றை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கலாமே?'' என்று வினவியபோது, தான் எடுத்துக்கொண்ட கதையின் நிகழ்வு 40களில் இடம்பெற்ற போதும், அக்கதையில் வரும் மூன்று கைம்பெண்களும், வெவ்வேறு விதமான உலக நோக்கைக்கொண்டிருந்ததனால், அக்கதையில் ஈடுபாடு ஏற்பட்டது என ஸந்த்வானா கூறினார்.

நாவலின் இறுதிக்கட்டத்தில் சில மாற்றங்களைச் செய்தே, தனது படத்தை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். இது ஏன் எனக் கேட்டபோது, ''சினிமா என்ற ஊடகத்துக்கு இயைந்ததாக வேண்டி அவ்வாறு செய்தேன்'' என்றார். நாவலாசிரியை இதற்கு உடன்பட்டதாகவும் ஸந்த்வானா தெரிவித்தார். பாரம்பரியமான ஒரு காதற்கதையைப் படமாக்க விரும்பாது, காதல் ஊடாகப் பெண்ணுரிமை நிலை நாட்டப்படுவதையே தான் விரும்புவதாக, அடக்கமான கவர்ச்சியுடைய இந்தப் பெண் நெறியாளர் குறிப்பிட்டார்.

சம்பிரதாயங்களின் படி கதாநாயகி கிரிபாலா ஒரு கைம்பெண்ணாயினும், அவள் தன்னைக் கைம்பெண்ணாகவே கருதிக்கொள்ளவில்லை. நித்திய துன்பத்தில் உழலும் பழைமைப் பெண்ணாக அவள் வாழவிரும்பவில்லை. புதுமைப் பெண்ணாகவே அவள் வாழத் துடித்தாள்.

தான் ஒரு பெண் திரைப்பட நெறியாளராய் இருந்தபோதிலும், தனக்குக் கணவனும், குழந்தைகளுமே முதன்மையானவர்கள் எனச் சிரித்துக்கொண்டே குறிப்பிட்டார். ஸந்த்வானா போர்தோலேப் போன்ற திறமை சான்ற, பெண்ணியக் கருத்தோட்டம் கொண்ட, அடக்கமான, கலைஞர்களின் ஆக்கங்களைக் காண்பதும், அவர்களுடன் உரையாடுவதும், மகிழ்ச்சிகரமான, அழகியல் சார்ந்த ஆய்வறிவு அனுபவம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka



# மட்டக்களப்பு: தீராத் தொல்லை!

கிழக்கில் அண்மைக் காலமாக இடம் பெற்றுவரும் வன்முறைகளும், மனித உரிமை மீறல்களும் 90களில் நடத்தப்பட்டவைபோலல்லாது ஓர் 'வளர்ச்சியடைந்த' நிலையிலேயே காணப்படுகிறது. 90களில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று இளைஞர்களை இழுத்து வந்து முகாமுக்கு கொண்டு சென்று ரயரில் போட்டு எரிக்கவேண்டிய கஷ்டங்களும் இருந்தது. இப்போதெல்லாம் அவ்வாறில்லாமல் முகாமில் இருந்து ஏவப்படும் 'எறிகணைகளும்', துப்பாக்கி குண்டுகளும் வீடு வீடாகத் தேடிச் சென்று அப்பாவிப் பொதுமக்களின் உயிர்களை குடித்துச் செல்கின்றது. இன்றைய நிலையில் கிழக்கைப் பொறுத்தவரை தமிழராகப் பிறந்த குற்றத்திற்காக தமிழராலேயே தமிழர் கொல்லப்படுகின்ற துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

### தோட்டாக்கள் எத்தனை?

மே மாதம் 23ந்திகதி செங்கலடிச் சந்தையில் வரி அறவிட்டுக் கொண்டிருந்த ரெலோ உறுப்பினர்களை புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து 15 நிமிட இடைவெளிக்குப் பின் ரெலோ உறுப்பினர்களால் மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கோவிந்தம்மா (50), கணேசன் (35), சிவசக்தி (14), இ. சசிதரன் (2 1/2) ஆகிய நான்கு பொது மக்கள் இறந்துள்ளதுடன், எம். பாலிப்போடி (65), மோகனாலக்ஷ்மி (25), குகன் (16), டி. சுந்தரராஜா (18), பி. ஜெயா (36), பொன்னம்மா (45), ராஜேஸ்வரன் (32), புஸ்பவதி (36), வனிதா (18), வாசுகி (24), மேகலா (17), ஜெயராணி (19), பாக்கியலெட்சுமி (17) ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுக்கு உள்ளானார்கள். சம்பவ தினம் குறிப்பிட்ட இடத்தில் புளொட் உறுப்பினர்களும் நின்றுள்ளனர். சாதாரண தமிழ் மக்களின் அடிப்படை நலன்களை துளியளவேனும் கணக்கெடுக்காத நிலையில், சம்பவத்தில் ஈடுபட்ட சகல தரப்பினரும் செயற்பட்டிருக்கிறார்கள் என்றதன் அடிப்படையிலான துண்டுப் பிரசுரம் ஒன்றை புளொட் அமைப்பினர் வெளியிட்டனர். இத்துண்டுப் பிரசுரத்தை மறுதலித்து ரெலோ உறுப்பினர்கள், தாங்கள் 225 சுற்றுத்தோட்டாக்களையும், புளொட் இயக்கத்தினர், 2900 சுற்றுத்தோட்டாக்களையும் பிரயோகித்தனர் என்று துண்டுபிரசுரமொன்றை வெளியிட்டுள்ளனர். எத்தனை சுற்றுத்தோட்டாக்கள் பாவிக்கப்பட்டன என்பதிலேயே கவனமாயிருக்கும் இந்த இயக்கங்கள் எத்தனை அப்பாவிப்பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள், காயம் அடைந்துள்ளார்கள் என்பதைப் பற்றி அக்கறைப் படுவதில்லை. விடுதலைப் புலிகளுக்கும் அது பற்றி அக்கறை

செங்கலடிச் சந்தையில் நடநத இச் சம்பவத்தின் பின் இங்கு வியாபாரம் செய்கின்ற நாளாந்த அங்காடி வியாபாரிகள் கூட இராணுவ முகாமுக்குச் சென்று தங்களால் விற்கப்படும் சாமான்களுக்கு அனுமதி பெற்ற பின்பே வியாபாரம் நடாத்த முடியும். சுதந்திரமாக தங்களது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு வந்த பாமர மக்களுக்கு தேவைதானா இந்த அனுமதிக் கடிதத் தொல்லை?

### ராசீக் குழுவினரின் ராஜாங்கம்

ஜூன் 08. இரவு 8.30மணியளவில் பாலிபோடி சுந்தரமூர்த்தி என்ற மாணவன் ராசீக் குழுவினரால் சுடப்பட்டான். மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவனான சுந்தரமூர்த்திக்கும் புலிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாகவும், இது தொடர்பாக விசாரணை செய்து விட்டு அனுப்பி விடுவதாகவும் சம்பவ தினம் வீட்டிலிருந்து கூட்டிச் சென்று, கொக்குவில் மயானத்தில் வைத்து சுட்டுவிட்டு சடலத்தை போட்டுச் சென்றனர். ஆண்டு 11இல் கல்வி கற்கும் இம்மாணவனுக்கும், புலிகளுக்கும் எதுவித சம்பந்தமும் இருக்கவில்லையென சக மாணவர்கள் தெரிவிக்கிறார்கள். வாழைச்சேனைப் பகுதியில் இரவு பகலாகச் சென்று கடைகளிலும் வீடுகளிலும் நிதி வசூல் செய்கின்றார்கள் இந்த ராசீக் குழுவினர். அண்மையில் வாழைச்சேனையைச் சேர்ந்த முகம்மது றகீம் என்ற முஸ்லிம் அன்பர் ''எங்களுக்கு இராணுவத்தினரின் தொல்லை குறைவாக இருந்தாலும் ராசீக் இராணுவத்தினராலேயே தொல்லை கூடுதலாக இருக்கிறது'' என்று கூறினார்.

### கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு

களுவாஞ்சிக்குடியில் ஜூன் 04. அன்று புலிகளின் உறுப்பினர் ஒருவர் கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த பொலிசாரை தாக்க முற்பட்ட போது அவர் சுடப்பட்டார். இவர் சுடப்பட்டும் அரை மணித்தியாலம் வரை பொலிசார் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர். இச் சம்பவத்தில் கு. தேவரசி (30), செ. வள்ளிப்பிள்ளை ஆகியோர் இறந்துள்ளனர். நாகமணி (55), திரியகலா (13), செட்டிப்பிள்ளை ஆகியோர் காயமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இச்சம்பவத்தைப் பார்க்கும் போது பொலிசார் வேண்டுமென்றே பொது மக்களை தாக்குகின்றார்கள் என்பது தெளிவாகின்றது. இந்தச் சம்பவத்தின் பிற்பாடு பட்டிருப்பு பாலத்தின் ஊடாக சனி, ஞாயிறு தினங்களில் படுவான்கரைப் பகுதிக்குச் செல்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. போரை தீவு, பளுகாமம் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்பவர்களைத் தவிர வேறு யாராவது செல்வதாக இருந்தால் விஷேட அதிரடிப்படையினரிடம் அனுமதி பெற்றுத் தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

### கட்டாய வேலை

மட்டக்களப்பு பிரதேசத்தில் அதிரடிப்படை முகாம்களில் சனி, ஞாயிறு விடுமுறைதினங்களில் பொதுமக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் கட்டாய வேலைக்கு அமர்த்தப்படுவதும், இவர்களின் கைங்கரியங்களில் ஒன்று. மண்டூர் பிரதேசத்தில் உள்ள 15வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பிரதி ஞாயிறு தோறும் விஷேட அதிரடிப் படை முகாமுக்குச் சென்று கையொப்பமிடவேண்டும். கையொப்பம் இடச் செல்கின்ற வேளையில், பங்கர் வெட்டுதல், மலசல கூடம் கழுவுதல், முகாம் துப்பரவாக்கல் ஆகிய வேலைகளில் ஈடுபடுத்தப் படுகின்றனர். பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும் குறிப்பிட்ட தினங்களில் செல்ல முடியாதிருப்பின் அதற்கு தண்டனையாக ஒவ்வொருவரும் இரு கம்பிக் கட்டைகள் வீதம் முகாமுக்கு கொண்டு செல்ல வேண்டும். இதே போன்று ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம்களிலும் பிரதி சனி, ஞாயிறு தோறும் வேலைக்கு செல்ல வேண்டும். இங்கு பொது மக்களிடம் வேலை வாங்கும் பணியில் முன்னிற்பவன் பண்டார. இவன் அடிமைகளிடம் வேலை வாங்குவதைப்போலவே வேலை வாங்குகிறானாம். சில வேளைகளில் அடிப்பதும் உண்டாம். 'நான் தான் பண்டார. யாரிடம் போய் சொல்லவேண்டுமானாலும் சொல்லுங்கள்' என்று கூறுவானாம்.

ஜூன் 02. அன்று கறுவாக்கேணியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மீது புலிகள் தாக்கியதைத் தொடர்ந்து பொலிசார் எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். கறுவாக்கேணியில் இருந்து 1 1/2கி.மீ. தூரத்திலுள்ள புதுக்குடியிருப்பில் அது விழுந்து எஸ். சோதிமணி என்பவர் இறந்துள்ளார். இவரது தாய் எஸ் பொன்னம்மா (55) சகோதரன் எஸ். யோகநாதன் (22) இருவரும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். தங்கராசா (24), முத்துமாதவன் சௌந்தரராஜா (24), தர்மரெத்தினம் (45), முகைதீன் பாவா (36), இராஜேஸ்வரி (20), சுபைர் (40), ரம்ஷியா (18), கௌசலா (7) ஆகியோரும் இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். இங்கு 50 வீடுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் தரவுகள் குறிப்பிடுகின்றன.

### பெண்களுக்குத் தீராததொல்லை

கிரானில் உள்ள துறையடி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இரவு நேரங்களில் முகாமை அண்டிய பகுதிகளுக்குச் சென்று வீடுகளில் உள்ள பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முனைகின்றனர்.

கடந்த ஜூன் 03. கிறவல் குழி, செட்டிக்குடியிருப்பு பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் இப்பகுதி பெண்களிடம் பாலியல் வல்லுறவு கொள்ள முனைந்தபோது, இப் பெண்களின் கணவன்மார் தடுத்ததன் காரணமாக அவர்களை நையப் புடைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

### பாடசாலை மீதும் ஷெல் வீச்சு

ஜூன் 04. அன்று வாழைச்சேனை துறைமுக இராணுவ முகாமில் இருந்து நாசிவன் தீவை நோக்கி வீசப்பட்ட எறிகணைகள் நாசிவன் தீவு பாடசாலையில் விழுந்து பா. சுரேஸ்குமார் (9), கை. சுலோசனா (7), த. தினேஸ் (12), த. நிர்மல் (10), த. ஜெயரூபன் (12), நி. தனுஜா (3) ஆகிய மாணவர்கள் காயமடைந்துள்ளனர். தம்பிமுத்து அன்னபாக்கியம் (25) என்பவர் இச்சம்பவத்தில் இறந்துள்ளார். அத்தோடு வீடு ஒன்றிலும் எறிகணை விழுந்ததால் க. சரஸ்வதி (22), க. செல்லத்தம்பி (60) ஆகியோர் காயமடைந்ததுடன் வீடும் முற்றாக சேதமடைந்துள்ளது. இதே தினத்தன்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து சென்ற துப்பாக்கிவேட்டு வீதியில் சென்று கொண்டிருந்த சி. சண்முகராஜா (37) என்பவரை துளைத்து காயப்படுத்தியது. ஜூன் 9ம்திகதி வாழைச்சேனை காகிதாலை முகாமில் இருந்து ஏவப்பட்ட 'ஷெல்', கிரானுக்கு மேற்கே உள்ள வட்டி மோட்டமடு என்னுமிடத்தில் விழுந்து க. செல்லமுத்து (50), ப. தவமணி (17), க. கவிதன் (10) ஆகியோர் காயமடைந்துள்ளனர். தற்பொழுது கவிதனின் கால்கள் கழற்ற வேண்டிய நிலையில் உள்ளன. இதே தினத்தன்று வாழைச்சேனை பொலிஸ் காவலரணில் இருந்து பி.ப.5.30மணியளவில் ஏவப்பட்ட எறிகணை 'வினாயகபுர' அகதிமுகாமுக்குள் விழுந்ததால், தா. பிரேமாவதி (15) உடல் சிதறி மரணமானார். இச்சம்பவத்தில் செல்லமுத்து (60), தவமணி (17), அருளம்மா (30), மேகலா (17), பொன்னம்பலம் (9), கோமதி (34), தர்சினி (12) என்பவர்கள் படுகாயங்களுக்குள்ளானார்கள். வாழைச்சேனை பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் இருந்து சென்ற துப்பாக்கி வேட்டால் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த எஸ். தேவி என்பவர் இறந்துள்ளார். இதே 9ம்திகதி கிண்ணியடியில் நடந்த இராணுவத்தின் துப்பாக்கி வேட்டில் டி. கவிதரன் (10) என்ற மாணவன் இறந்துள்ளான்.

இவ்வாறாக படையினரின் துப்பாக்கி வேட்டுக்களுக்கும் எறிகணை தாக்குதல்களுக்கும் தினமும் இப் பகுதியில் பலர் பலியாகிக்கொண்டிருக்கின்றனர். இதேவேளை கடந்த மாதம் அம்பாறை மத்திய முகாமில் பாலியல் வல்லுறவு கொண்டு கைக்குண்டு வைத்துக்கொல்லப்பட்ட கோணேஸ்வரியின் மரணம் ஷெல் விழுந்ததால் ஏற்பட்ட மரணம் என ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தெரிவித்திருந்தது. இந்த அறிக்கையில் கோணேஸ்வரியின் உறவினர்களின் வாக்குமூலத்தின் படி இம்மரணம் ஷெல் அடியினால் ஏற்பட்ட மரணம் என உறுதிப்படுத்தினர். ஆனால் ஆணைகுழுவினரிடம் உறவினரின் வாக்குமூலம், வெடிச்சத்தம் கேட்ட போது நாங்கள் வந்து பார்த்தோம். அங்கே கோணேஸ்வரியின் உடல் சிதறி இரத்தவெள்ளத்தில் கிடந்தது என்பது தான். உண்மையில் கோணேஸ்வரியின் மரணம் ஷெல் அடியினால் தான் ஏற்பட்டதென்றால், இவருடன் இருந்த மூன்று வயது கைக்குழந்தை எவ்வாறு தப்பியது. குறிப்பாக கோணேஸ்வரியின் உடலில் வயிற்றுப்பகுதியில் இருந்து தொடை பகுதிவரைக்குமே சிதறியிருக்கிறது. 7'X10' கொண்ட குடிசையினுள் ஷெல் உள்ளுக்குள் நுழைந்ததற்கான எந்த விதமான ஆதாரமும் இல்லை. இந்த நிலையில் கோணேஸ்வரியின் மரணம் ஷெல்லினால் ஏற்பட்டதென்று அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. இச்சம்பவம் முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் புதைப்பது போலல்லவா இருக்கிறது.

---

**''நானும் ஒரு பெண்''**

**விமர்சனமும், கலந்துரையாடலும்**

*பாரதி வெளியீட்டகத்தின் 'நானும் ஒரு பெண்' - சரிநிகர் பெண்கள் தொடர் பான கட்டுரைகளின் தொகுப்பு நூல் பற்றிய விமர்சனக் கலந்துரையாடல்*

**இடம்:**

இராமகிருஷ்ண கருத்தரங்க மண்டபம்

வெள்ளவத்தை.

**காலம்**

29.06.1997

ஞாயிற்றுக்கிழமை

மாலை 4.30மணிக்கு

அனைவரையும்

---

**'சூழலியல்'**

**'மாற்று' அமைப்பின் நான்காவது கருத்தரங்கு**

கருத்துரைப்பவர்கள்:

**எஸ். அன்ரனி நோபட்**

*(கொழும்பு பல்கலைக்கழகம்)*

**எஸ். சர்வேஸ்வரன்**

*(கொழும்பு பல்கலைக்கழகம்)*

**இடம்**

கொழும்பு தமிழ்ச் சங்கம்

ருத்ரா மாவத்தை,

வெள்ளவத்தை.

**காலம்:**

20.06.1997

வெள்ளிமாலை 4.30க்கு

அனைவரையும் அன்புடன்

---

**23 இலக்கியச் சந்திப்பு மலர் வெளியீடு**

ஐரோப்பிய இலக்கிய ஆர்வலர்களால் நடாத்தப்படும் 23வது இலக்கியச் சந்திப்பையொட்டிய மலர் வெளியீட்டுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

இலக்கிய ஆய்வுகள், பெண்ணியம், தலித்தியம், தத்துவம், அரசியல், விஞ்ஞானம், சூழலியல், நாடகம், சினிமா, ஓவியம் சம்பந்தமான ஆக்கங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30ம்திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள்.

S. Pushparajah
7, Rue Racine,
95140 Garges les
Gonesses,
France.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்